தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்

(விளக்கவுரைகளுடன்)

விளக்கம்:

வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

விக்டோரியா அச்சகம்
மாயூரம்.

தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்

8283

8283

விளக்கம்:

வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர்,
தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

விக்டோரியா அச்சகம், மாயூரம்.

முதற் பதிப்பு 1957.

82

THE MADURA TAMIL SANGAM

விலை ரூ. 2·50

V44l3:72(Q:45)
57

முகவுரை

தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள் என்னும் இந்நூல் வித்துவான் கல்வெட்டுப் பாடப் பகுதிக்கு விளக்க மாக வெளிவருகிறது திருக்கோயில் கல்வெட்டுக்கள் பெரும் பாலும் அரசியலாரால் படிஎடுக்கப்பட்டு வெளியிடப் பெற் றுள்ளன. அவை அனைத்தும் வெளிவருமாயின் தமிழக வரலாற்றின் உண்மை விளக்கம் புலப்படும்.

இந்நூலில் உள்ள 30 கல்வெட்டுகள் பல்லவ பாண்டிய சோழர்காலச் சமயப்பற்றை விளக்குகின்றன. மெய்க்கீர்த்தி கள் அரசனது போர்ச் செய்திகளைத் தெரிவிப்பன. இந்நூலில் உள்ள மெய்க்கீர்த்திகளும், கல்வெட்டுப் பகுதிகளும் அரசியலார் கல்வெட்டுக்களைப் பார்த்துப் படிக்கும் முறையில் திருத்தப் பெற்றுள்ளன. இது என் முதல் முயற்சி. விரைந்து வெளியிடும் விருப்பத்தால் வெளியிடப்படாத குறிப்புக்கள் பலஉள இந்நூல் வித்துவான் நிறைநிலை மாணவர்கட்குக் கல்வெட்டுத் துணையாக இருக்குமென்று நம்புகிறேன் கல் வெட்டுகளில் புலமை யுடைய பல அறிஞர் கருத்துக்கள் இந் நூலை வெளியிடப் பெரிதும் துணைபுரிந்தன. இந் நூலிற்கு அணிந்துரை வழங்கிய எங்கள் கல்லூரி முதல்வர் புலவர், **திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கட்கு** என் நன்றி உரித்தாகுக.

இந்நூலை உடனிருந்து எழுதி யுதவிய எனது அருமை மாணவர்கள் **S. N. பரமேஸ்வரன், V. நாராயணன், K. வைத்தியநாதசுவாமி** (நிறைநிலை) ஆகியோர்க்கு என் நல் வாழ்த்துக்கள். இந்நூல் வெளியீட்டிற்கு உடனிருந்து ஊக்கம் காட்டி ஒப்புநோக்குதல் செய்த வித்துவான் **திரு. வை. கல்யாணசுந்தரம் அவர்கட்கும்**, இந்நூலைக் குறுகியகாலத்தில் அச்சிட்டு உதவிய விக்டோரியா அச்சகத்தார்க்கும் என் நன்றி உரித்தாகுக.

பல்கலைக்கல்லூரி,
தருமபுர ஆதீனம்.
24—10—57.

இன்னணம்,
வி. சா. குருசாமி,
தமிழ்ப்பேராசிரியர்.

மெய்க்கீர்த்தி

சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்,
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்,
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி.

(பன்னிரு பாட்டியல்)

''தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியால்
எழிலரசர் செய்தி இசைப்பர்''

(வெண்பாப் பாட்டியல்)

''சொற்சீ ரடியால் தொழிற்படு புகழை
வேந்தன்பாற் கூறின் மெய்க்கீர்த்தி யாகும்''

(இலக்கண விளக்கப் பாட்டியல்)

அணிந்துரை

"தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்" என்னும் பெயரிய இந்நூல், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான்; திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களால் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்விற்குச் செல்லும் மாணாக்கர்களுக்குப் பயன்படற் பொருட்டு எழுதப்பட்டது.

இது மிக்க விளக்கத்துடன் புதிய முறையில் திருந்திய பதிப்பாதலை, வாங்கிக் கற்போர் தெள்ளிதின் அறிவர்.

கல்லெழுத்துக்களின் பயன்கள் எண்ணில்லாதன எனல் பொதுவான உண்மை. இந்நூல் தன்னளவில் அவற்றை முழுதும் அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சமயப் பற்றும் ஞானமும் குறைந்துவரும் இந்நாளில், அந்நாளில் அவை எவ்வளவு மிக்கிருந்தன?, எவ்வாறு அவை பயன் அளித்தன?, அரசர், செல்வர், தொண்டர் முதலியோர் திருக்கோயில்களுக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் உரியனவாகச் செய்தவை யாவை?, இன்னோரன்ன பல உண்மைகளை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது புகழ்த்துணை விசயராயன், உலக பெருமானார், அருள்நிதிகலியன், கண்ணன் ஆரூரன், அரிகேசரி பராக்கிரம பாண்டியன் முதலோர் செய்தவற்றை இக்காலத்தவர் உணர்ந்தால், அவர்போலத் தாமும் செய்து நலம்பெற விழைவர் என்பது திண்ணம்.

கடவுட் பற்றில்லாதாரும் இவற்றைக் கற்று, பழைய நாகரிகம், ஆட்சிமுறை, உலகியல், மக்கள் மனநலம், சொல்லாட்சி, பொருளாராய்ச்சி, அறங்காவல், கொடை,

கொடுத்ததைப்போற்றும் நெறி முதலிய பலவற்றை நன்குணர் தற்கு இந்நூல் பெரிதும் உதவும். அதனல் இது பொது மக்கட்கும் உரியதாயிற்று.

இதனை எழுதி உலகிற்கு வழங்கும் புலவர் எனக்குப் பல்லாண்டுகளாகத் தெரிந்த துணைவர். இவ்வாதீனத்திலே திருமுறை இசையிலும் பயின்று கல்லூரியிற்கற்று முதல் வகுப்பில் தேர்ந்தவர். அடக்கமும், அன்பும், ஆற்றலும் மிகுந்தவர். மாணுக்கர் உள்ளம் தெளியக் கற்பிக்கும் நல்லாசிரியர். அவர்தம் அனுபவ ஞானத்தினைத் துணைகொண்டு எழுதிய இந்நூல் எல்லோராலும் மிகப் பாராட்டப்பெறும் என்பது என் கருத்து. உலகம் இதனை ஏற்றுப் போற்றுக.

இங்ஙனம்,

பல்கலைக் கல்லூரி,
தருமபுர ஆதீனம்.

முத்து சு. மாணிக்க வாசக முதலியார்,
பிரின்ஸிபால்.

பொருளடக்கம்

எண்	பெயர்	பக்கம்
1.	புகழ்த்துணை விசயராயன் தர்மம் ...	1
2.	உலகபெருமானார் திருவிளக்கு ...	6
3.	நரசிங்கமங்கலத்துச் சபையோர் சாசனம் ...	8
4.	பார்த்திவேந்திராதிவர்மன் சாசனம் ...	14
5.	தென்னவன் மூவேந்த வேளான் சாசனம் 1 ...	21
6.	இராசராசக் கிணறு ...	33
7.	இராசாசிரயபுரத்து நகரத்தார் தேவதானம் ...	41
6.	திருப்பதியம் ...	46
9.	குந்தவையார் சாசனம் ...	53
10.	தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 2 ...	64
11.	தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 3 ...	65
12.	தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 4 ...	69
13.	சாமுண்டப்பை நிபந்தம் ...	71
14.	ஆசார்ய போகம் ...	78
15.	மணிமங்கலம் சபையோர் சாசனம் 1 ...	86
16.	அமண்பாக்கம் சாசனம் ...	96
17.	மணிமங்கலம் சபையோர் சாசனம் 2 ...	106
18.	குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி ...	122
19.	வில்லவராயன் சாசனம் ...	131
20.	காணிக்காரளவு உரிமைச்சாசனம் ...	139
21.	விக்கிரமசோழன் தில்லைத் திருப்பணிகள் ...	145
22.	மணிமங்கலத்துப்பெருமாள்கோயில் சாசனம் ...	152
23.	நக்கன் செட்டி தர்மம் ...	154
24.	புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டு எண் 246	156
25.	இறை இலேசு சாசனம் ...	161
26.	கல்வாயில் நாடாழ்வான் இசைவுச் சாசனம் ...	167
27.	அரிகேசரிதேவர் சாசனம் ...	171
28.	தென்காசித் திருப்பணிக் கல்வெட்டுப் பாடல்கள்	186
29.	பராக்கிரம பாண்டியதேவர் சாசனம் ...	196
30.	திருவகத்தீஸ்வரமுடையார் தேவதான இசைவுச் சாசனம் ...	199

திருத்திப் படிக்க

பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
10	11	இவன் து	இவனது
27	25	சுவடுகளே	சுவடிகளே
36	25	விளேவித்	விளேவித்துக்
43	15	பொலி	போலி
45	7	Langifolia	Longifolia
58	4	கழுஞ்சேய்	கழுஞ்சே
73	9	யாண்டு உ0	யாண்டு 0உ
76	11	இரட்பாடி	இரட்டபாடி
,,	22	நாமணேக்கோணே	நாமணேக்கோணம்
86	2	மனிமங்கலம்	மணிமங்கலம்
90	21	வட்டிச்கு	வட்டிக்கு
94	20	மதிசூதனன்	மதுசூதனன்
108	22	கொண்டாற்றிறவர்	கொண்டாற்றுறவிற்
112	10	ஈவுனி	ஈவுணி
117	7	இருக்கும்	உள்ளது
,,	16	திாயகத்தை	தியாகத்தை
119	32	ன்செறனன்	சென்றனன்
140	•17	உரிமையொடும்	உமையொடும்
143	28	சோழர்	சோழர் வரலாறு
145	4	தங்கியுள்ளான்	தங்கியுள்ளாள்
147	31	அரணியல்	அரணிய
155	21	உள்ளன்	உள்ளது
160	5	பெபராக	பெயராக
171	10	இதைபல	இதைப்பல
173	17	திருபரிவட்டப்	திருப்பரிவட்டம்
178	17	அறநெறிபின்	அறநெறிநிற்பின்
183	6	நாராயண ஸ்ரீபாதங்கள்	நாராயண ஸ்ரீபாதங்கள் மடம்
190	12	செம்பொனமபலத்தொ	செம்பொனம்பலத்தோ
,,	7	விஞ்சனங்களுங்கு	வெஞ்சனங்களுக்கு
,,	12	இடுவெஞகவும்	இடுவேஞகவும்
,,	18	கொடுத்தென	கொடுத்தேன்

தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்

கல்வெட்டு - 1

புகழ்த்துணை விசயராயன் தர்மம்.

ஸ்வஸ்திஸ்ரீ பல்லவ குலதிலத பாரத்வாஜ கோத்ராலங்கார பதியாகிய ஸ்ரீ தந்திவர்ம மகாராஜர்க்கு வர்ஷவர்த்தனம் யாண்டு பன்னிரண்டாவது; திருவல்லிக்கேணி குலங்கிழார்கள் கருமாரச்சேரிப்புலம் ஒற்றியிட்டு, நாற்பத்தைங்காடி நெல் பொலியூட்ட, திருவடிகட்குத் திருவமிர்து முட்ட, புகழ்த்துணை விசயராயன் முப்பதின்காடி நெல்லும் ஐங்கழஞ்சு பொன்னும் குடுத்து மீட்டுத் தனதாக்கி, நாற்பத்தைங்காடியும் நிசதி ஐஞ்ஞாழி நெல்லால் இருநாழித் தூக்குத்தல் அரிசியால் இராப்போனகம் ஐங்கசர்மனும் சட்டி சர்மனும் இளையசட்டி சர்மனும் காட்டுவார் ஆனார்கள். முட்டில், அவிப்புலத்தும் தத்தன் புலத்தும் காரைக் கிழான் புலத்தும் சுவாமி போகத்துத் திருவமிர்து காட்டுவோமானோம். இத்தர்மத்துள்ளார் யாவரேனும் கோச்செய்வது செய்து செலுத்த ஒட்டிக் குடுத்தோம். ஈழ விளக்கும் வட்டிலோகப் பானையும் ரக்ஷிப்பது. புகழ்த் துணை விசயராயன் தர்மமிது. இதனை ரக்ஷித்தார் அடி இரண்டும் என் முடிமேலின. ஸ்வஸ்தி.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் கர்ப்பக்கிருகத்தின் வாயிலில் உள்ள கல்லில் வெட்டப்பட்டுள்ளது.*

அரசன்:- தந்திவர்ம பல்லவன். (கி. பி. 775 - 825)

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- தந்திவர்ம பல்லவன் ஆட்சியேற்ற பன்னிரண்டாவது (12) ஆண்டு. கி. பி. 787.

அரசனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பு:- இவன் இரண்டாம் நந்திவர்மனுக்கு இராட்டிரகூடப் பெண்ணாகிய ரேவா என்பவளிடத்தில் பிறந்தவன். இராட்டிரகூடத் தந்திதுர்க்கன் வைரமேகன் என்பானின் மகள் வயிற்றுப் பேரனாகையால் இவன் தந்திவர்மன் எனப்பட்டான். பாட்டனைப் போலவே வைரமேகன் என்னும் பெயரும் இவனுக்குரியதாக வழங்கியது. இவனுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பட்டயங்களும் கல்வெட்டுக்களும் திருச்சிராப்பள்ளியிலிருந்து திருச்சானூர் வரை பரவி இருந்தன. இவனைத் திருமாலின் அவதாரம் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் கதம்பர் மரபிற் சிறந்த அரசன் ஒருவன் மகளான "அக்கள நிம்மதி" என்பாளை மணந்துகொண்டான் என்று பட்டயங்கள் கூறுகின்றன.

இவன் காலத்தில் பல்லவர் பாண்டியர் போர்கள், பல்லவர் இரட்டர் போர்கள் முதலியன நடைபெற்றன. இவன் காஞ்சி பரமேச்சுர விண்ணகரத்திற்குப் பொற்குடம் ஒன்றை அளித்துள்ளான். தந்திவர்மன் தன்னுடைய பட்டப்பெயர்களால் பல ஏரிகளையும் கிணறுகளையும் வெட்டியுள்ளான். இவனுக்கு மாற்பிடுகு, வைரமேகன் என்பன பட்டப்பெயர்களாக வழங்கின. இவன் காலத்தில் செஞ்சிக் கோட்டைக்கு அருகிலுள்ள தொண்டூர், உத்தரமல்லூர், கூரம், மலையடிப்பட்டு, திருவல்லிக்கேணி, திருவெள்ளறை, ஆலம்பாக்கம், குடிமல்லம் முதலிய ஊர்களில் வெட்டப்பெற்ற கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவ்வரசன் வைணவ மதத்தைச் சேர்ந்தவனாயினும், மற்ற மதங்களைப் புறக்கணிக்காத மனப்பண்புடையவன். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஆலம்பாக்கத்திற்குத் "தந்திவர்ம மங்கலம்" என்று பெயரிட்டு அங்கு கைலாசநாதர் கோயிலைக் கட்டியுள்ளான். இவன் ஐம்பத்தோராவது ஆட்சியாண்டு

கல்வெட்டு கிடைத்திருப்பதால், இம்மன்னன் 51 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனன் என அறியலாம்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலின் அர்ச்சகர்கள் கருமாரச்சேரி என்னுமிடத்திலுள்ள கோயில் நிலங்களை அடமானம் வைத்து அதற்கு வட்டியாக ஆண்டுதோறும் 45 காடி நெல்லைக் கொடுத்து வந்தனர். ஏனையநிலங்களின் வருமானத்தில் 45 காடி நெல் வட்டிகட்டுவதற்குச் செலவாகியது. அதனால் திருவல்லிக்கேணிப் பெருமானுக்குத் திருவமிர்து படைப்பதற்கு முட்டுப்பாடு ஏற்பட்டது.

புகழ்த்துணை விசயராயன் என்பான் அந்த நிலத்தை 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும் கொடுத்து மீட்டுத் தன்னுடையதாக்கி அடமானத்தைத்தானேற்றுக்கொண்டான். ஆண்டுதோறும் கோயில்வருவாயிலிருந்து தனக்கு வட்டியாகக் கிடைக்கவேண்டிய 45 காடி நெல்லை, கோயிலுக்குத் தானமாகக் கொடுத்து, அதில் நாளொன்றுக்கு 5 நாழி நெல்லைக் குத்துவதால் கிடைக்கின்ற 2 நாழி அரிசியால் பார்த்தசாரதிப் பெருமானுக்கு இராப்போனகத் திருவமிர்து செய்விக்கும்படி இச்சாசனம் எழுதினான்.

1440 நாழி நெல் (45 × 32) நாளொன்றுக்கு 5 நாழி வீதம் 288 நாட்களுக்கே வரும். ஏனைய 72 நாட்களுக்கும் ஐங்கசர்மண், சட்டிசர்மன், இளைய சட்டிசர்மன் ஆகியோர் திருவமிர்துக்கு 360 நாழி நெல் தருவதாக ஒத்துக்கொண்டனர். அதுவும் முட்டுப்பட்டால் அவிப்புலம் தத்தன்புலம் காரைக்கிழான் புலம் ஆகிய திருக்கோயில் நிலங்களிலிருந்து கிடைக்கும் நெல்லை திருவமிர்துக்கு உரியதாக்குவோம் என்பது இக்கல்வெட்டின் குறிக்கோளாகும்.

இத் தர்மத்தைச் செய்வோர் கோயிலிலுள்ள பொன்விளக்கு நிவேதனத் தட்டு, வெண்கலப்பானை இவற்றையும் காத்து வருவார்களாக. இத் தர்மத்தைச் செய்தவன் புகழ்த்துணை விசயராயன் என்னும் அரசியல் அதிகாரி.

குறிப்பு:- கருமாரச்சேரிப் புலத்தை ஒற்றிவைத்துக் குலங்கிழார் கோயில் செலவுக்காக வாங்கிய பொருள் 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும் சரி மதிப்புடைய பொருளாகும். அதை விசயர்ராயன் அடமானத்தையேற்றுக்கொண்டு பொருள் உதவியோர்க்குக் கொடுத்து நிலத்தைத் தன்பேரில் மாற்றிக் கொண்டான் (Made over). விசயர்ராயன் செய்த தர்மம் என்னவென்றுல் தான்கொடுத்த பொருளுக்கு வட்டி வாங்கிக்கொள்ளவில்லை. வட்டியாகத் தனக்குச் சேரவேண்டிய 45 காடி நெல்லைக் கோயில் தர்மத்துக்கே செலவிட்டான் என்பது கல்வெட்டிலிருந்து நாமறிந்துகொள்ளும் செய்தி ஆகும்.

பொருள் விளக்கம்:-

ஸ்வஸ்தி ஸ்ரீ - மங்களம் உண்டாகுக.

பல்லவகுலதிலத - பல்லவ குலத்திற்கு நெற்றிப்பொட்டுப் போன்றவனுகிய.

பாரத்வாஜ கோத்ராலங்காரபதி - பாரத்வாஜர் கோத்திரத்தார்க்கு அணியாக விளங்கும் தலைவன். பாரத்வாஜர் என்ற முனிவர் மரபினரைச் சேர்ந்தவர் பல்லவர். பல்லவர் தம்மைப் 'பாரத்வாஜ கோத்திரத்தார்' என்று கூறிக்கொள்வது கட்டுக்கதை என்றும் பல்லவர் சத்திரியரே என்றும் டாக்டர், மா. இராசமாணிக்கனுர் கூறுவர்.

வர்ஷவர்த்தனம் - ஆட்சியாண்டின் வளர்ச்சி.

குலங்கிழார் - கோவிலதிகாரி அல்லது அர்ச்சகர்.

புலம் - நிலம்

ஒற்றியிட்டு - அடமானம் வைத்து

பொலியூட்ட - வட்டி செலுத்த.

முட்ட - தடை ஏற்பட.

திருவடிகட்கு - திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி சுவாமிக்கு.

காடி - 4 குறுணி.

32 நாழி (படி) - 1 காடி.

1 காடி - 4 குறுணி.

1 குறுணி - 8 படி.

நிசதி - நாள்தோறும்.

இராப் போனகம் - இரவு உணவு (நிவேதனம்)

தூக்குத்தல் அரிசி - தூய்மையான கைக்குத்தல் அரிசி.

கழஞ்சு - இது எடுத்தல் அளவைப் பெயர். $1\frac{1}{4}$ வராகன் எடைகொண்டது. விலைமதிப்புள்ள பொருள்கள் இவ் அளவை யால் நிறுக்கப்பெறும். 20 மஞ்சாடி அல்லது $\frac{1}{6}$ அவுன்ஸ்எடை கழஞ்சு ஆகும். பன்னிரண்டு பண எடையும் கழஞ்சு எனப் படும். "தொடிப் புழுதிகஃசா உணக்கின்" என்ற திருக்குறளில் இக்கழஞ்சு 'கஃசு' என்ற பொருளில் வழங்கப்பெறுகிறது. பொன் என்ற பொருளிலும் இச்சொல் பயிலப்பெறுகிறது.

சுவாமி போகத்து - திருக்கோயில் நிலங்களால்.

அவிப்புலம் - இறைவனுக்கு நிவேதனம் செய்வதற்காக ஒதுக்கிய நிலம். (Oblation field) 'அவி' உணவு என்ற பொரு ளில் இலக்கியங்களில் பயின்றுவருதல் காண்க.

கோச்செய்வது செய்து - அரசன் இட்ட கட்டளைப்படி நடந்து.

ஒட்டிக் குடுத்தோம் - ஏற்பாடு செய்து எழுதிக்கொடுத் தோம்.

ஈழவிளக்கு - பொன் விளக்கு. (ஈழம் - பொன்)

வட்டில் - வெண்கல நிவேதனத் தட்டு.

உலோகப் பானை - வெண்கலப்பானை (இது நிவேதனம் சமைத்தற்குரியது)

ரக்ஷிப்பது - பாதுகாப்பது.

அடி இரண்டும் முடிமேலின - திருவடிகள் இரண்டும் என் தலைமேலனவாகுக. இது காப்புரை.

கல்வெட்டு - 2

உலகபெருமானுர் திருவிளக்கு

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசையதந்திவிக்கிரமற்கு யாண்டு அம்பத்தொன்ருவது திருவேங்கடக் கோட்டத்துக் குடவூர் நாட்டுத் திருச்சொகினூர்த் திருவேங்கடத்து எம்பெருமா னடிகளுக்கு எழுந்தருளுவித்த திருவிளங்கோயில் பெருமா னடிகளுக்குச் சோழநாட்டுச் சோழனுர் உலகபெருமானுர் வைத்த திருவிளக்கு முதல் முப்பதின் கழஞ்சு. இம் முதலுக் காகக் கருக்கிபட்டி இப்பொன்னுக்குக் கொண்டு குடுத்துத் திருவிளக்கு வைப்பித்தோம்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *சித்தூர் ஜில்லா சந்திரகிரி தாலூகா திருச்சானூரில் உள்ள பத்மாவதியம்மன் கோயில் வாயில் தளத்திலுள்ள ஒரு கல்லில் வெட்டப்பட்டுள்ளது.*

அரசன்:- *விஜயதந்தி விக்கிரம வர்ம பல்லவன். (கி. பி. 775 - 825)*

காலம்:- *இம்மன்னன் அரியணை ஏறிய 51 ஆவது ஆண்டு. கி. பி. 826.*

அரசனைப்பற்றிய குறிப்பு:- *இவன் முதற் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற பல்லவ அரசனே யாவன். தந்திவர்மனுக்குக் 'கோவிசயன்' 'விக்கிரமன்' என்ற அடைமொழிகள் இருந்தன என்று தெரிகிறது.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *திருவேங்கடத்தைச்சார்ந்த திருச்சானூர்த் திரு இளங்கோயில் பெருமானுக்கு பல்லவ வேந்தனுகிய தந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டுச் சோழனுர் உலகபெருமானுர் என்பவர் திருவிளக்கு*

வைத்து அதற்கு முதற்பொருளாக 30 கழஞ்சு பொன்கொடுத்தார். இதனைக்கொண்டு கோயில் சபையார் கருக்கிபட்டி என்னும் இடத்தில் நிலம் வாங்கித் திருவிளக்கு வைப்பதற்காகக் கொடுத்தனர்,

பொருள் விளக்கம்:-

திருவேங்கடக்கோட்டம்;- தொண்டை மண்டலம் அக்காலத்தில் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அக்கோட்டங்களுள் இதுவு மொன்று.

குடவூர் நாடு - திருவேங்கடக் கோட்டத்தில் அடங்கியநாடு.

கோட்டம் - மாவட்டத்திற்கு ஒப்பாகும். நாடு அல்லது கூற்றம் தாலூகாவிற்கு ஒப்பாகும்.

திருச்சொகினூர்:- திருச்சானூர் அல்லது சிறுத்தானூர் என்று வழங்கப்படும் ஊராகும்.

எம்பெருமானடிகள்:- இறைவன்.

இளங்கோயில்:- பழைய கோயிலைப் புதுப்பிக்குங்கால் அக்கோயில் புதுப்பிக்கும்வரை அதனருகிலேயே ஒரு சிறு கோயில் கட்டி அதில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபாடு செய்வர். அக்கோயில் இளங்கோயில் எனப்படும். இதனையே வடமொழியில் 'பாலாலயம்' என்பர். திருமீயச்சூரிலுள்ள கோயில் இளங்கோயில் என வழங்கப்படுகிறது.

உலகபெருமானார்:- சோழநாடு பல்லவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் கி. பி. 8-ம் நூற்றுண்டின் இறுதியிலும் 9-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் சோழநாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சோழக் குறுநில மன்னர் ஆவர்.

கருக்கிபட்டி:- நிலம் உள்ள இடத்தின் பெயர்,

முதல் - முதற் பொருள்,

கல்வெட்டு - 3

நரசிங்க மங்கலத்துச் சபையோர் சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு முப்பத்து மூன்றுவது; இவ்வாண்டு தேவ தானம் கீழிரணிய முட்டத்துப்படும் பிரமதேயம் நரசிங்க மங்கலத்துச் சபையோம் சோழப் பெருமானடிகளதிகாரிகள் சோழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு மருதூர் மருதூருடையான் அருணிதி கலியனுக்கு ஒட்டிக்குடுத்த பரிசாவது; எங்களூர்த் திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகள் தம்முடைய நிலத்தால் சபையோமுக்கு ஆண்டெடுத்து இடக் கடவ ஈழக்காசு பதினெட்டு. இக்காசு பதினெட்டிலும் முன்றத் தொன்று ஈழக்காசு ஆறு. இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைவழி குடுத்த ஈழக்காசு பதினைந்து. பதினைஞ்சினுலும்வந்த பலிசையாவது ஈழக் காசின் வாய்த் திங்கள் காற்புத்தக்கமாக ஒரோ திங்களால் வந்த புத்தக்கம் மூன்றே முக்கால். மூன்றே முக்காலும் ஓராண்டு பந்நிரண்டு திங்களால் வந்த புத்தக்கம் நாற்பத் தைஞ்சு. நாற்பத்தைஞ்சினுலொரு ஈழக்காசுக்குப் புத்தக்கம் ஏழரையாக ஈழக்காசு ஆறு. இவ்வாறு ஈழக்காசும் இறை நீக்கித் தேவர் சபையார்க்கு இடக்கடவ காசு ௰௨. பன்னிரண்டும் நீக்கி அதிகாரிகள் மருதூருடையான் அருணிதிகலியன் இறைகாவலாகக் காத்த காசினுல் வந்த நிலன் ஊருடையான் குளமான கலியனேரியும், இக்குளந் தான் வேண்டுமாறு கல்லிக் கரைநீளம் அட்டப்பெறுவதாக வும்; இக்குளங்கரை உசர அட்டப்பெறுவதாகவும், இக் குளத்துநீர்தான் வேண்டுமளவும் கொக்கப் பெறுவதாகவும், இக்குளம் இதன்கீழ் நீர் நிலனிருவேலியும் மருதூருடையான்

அருணிதி கலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின்கீழ் நீர் நிலனிருவேலியினுல் வந்த போகம் அஞ்ஞாழிக் காலால் நெல்லு ௩௱ கலம். இவையிற்றின் பாதி ௱௫௰ நெல்லுங் கொண்டு இவர்க்கு மூன்று சந்தியும் திருவமிர்து செய்வ தாகவும், நின்ற ௱௫௰ நெல்லுங்கொண்டு திருவமிர்து உத்தம அக்கிரமாகத் தேவர் அமிர்து செய்யும்பொழுது வேதப் பிராமணர் நிசதம் அய்வர் அமிது செய்வதாகவும், வைச்சபடி பத்தெட்டுக் குத்தல் ஒருவனுக்கு அரிசி இருநாழியும், கறி மூன்றும், தயிர் நாழியும், நெய் இருசெவிடும், காய் இலை இரண்டும், தாலமஞ்சும், வட்டிலைஞ்சும், ஒட்டுட்டி ஒன்றும், சட்டுவம் ஒன்று அடுவானொருவனுக்கு நிசதி நெல்லு அஞ் ஞாழி அறுதிங்களொரு புடவை வைச்சு; இப்பரிசு இக்கலம் முட்டுவதாக இவ்வாட்டை கற்கடக நாயிற்று வெள்ளிக் கிழமை பெற்ற ஆயில்யத்தினுன்று சூரியக் கிரணவேலை குறை கிராணம் பற்றின அன்று முதலாக இக்கலம் இப்பரிசெய் ஊட்டுவதாக நின்று சிறிகாறிய மாராய்கின்ற திருவாய்ப்பாடி நாராயணனும் இவ்வூர்ச் சபையாரும் இப் பரிசெய் அக்கிரமுட்டாமெய் சந்திராதித்தவலும் ஊட்டுவிப் போமானேம். திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகளுக்கு சிரிகாரிய மாராய்வானும் சபையோமும் இதில் திரம்பினே மைச் சவையாரும் சிரிகாரிய மாராய்வானும் திறமினான் நிசதி இருகாசு அன்ருள் கோவினுக்குத் தண்டம்பட்டு அக்காசு கொண்டு தேவர்க்குத் திருவிளக்கு எரிவதாகவும், சவையார் திறம்பில் ஆறு காசு தண்டப்படுவதாகவும் ஒட்டிக் குடுத்தோம். சவையோமும் சிரிகாரிய மாராய் வானும் மருதூருடையானருணிதி கலியனுக்கு இத்தண்ட மிறுத்தும் இத்தன்மம் முட்டாமே அய்வரையும் சந்திராதிச்சர் உள்ளளவும் ஊட்டுவிப்போமானேம். சவையும் சிரிகாரியு மாராயும் வயிஷ்ணவரும் இத்தன்மம் ரக்ஷித்தான்.

கல்வெட்டு இருக்குமிடம்:- மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோவிலின் இறையகத்துப் பாறை.

அரசன்:- முதற் பராந்தக சோழன். (கி. பி. 907 - 953)

காலம்:- பராந்தகனின் முப்பத்து மூன்றும் ஆட்சி யாண்டு. (கி. பி. 939)

அரசனைப்பற்றிய குறிப்பு:- இவன் முதலாதித்த சோழனின் புதல்வன். கி. பி. 907-ல் சோழநாட்டுச் சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்டான். சோழமன்னர் ஒவ்வொருவரும் மாறி மாறிப் புனைந்துகொண்ட இராசகேசரி பரகேசரி என்ற பட்டங்களுள் இவன் பரகேசரி என்ற பட்டமுடையவன். இவனது ஆட்சியின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவனை "மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்று கூறுகின்றமையின் கி. பி. 910-ம் ஆண்டில் பாண்டியநாட்டின்மீது படையெடுத்துச் சென்று மதுரையைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. இவன் காலத்தில் நடந்த போர்கள் வாணர்போர், வைதும்பர்போர் முதலியன. இவன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்து அதைப் பொன்னம்பலமாக்கினான். இச் செய்தியை ஆனைமங்கலச் செப்பேடுகளில் காணலாம். இவன் புலவர்களை அன்புடன் ஆதரித்து வந்தமையால் "பண்டித வத்சலன்" என்று பெயர் பெற்றனன். பராந்தகனுக்கு நான்கு புதல்வர்களும் இரு மகளிரும் இருந்தனர். இவன் 46 ஆண்டுகள் அரசாண்டனன். ஏமகர்ப்ப துலாபார தானங்கள் செய்து புகழ்பெற்றவன். இவன் "சிவனது பாததாமரையில் உறையும் வண்டு" என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலதிகாரிகள் ஊர்ச் சபையார்க்குக் கொடுக்க வேண்டிய காசு பதினெட்டு. இதில் மூன்றில் ஒரு பங்கான ஆறு காசினை மருதூருடையான் அருணிதிகலியன்

நீக்குகின்றான். எவ்வாறெனில், மருதூருடையான் தானே பதினைந்து காசினை சபையாரிடம் கொடுத்தான். அப்பதினைந்திற்கும் ஒரு காசுக்கு ஒரு திங்களுக்கு கால் புத்தக்கமாக வந்த வட்டி மூன்றே முக்கால். எனவே ஓராண்டுக்கு நாற்பத்தைந்து புத்தக்கம் ஆகிறது. ஒரு காசுக்கு ஏழரைப் புத்தக்கமாக இக் கல்வெட்டில் கணக்கிடப்படுவதால் நாற்பத்தைந்து புத்தக்கத்திற்கு ஆறு காசு ஆயிற்று. இவ்வாறுகாசினை பதினெட்டில் மூன்றிலொருபங்கான ஆறினுக்குக் கழித்துவிடுகிறான். மீதியாயுள்ள பன்னிரண்டு காசினையும் சபையார் நீக்கி விடுகின்றனர். அருணிதிகலியன் வட்டிக்காக வைத்த பதினைந்து காசினுக்கு வந்தது கலியனேரியாகும். இதன்கீழ் இருவேலி நிலன் வாங்கினான். அதில் 300 கலம் நெல் விளைந்தது. அதில் பாதி, 150 கலத்தை நரசிங்கப் பெருமானடிகளுக்கு மூன்று சந்தியிலும் திருவமிர்து ஊட்டச் செய்தான். மீதியான 150 கலத்தைக்கொண்டு வேதம் சொல்லும் அந்தணர்கள் ஐவர்க்கு திருவமிர்தினுக்காக இருநாழி அரிசி, கறி மூன்று, வெற்றிலைப் பாக்கு இரண்டிரண்டு, தாலம் 5, வட்டில் 5, ஒட்டுட்டி ஒன்று, சட்டுவம் ஒன்று முதலியன கொடுக்குமாறு செய்து அடுவானொருவனுக்கு நாளொன்றுக்கு ஐந்து நாழி நெல்லும் ஆறு திங்களுக்கு ஒரு வேட்டியும் கொடுக்குமாறு செய்தான்.

பொருள் விளக்கம்:-

ஸ்வஸ்திஸ்ரீ - மங்களம் உண்டாகுக.

தேவதானம்:- கோயில்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டு கோயில்களுக்கே சொந்தமாக உள்ள நிலம் அல்லது கிராமம். பெரும்பாலும் கோயில் செலுத்த வேண்டிய வரி ஏதும் இல்லாமல் இருக்கும் இவ்விதம் உள்ளவைகளுள், சிவன்கோயிலுக்குச் சொந்தமானது "திருநாமத்துக்காணி" என்றும் விட்டுணு கோயிலுக்குச் சொந்தமானது "திருவிடையாட்டம்" என்றும் வழங்கப்படும்.

பிரமதேயம் - வேதம் ஓதும் பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள். இவை பிரமதேயச் சிற்றூர்கள் அல்லது நிலங்கள் எனப்படும்.

கீழிரணிய முட்டம்:- இரணிய முட்டம் என்பது மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலை முதலிய இடங்களைத் தன்பாற் கொண்ட ஒரு சிறிய நாடு. இது மேல்இரணிய முட்டம் கீழிரணிய முட்டம் என இரு பிரிவினதாகி வழங்கியது.

சோழப்பெருமானடிகள்:- முதற் பராந்தகசோழன்.

ஈழக்காசு:- பொற்காசு. வாசிபடாமல் செல்லும் காசு என்று L. உலகநாதபிள்ளை கூறுவர்.

பலிசை - வட்டி.

புத்தக்கம் - புதிய அக்கம். காசுக்குக்கீழ் வழங்கும் நாணயத்திற்கு அக்கம் என்று பெயர். 12 அக்கம் ஒரு காசாக சில கல்வெட்டுக்களில் மதிக்கப்படுகிறது. 8 அக்கம் ஒரு காசாகவும் வழங்கப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டில் ஏழரை அக்கம் ஒரு ஈழக்காசு என்று குறிக்கப்பட்டுள்ளது.

இறை காவலாகக் காத்த காசு:- இறைப் பொருளுக்கு முதற் பொருளாய்க் கொடுத்த காசு.

கல்லி - நீர்வரும் பொருட்டு ஆழமாகத் தோண்டி.

கரைநீளம் அட்டப் பெறுவது - கரை நீளமாகச் செய்யப் பெறுவது.

உசர அட்டப்பெறுவது:- உயரமாகச் செய்யப்பெறுவது.

கொக்கப்பெறுவது - நீர்பிடிக்கப்பெறுவது. இது சேர்க்க என்றிருக்கவேண்டும்.

அஞ்ஞாழிக்கால் - மரக்கால் (5 நாழி கொண்டது)

உத்தம அக்ரமாக - சிறந்த முறையில்,

பத்தெட்டு - பன்முறை.

காயிலையிரண்டு - பாக்கு இரண்டு, வெற்றிலை இரண்டு.

வட்டில் - குவளை (Cup)

தாலம் - பெரிய தட்டு.

ஒட்டுட்டி - நீர்வார்க்கும் செம்பு. இரு பாதியாகச் செய்யப் பெற்று ஒட்டுப்பெற்ற பாத்திரமுமாம்.

சட்டுவம் - கரண்டி (Ladle)

புடவை - பண்டைக் காலத்தில் ஆண்கள் உடுத்துக் கொள்ளும் ஆடையைப் புடவை என்று சொல்லுவர். "வெண் புடவை மெய்சூழ்ந்து" (திருநாவுக்கரசு நாயனார் புராணம் பா. 91) என வருதல் காண்க.

கற்கடக ஞாயிறு - ஆடிமாதம்.

அக்கிரமுட்டாமே - தவறில்லாமல்.

குரை கிராணம் - குறை கிரஹணம். நிறை கிரஹணம் என்று பாடம் இருப்பின் சிறக்கும்.

சிரி(ஸ்ரீ)காரியம் - கோயில்வேலை.

திருவாய்ப்பாடி - சண்டேஸ்வரப்பெருமானது தலமாக இருக்கலாம். (திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ளது.

சந்திராதிச்சர் - சந்திராதித்தவல் என்றிருக்கவேண்டும். சந்திர சூரியர் உள்ளவரை.

பொதுக் குறிப்பு

இதிலிருந்து அக்காலத்துக் கோயில் அதிகாரிகள் அறம் வழுவாது கோயில் காரியங்களைக் கண்காணித்து வந்தனர் என்பதும், கண்காணிப்பில் தவறினல் தவறுக்குரிய தண்டமாக ஒரு தொகை செலுத்தவேண்டும் என்பதும், அத்தொகையைக் கோயிலுக்கு விளக்கெரிக்கப் பயன்படுத்தப் பட்டது என்பதும் அறியலாம்.

கல்வெட்டு - 4

பார்த்திவேந்திராதி வர்மன் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ கோபார்த்தி வேந்திராதி பன்மர்க்கு யாண்டு மூன்ருவது, நாள் முப்பத்தொன்பதாவது படுவூர்க் கோட்டத்து காவிரிப் பாக்கமாகிய அமநி நாராயணச் சதுர்வேதி மங்கலத்துள் இவ்வாட்டை சம்வஸ்ஸரவாரியப் பெருமக்களும், தோட்டவாரியப் பெருமக்களும், ஏரிவாரியப் பெருமக்களும், கழநி வாரியப் பெருமக்களும், ஸ்ரீ வட விடநாரணப் பெருமக்களும், பஞ்சவார வாரியப் பெருமக்களும், கணக்கு வாரியப் பெருமக்களும், கலிங்கு வாரியப் பெருமக்களும், தடிவழி வாரியப் பெருமக்களும், பட்டர்களும், விசிட்டர்களும் உள்ளிட்ட மகாசபையும், ஊராள் கின்ற பல்லவன் பிரமதரயனும் கண்காணி அரும்பா கிழானும் இவ்வூர் பெரியதளி அபிஷேக மண்டபத்தே கூடியிருக்க, இத் தானமுடைய சிவப்பிராமணன் மாகண்டநன் பெருமாள் திருக்கரபுரத்துப் பெருமானடிக்கு அர்ச்சனு போகமான தோட்டமும், புலமும், ஆறு உடைத்து மண லிட்டுக் கிடந்ததென்று விண்ணப்பஞ் செய சபையாரும் இவ்வாட்டை கழநி வாரியப் பெருமக்களே இத் திருக் கரபுரத்துப் பெருமானடிகள் அர்ச்சநாபோகமான பூமி மணலிட்டுக் கெட்டுங் கிடந்த பூமியொடு இந்நிலம் கழநி கோலால் ஆயிரத்து நானூறு குழி ஊர்மஞ்சிக்கமான பூமி நோக்கி கல்நட்டு சிலாலேகை செய்து கொள்க என்று சபை திருமுக மருளிச்செய்த திருமுகத்தின்படி கழநிவாரியப் பெரு மக்களோம் திருக்கரபுரத்துப் பெருமானடிகளுக்கு அர்ச்சநா போகம் செய்வதான பூமி இவ்வூர்ப் பிடாகை ஒச்சேரி வட கழநி மஹாத வாய்க்கால் தெற்கு ஊர்மஞ்சிக்கம் ஆய்

வரிசிலத்துக்கிடந்த பூமிக்குக் கீழ்பாற்கெல்லை மாங்காட்டுச் சோமாசி பூமிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஊர்மஞ்சிக்க மாய்க் கிடந்த மேட்டுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை திருப் பன்றீஸ்வரத்து திருமூலட்டானத்து பெருமானடிகள் உத மாதம்பட்டிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மஹாத வாய்க் காலுக்குத் தெற்கும் இந்நால்பால் எல்லையும் உள்ளகப்பட்ட நிலம் கழநி கோலால் நானூறு குழியும் இதன் தெற்கில் ஊர் மஞ்சிகமான மேட்டு சிறுகருகேசுவ கழநி திருநாரண வாய்க்கால் வடசிறகு ஊர்மஞ்சிக்கமாய் வரிசிலத்துகிடந்த பூமி கீழ்ப்பாற்கெல்லை அங்காரை மாதேவ பட்டர் பூமி மேலருகே போன நடைகாலுக்கு மேற்கு தென்பால் எல்லை திருநாரண வாய்க்காலின் வடக்கும் மேல்பால் எல்லை ஐயன் பெருமாள் பூமிக்குக் கிழக்கு வடபாற்கெல்லை முடும்பைப் பொற்கூளி பூமிக்குத் தெற்கும் நாற்பாலெல்லையுளகப்பட்ட நிலம் கழநி கோலால் நானூறு குழியும் இக்கால் தென் சிறகு ஊர் மஞ்சிக்கமாய் வரிசிலத்துக்கிடந்த பூமிக்கு கீழ் பாற் கெல்லை வரிசிரையாய்க் கிடந்த பூமிக்கு மேற்கும் தென் பாற்கெல்லை அவட்டை கிழவங் நிலமான சோமாசி பூமிக்கு இதன் கிழக்கில் குண்டிலுக்கும் வடக்கும் மேல்பாற் கெல்லை எடுக்குப்பட்டிகளும் இகுடி காளய சோமாசி பூமிக் குக் கிழக்கும் காலுக்குத்தெற்கும் நால்பால் எல்லை...யும்ஆக மா நிலம் கழநி கோலால் அறுநூறு குழியும் ஆக ஆயிரத்து நானூறு குழியும் இத்திருக்கர புரத்துப் பெருமானடிகளுக்கு நிசதம் இருநாழி அரிசியால் ஒரு பொழுது திருவமுதுக்கும் மூன்று சந்தியும் ஒரு விளக்கு கொளுத்திக்கொண்டு திரு ஆராதனை செய்வதற்கு மாக சந்திராதித்த காலமும் இறை யிலி அர்ச்சனு போகமாக வைச்சு சிலாலேகை செய்து கல்நட்டுக் குடுத்தோம். சபையார்............கு .... இவ்வாட்டை கழநிவாரிய பெருமக்களோம். இது குறியுள் ளிருந்து பணிகேட்டு சிலாலேகை எழுதினேன். இவ் வாட்டை கழநிவாரிய கணக்கன் மணி மங்கல முடையான்

கங்காதர மாயிலட்டியேன் இவை என் எழுத்து. இது குறியுள்ளிருந்து பணிகேட்டு எழுதினேன் .... கணக்கன் மத்யஸ்தன் வாமன ஏழாயிரவனேன். இது குறியிலிருந்து பணிக்க எழு.................ட்டி குறி...... கல் ....ஆதித்த ஏழாயிரவனேன். இது குறியிலிருந்து பணிகேட்டு எழுதினேன் கணவதியேன். இது குறியுள் ளிருந்து இவ்வாரியப் பெருமக்கள் பணிப்ப எழுதினேன். மத்யஸ்தன் மங்கல ஸேனுபதி ஸ்ரீ...........வன் ஏழாயிர நிலையலங்கன் கற்பகாதித்தனேன். இது குறியுள்ளிருந்து இவ்வாரிகப் பெருமக்கள் பணிப்ப ....மத்யஸ்தன்...... குறியுள்ளிருந்து இவ் வாரிக பெருமக்கள் பணிக்க எழுதி னேன். மத்யஸ்தன் எட்டிக்.........க்குறி ஸ்ரீ காவிரி மங்கல தேரனேன்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருப்பாற்கடல் என்னும் ஊரிலுள்ள கரபுரீஸ்வரர் கோயிலின் கற்பக் கிருகத்தின் வட புறச் சுவர்.*

அரசன்:- *பார்த்தி வேந்திராதி வர்மன். (கி. பி. 957 - 970)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *மூன்றுவது ஆட்சி யாண்டு முப்பத்தொன்பதாவது நாள். கி. பி. 959)*

அரசனைப்பற்றிய குறிப்பு:- *இரண்டாம் பராந்தகனுகிய சுந்தர சோழன் பொன்மாளிகையில் இறந்த பின்னர் அவன் மூத்த மகனை ஆதித்த கரிகாலன் அரியணை ஏறினன். இவன் தன் தந்தையைக் கொன்ற வீரபாண்டியனை பழிக்குப் பழி வாங்கக் கருதியவன் ஆதலால் தான் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஆண்டிலேயே வீரபாண்டியனேடு போர்செய்து இவன் தலையைக் கொய்தனன். (இக் கருத்து லீடன் சாசனத் தால் அறியப்படும்.) எனவே இவனை வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி வர்மன் எனக் கூறுவர். இவ் வேந்த*

னுடைய கல்வெட்டுக்கள் ஆட்சியாண்டு ஐந்துக்குமேல் காணப் படவில்லை. இவனுக்கு பார்த்திவேந்திர வர்மன் என்று மற்றொரு பெயர் உண்டு. (L. உலகநாத பிள்ளை - முதல் இராச ராச சோழன்)

டாக்டர், மா. இராசமாணிக்கனார் "பார்த்திவேந்திர கரிகாலன்" என்று குறிப்பிடுகிறார்.

திரு. H. கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் பின்கண்டவாறு கூறுகிறார்.

1. ஆதித்த கரிகாலனும் பார்த்திவேந்திர வர்மனும் வீரபாண்டியன் தலைகொண்ட" என்று கூறிக்கொள்ளுகின்றனர். சுந்தர சோழனுடன் போரிட்ட வீரபாண்டியனே இவர்களால் வெல்லப்பட்ட வீரபாண்டியனாதல் வேண்டும்.

2. இவ்விருவரும் பரகேசரி எனப்படுகின்றனர்.

3. ஆதித்த கரிகாலன் கல்லெழுத்துக்கள் மிகச் சிலவே தென்னாட்டில் உள. ஆனால் ஆட்சியாண்டு ஐந்திற்கு மேல் காணப்படவில்லை. பார்த்திவேந்திர வர்மனுடைய கல்வெட்டுக்கள் பல தொண்டை மண்டலம் முழுவதும் உள்ளன. அவை பதின்மூன்றாவது ஆட்சியாண்டுவரை கொடுக்கப்பட்டனவாம். ஆராய்ந்து பார்க்குங்கால் இவ்விருவர் கல்வெட்டுக்களும் இருக்கும் இடங்கள்தான் வேறுபட்டிருக்கின்றன.

4. பார்த்திவேந்திர வர்மன் அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசனாக இருத்தல் கூடும். இவன் 'பரகேசரி கோ இராசமாராயன்' என்று தன்னைக் குறித்துக்கொள்ளுகிறான். மூன்றாவது ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் பார்த்திவேந்தர ஆதித்த வர்மன் என்று கூறப்படுகின்றான். அவனது மனைவியரும் அரசகுடும்பத்தினராகவே குறிக்கப் பெறுகின்றனர். ஆகவே பார்த்திவேந்திர வர்மனும் ஆதித்த கரிகாலனும் ஒருவரே யாதல் கூடும். இளைஞனாக இருக்கும்பொழுதே வீரபாண்டியனுடன் போர் செய்தான். பின்னர் சோழநாட்டு வடபுலத்தைக் காக்கும்

பொறுப்பேற்று தந் தந்தையின் ஆட்சியிலேயே சில வஞ்சகர்களால் கொல்லப்பட்டான்.

T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கீழ்க்கண்டவாறு மொழிகின்றார்:—

பார்த்திவேந்திர வர்மன் ஒரு அரசியலதிகாரி. இவன் தொண்டை நாட்டில் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுடைய பிரதிநிதியாக இருந்து அந்நாட்டை ஆண்ட ஒரு சிற்றரசன். சுந்தரசோழன் காலத்தில் நடந்த பாண்டிநாட்டுப் போரில் பெரும் படையுடன் சென்று போர் நிகழ்த்திய தலைவர்களுள் இவனும் ஒருவன். அப்பொழுது இளைஞனாக இருந்த ஆதித்த கரிகாலன் பெரு வீரத்தோடு போர்புரிந்து வீரபாண்டியனைக் கொன்று வெற்றிமாலை சூடினான். அது பற்றியே அவ்வரசிளங் குமரன் "வீரபாண்டியனைத் தலைகொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்று கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளான். அப்போரில் கலந்துகொண்டிருந்த தலைவர்களாகிய பூதி விக்கிரமகேசரியும், பார்த்திவேந்திர வர்மனும் தாம் வீரபாண்டியனைத் தலைகொண்டவர்கள் என்று தம் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் பாண்டிநாட்டுப் போரில் படைத்தலைமை வகித்து அதனை நடத்திய தலைவர்களாதலின் அங்ஙனம் கூறிக்கொள்வதில் வியப்பொன்றுமில்லை.

கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்:-

தொண்டை மண்டலத்துப் படுவூர்க் கோட்டத்திலுள்ள காவிரிப்பாக்கமாகிய அமனி நாராயணச் சதுர்வேதிமங்கலத்துள் சம்வஸ்ஸர வாரியப் பெருமக்களும், தோட்ட வாரியப் பெருமக்களும், ஏரிவாரியப் பெருமக்களும், கழனி வாரியப் பெருமக்களும், ஸ்ரீவடவீரநாரணப்பெருமக்களும், பஞ்சவார வாரியம், கணக்கு வாரியம் இவற்றின் பெருமக்களும், கலிங்கு வாரியப் பெருமக்களும், தடிவழி வாரியப் பெருமக்களும், பட்டர்களும், சான்றோர்களும், உள்ளிட்ட மகாசபையாரும், ஊரதிகாரியாகிய பல்லவன் பிரம தரயனும் கண்காணி அரும்பா கிழானும் பெரிய

கோயில் அபிடேக மண்டபத்தில் கூடியிருந்தனர். அஞ்ஞான்று திருக்கரபுரக் கோயிலிலுள்ள சிவப்பிராமணன் மாகண்ட நன் பெருமாள் என்பவன் அங்குவந்து திருக்கரபுரத்துப் பெருமானடிகளுக்குச் சொந்தமான தோட்டமும், நிலமும் ஆறுடைத்து மணல் நிரம்பிக்கிடந்தது என்று சபையாரிடம் விண்ணப்பஞ் செய்ய சபையார் ஆராய்ந்து மணலிட்டுக்கெட்டுக்கிடந்த நிலத்தோடு இன்னும் சில நிலங்களும் சேர்த்து ஆயிரத்து நானூறு குழியாக்கி அந்நிலத்திற்குக் கல்நட்டு சிலாலேகை செய்து கொள்க என்று சபை திருமுகமருளிச் செய்த திருமுகத்தின்படி கழநிவாரியப் பெருமக்களும் அவ்வாறே செய்து, அந்நிலத்து வருவாயால் திருக்கரபுரத்து இறைவனுக்கு நாள்தோறும் இருநாழி அரிசியால் ஒரு பொழுது திருவமுது செய்தும், மூன்று சந்தியும் ஒரு விளக்கு வைத்து ஆராதனை செய்தும் வருமாறு ஏற்பாடு செய்தார்கள்.

பொருள் விளக்கம்:-

படுவூர்க்கோட்டம்:- தொண்டை மண்டலத்து 24கோட்டங்களுள் ஒன்றுகும். இப்பொழுது வட ஆர்க்காடு ஜில்லாவாகும்.

சம்வஸ்ஸரவாரியப் பெருமக்கள்:- அற நிலயங்களின் கண்காணிப்பு, நியாயம் வழங்வது முதலியன இவ்வாரியப் பெருமக்கள் கடமை. ஒவ்வொருவரும் ஓரோராண்டு பணியாற்றுவர். மற்ற எல்லா வாரியங்களைக்காட்டிலும் இது முக்கியமானதாகும். செல்வாக்கும் சிறப்பும் உடையது. மற்றவாரியப் பெருமக்களுக்கு முன்பே இவ்வாரியப் பெருமக்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள். தோட்ட வாரியத்திலும் ஏரிவாரியத்திலும் பணி செய்தவர்களும், சிறப்பான கல்வி யறிவு உடையவர்களும், வயதானவர்களும் தான் சம்வஸ்ஸர வாரியப் பெருமக்களாக வரமுடியும். இவ் வாரியத்தாரின் தொகை பன்னிரண்டு பேர் என்பது டாக்டர் முகர்ஜியின் கருத்து.

<u>தோட்ட வாரியப் பெருமக்கள்:-</u> நிலங்களைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் கண்காணிப்பது இவர்கள் கடமை,

ஏரிவாரியப் பெருமக்கள்:- நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பயன்படச்செய்வது இவ்வாரியத்தாரின் அலுவலாகும். சிற்றூர்களிலுள்ள ஏரிகளை அடிக்கடி பழுது பார்க்கவேண்டிய செலவுக்காகச் சில நிலங்கள் ஊரவையார் பார்வையில் விடப்பட்டிருந்தன. அவை 'ஏரிப்பட்டி' எனப்படும். ஏரிப்பட்டியை மேற்பார்வை யிட்டவர் ஏரிவாரியப் பெருமக்கள் எனப்படுவர்.

கழநி வாரியப் பெருமக்கள்:- நன்செய் நிலங்களைக் கவனிப்பது இப் பெருமக்களின் கடமையாம்.

கலிங்கு வாரியம்:- (கலிங்கு - மதகு) ஏரிக் கலிங்குகளை மேற்பார்வையிடும் சபை.

தடிவழி வாரியம்:- வயல்களை மேற்பார்வையிடும் சபை.

கணக்கு வாரியம்:- அரசாங்கக் கணக்குகளைப் பரிசீலனை செய்வது இவர்களது கடமை.

பஞ்சவார வாரியம்:- 1. சதாசிவ பண்டாரத்தார்கருத்து:- அரசனுக்குக் குடிகள் செலுத்தவேண்டிய நிலவரியும், பிற வரியையும் வாங்கி அரசாங்கப் பொருள் நிலையத்திற்கு அனுப்புவது இக் குழுவினரின் செயலாம்.

2. இராசமாணிக்கனார் கருத்து. ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடை ஆனதும், பஞ்ச ஒழிப்புக்கு என்று ஒருபகுதி நெல் ஒதுக்கிவைக்கப்பட்டது. அதனைச் சேர்த்தல், மேற்பார்வையிடல், காத்தல் பஞ்ச காலத்தில் குடிகட்குத் தந்துதவுதல் முதலிய கடமைகளைச் செய்துவந்த குழு பஞ்சவார வாரியம் எனப்படும்.

வாரியம்:- ஊரவைக்குள் பல பிரிவுகளிருந்தன. ஒவ்வொரு பிரிவும் வாரியம் எனப்படும்.

பட்டர்கள் - கோயில் அர்ச்சகர்கள்.

விசிட்டர்கள் - கல்வி, ஒழுக்கம் இவற்ருல் மேம்பட்ட சான்ருேர்கள்.

பெரிய தளி - பெரிய கோயில்.

சிவப் பிராமணன் - குருக்கள்.

அர்ச்சனாபோகம் - அர்ச்சனைக்கு விடப்பட்ட நிலம்.

இவ்வாட்டை - இந்த ஆண்டு.

மஞ்சிக்கம் - புறம்போக்கு.

கழநிகோல் - நிலம் அளக்கும் கோல் (நன்செய்யை அளக்கப் பயன்பட்டது)

பிடாகை - சிற்றூர்.

வரிசிலத்துக்(வரிசையற்று) கிடந்த - முறையற்றுக் கிடந்த.

தென் சிறகு - தென்கரை.

ஆராதனை - வழிபாடு.

குறியுள்ளிருந்து - சபையுள்ளிருந்து.

மத்யஸ்தன் - நடுவன் (நியாயம் வழங்கும் கணக்கன்)

மூன்று சந்தி - மூன்று வேளை.

இறையிலி - வரியில்லாமல்.

கல்வெட்டு - 5

தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 1

முதற் பிரிவு

ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்கு ஸ்ரீகார்யஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்தவேளான் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்

தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்புப் பிரதி மங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் சரடு நீக்கி தக்ஷிணமேரு விடங்கன் என்னுங் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்தும் கல்லில் வெட்டினபடி; பாதாதி கேசாந்தம் பதினேழு விரலே இரண்டு தோரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கனமான எழுந்தருளு வித்த நம்பி ஆரூரனுர் பிரதிமம் ஒன்று, இவர் நின்ற இரு விரலரை உசரத்து பத்மம் ஒன்று இதனெடுங் கூடச் செய்த எண்விரல்சமசதுரத்து மூவிரலேஇரண்டுதோரை உசரத்துப் இவர் எழுந்தருளி நின்ற பீடம் ஒன்று. பதினறு விரல் நீளத்து இரண்டு திருக்கை உடையராகக் கனமான எழுந்தருளுவித்த நங்கை பரவையார் பிரதிமம் ஒன்று, இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தோரை உசரத்துப் பத்மம் ஒன்று. இதனெடுங் கூடச்செய்த அறு விரலே இரண்டு தோரை சமசதுரத்து மூவிரல் உசரத்து பீடம் ஒன்று. பாதாதி கேசாந்தம் இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த திருநாவுக்கரையர் பிரதிமம் ஒன்று, இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே ஆறு தோரை உசரத்து பத்மம் ஒன்று, இதனெடுங்கூடச் செய்த எண் விரலே ஆறு தோரை சமசதுரத்து நால்விரல் உசரத்துப் பீடம் ஒன்று. பாதாதி கேசாந்தம் இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த திருஞான சம்பந்தடிகள் பிரதிமம் ஒன்று, இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தோரை உசரத்துப் பத்மம் ஒன்று. இதனெடுங் கூடச் செய்த ஒன்பதிற்று விரலே இரண்டுதோரைச் சம சதுரத்து நால்விரல் உசரத்து பீடம் ஒன்று. பாதாதிகேசாந்தம் ஒரு முழமே நால் விரலரை உசரத்து இரண்டு திருக்கை யுடையராகக்

இரண்டாம் பிரிவு

கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெருமாள் பிரதிமம் ஒன்று, இவர் எழுந்தருளி நின்ற ஐவிரலே இரண்டு தோரை உசரத்துப் பத்மம் ஒன்று. இதனெடுங்கூடச் செய்த பதினொரு விரல் சம சதுரத்து ஐவிரலே ஆறுதோரை உசரத்துப் பீடம் ஒன்று. இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கை உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம் பிராட்டியார் உலோக மாதேவியார் பிரதிமம் ஒன்று. இவர் எழுந்தருளிநின்ற ஐவிரல் உசரத்து பத்மம் ஒன்று, இதனெடுங் கூடச்செய்த ஒன்பதிற்றுவிரல் சம சதுரத்து ஐவிரலே இரண்டு தோரை உசரத்துப் பீடம் ஒன்று. பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் பாதாதி கேசாந்தம் ஐவிரலே இரண்டு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசேகர தேவர் திருமேனி ஒன்று. இவரொடுங் கூடச்செய்த ஒரு விரலரை உசரத்துப் பத்மமும் இருவிரலே நாலுதோரைச்சம சதுரத்தும் ஒரு விரல் உசரத்தும் பித்தளையால் செய்த பீடம் ஒன்று. இவரைக்கவித்த இருபத்துஒருவிரல் சுற்றிற்கனமாகச் செம்பாற் செய்த பிரபை ஒன்று. இவனே நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத்தாறும் உட்பட நிறை எண்கழஞ்சு ஒன்பது மஞ்சாடிக்கு விலைகாசு இருபத்தைஞ்சு. இவனே நங்கை பரவையார்க்குக் குடுத்தன திருக்கைக் காரை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சு. திருக்காற் காரை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சு. மோதிரம் ஒன்று பொன்.

மூன்ரும் பிரிவு

அரைக் கழஞ்செய் மஞ்சாடியும் குன்றி. இவனே திருநாவுக்கரையருக்குக் கொடுத்தன உருத்திராக்ஷச்சுரி பொன்னின் நூலிற்கோத்த உருத்திராக்ஷம் ஒன்றுட்பட நிறை ஆறுமஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலைகாசு ஒன்று உருத்ராக்ஷச் சுரி பொன்னின் நூலிற் கோத்த உருத்ராக்ஷம் ஒன்றும் உட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலைகாசு ஒன்று. கண்டிகை உருத்ராக்ஷம் ஒன்றும் சுரி ஒன்றும் உட்பட நிறை ஐய்ங்க.........மஞ்சாடியும் குன்றிக்கு விலைகாசு எட்டு. திருப்பொற்பூ ஒன்று பொன் முக்காலே நாலு மஞ்சாடியும் குன்றி. திருக்கைக் காரை ஒன்று பொன் இருகழஞ்சு. திருக்கைக் காரை ஒன்று பொன் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடி. இவனே திருஞான சம்பந்த அடிகளுக்குக் குடுத்தன. உருத்ராக்ஷச்சுரி பொன் னின் நூலிற்கோத்த உருத்ராக்ஷம் ஒன்றுட்பட நிறை அரைக் கழஞ்சே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு ஒன்றரை. தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐம்பத் தாறும், உருத்ராக்ஷம் ஐம்பத்தாறும் உட்பட நிறை என் கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலைகாசு இருபத் தைஞ்சு. திருப் பொற் பூ வொன்று பொன்கழஞ்சே குன்றி திருக்கைக்காறை ஒன்று பொன் இரு கழஞ்சே குன்றி. திருக்கைக்காறை ஒன்று, பொன் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடி. திருப்பட்டிகை ஒன்று, பொன் இரு கழஞ்சு. இவனே பெரிய பெருமாளுக்குக் குடுத்தன திருக்கைக் காறை ஒன்று பொன்கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மூன்றுமா வாக இரண்டினுல் பொன் இரு கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் ஆறுமா. திருக்குதம்பை ஒன்று பொன் எட்டு மஞ்சாடியும் ஏழுமாவாக இரண்டினுற் பொன் முக்காலே இரண்டு மஞ்சாடியும் நான்கு மா. இவனே இவர் நம் பிராட்டியார் உலோகமாதேவியார்க்குக் குடுத்தன திருக் குதம்பை ஒன்று, பொன் எழுமஞ்சாடியும் குன்றியாக

இரண்டினுற் பொன் முக்கால். திருக்கைக் காறை ஒன்று பொன்கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் மூன்று மா. திருக் கைக் காறை ஒன்று பொன் கழஞ்சே எட்டுமா. இவன் எழுந்தருளுவித்த திருஞான சம்பந்த அடிகட்கு இராஜேந்திர சிங்க வளநாட்டுத் திருவாலிநாட்டு உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ் வரம் உடையார் தேவதானம் குறுவாணியக் குடியாகிய பரகேசரிபுரத்து நகரத்தார் யாண்டு இருபத்தொன்பதாவது வரை குடுத்த ரத்னங்கள். தக்ஷிணமேருவிடங்கன் என்னும் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்தும் கல்லில் வெட்டின உருத்திராக்ஷம் பொன்னின்சுரிகட்டிற்று ஒன்றும், நாண்படு கண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்சே எழுமஞ் சாடிக்கு விலே காசு மூன்றேகால். இவன் எழுந்தருளுவித்த திருநாவுக்கரையருக்குக் கொடுத்தன உருத்திராக்ஷம் பொன்னின் சுரி கட்டிற்று ஒன்றும் நாண்படுகண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்சே எழுமஞ்சாடிக்கு விலே காசுமூன்று. இவன் எழுந்தருளுவித்த நம்பியாரூரனுருக்குக் கொடுத்தன உருத்திராக்ஷம் பொன்னின் சுரி கட்டிற்று ஒன்றும் நாண்படுகண்ணும் கொக்கு

நான்காம் பிரிவு

வாயும் உட்பட நிறை கழஞ்சே எழு மஞ்சாடிக்கு விலே காசு மூன்று. இவன் எழுந்தருளுவித்த நங்கை பரவை யாருக்குக்குடுத்தன திருவொன்று உட்படப்பட்டைக்காறை ஒன்று, பொன் முக்காலே குன்றி. இவன் எழுந்தருளுவித்த நம்பியாரூரனுருக்கு நித்தவினோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் தேவ தானம் வெண்ணிநகரத்தார் யாண்டு இருபத்தொன்பதா வது வரை கொடுத்த பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்து கல்லில்வெட்டின திருக்கம்பி ஒன்று,

பொன் கழஞ்சே மஞ்சாடியும் குன்றி திருக்கம்பி ஒன்று, பொன்கழஞ்சே மஞ்சாடி திரள்மணி வடம் ஒன்று, பொன் இருகழஞ்சே மஞ்சாடியும் குன்றி திருக்கைக் காறை ஒன்று, பொன் கழஞ்சே முக்காலே நாலுமஞ்சாடி திருக்கைக் காறை ஒன்று, பொன்கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் குன்றி. திருக்காற் காறை ஒன்று, பொன்கழஞ்சேமுக்காலே நாலு மஞ்சாடியாக இரண்டினால் பொன் முக்கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடி இவன் எழுந்தருளுவித்த நங்கை பரவையாருக்குகொடுத்தன. திருக்கம்பி ஒன்று, பொன் முக்காலே இரண்டு மஞ்சாடியும் குன்றி. திருக்கம்பி ஒன்று பொன் முக்காலே இரண்டு மஞ்சாடி.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சாவூர்க் கோயில்மேற்குப் புறச் சுவரில் இருக்கும் மாடத்தில் உள்ள மூன்றும் கல்வெட்டு.*

அரசன்:- *முதல் இராச ராசசோழன் (கி. பி. 985 - 1014)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *இருபத் தொன்பதாவது (29) ஆட்சியாண்டு கி. பி. 1014.*

அரசனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பு:- *இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனின் இரண்டாம் புதல்வன். இயற் பெயர் அருண்மொழித்தேவன் என்பதாகும். இவன் ஐப்பசித் திங்கள் சதய நாளில் பிறந்தவன். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பல திருப்பணிகள் புரிந்துள்ளான். இராசகேசரி என்ற பட்டம் பூண்டவன். இவனை இளமையில் வளர்த்தவர்கள் முதல் கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன்மாதேவியும், இவன் தமக்கையாகிய குந்தவைப்பிராட்டியாரும் ஆவர். மிகுந்த சைவப்பற்று உடையவன். முதன்முதல் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கம் இவன் காலத்திலேயே ஏற்பட்டது. இராஜராஜ சோழனுக்குத் திருமுறைகண்ட*

சோழன் என்றும் பெயர். தில்லைச் சிற்றம்பலத்தில் நால்வர் கையடையாளமிட்டு ஓர் அறையில் பூட்டிவைக்கப்பெற்றிருந்த திருமுறைச் சுவடுகளை இராஜராஜ சோழனே கண்டெடுத்துத் தமிழ் நாட்டிற்கு அளித்தான். அதன் நினைவாகத் தேவாரம் பாடிய மூவர் திருமேனிகளை இராஜராஜேஸ்வரத்தில் எழுந்தருளுவித்தனன் போலும். திருமுறைகளைத் தொகுப்பித்தவன் இவனே யாவன். இராசராசனுடைய மெய்க்கீர்த்தி "திருமகள் போல பெருநிலச் செல்வியும்" என்று தொடங்குவதாகும். இராசராசன் தஞ்சாவூரில் இராஜராஜேஸ்வரம் என்னும் பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டியுள்ளான்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- தஞ்சை ராஜ ராஜேஸ்வரத்துக்கோயில் அதிகாரியான தென்னவன் மூவேந்த வேளான் என்பவன் சுந்தரர், பரவையார், திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோர்க்கு நினைவுச் சின்னங்கள், அமரும் பீடங்கள் ஆகியவற்றை கோயிலில் எடுப்பித்துள்ளான். அவன் எடுத்த பிரதிமங்களுக்கு அவனும், இராஜேந்திர சிங்க வள நாட்டுத் திருவாலிநாட்டு உடையார்தேவதானம் குறுவாணியக் குடியாகிய பரகேசரிபுரத்தாரும் நித்த விநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீ இராஜராஜேஸ்வர முடையார் தேவதானம் வெண்ணி நகரத்தாரும் பல அணி கலங்கள் செய்துஅளித்துள்ளனர். அணிகலங்கள் ரத்னங்க ளாயின் தக்ஷிணமேருவிடங்கன் என்னும் நிறை கல்லால் நிறுத்தும் பொன்னாயின் ஆடவல்லான் என்னும் நிறைகல்லால் நிறுத்தும் கல்லில் வெட்டப்பட்டன.

குறிப்பு:- சுந்தரர் முதலிய அறுவர்க்கும் செம்பால் செய்யப்பட்ட படிமங்கள் இருந்தன. சந்திரசேகர தேவர்க்கு மட்டும் பித்தளையால் திருமேனி செய்யப்பெற்றது. இவருக்குப் பத்மமும், பீடமும் பித்தளையாலும், பிரபை மட்டும் செம்பாலும் செய்யப்பெற்றது. இவற்றை நோக்க அக்காலத்தில் தெய்வத் திருமேனிகளுக்கு மட்டும் பிரபை (திருவாசி) வைத்து வந்த வழக்கம் அறியப்படும்.

	படிமம்	அளவு (உயரம்)	பத்மம் (உயரம்)	பீடம்
1	நம்பி ஆரூரனூர்	17 விரல் 2 தோரை	$2\frac{1}{2}$ விரல்	சமசதுரம் 8 விரல் உயரம் 3 விரல் 2 தோரை
2	நங்கை பரவையார்	16 விரல்	2 விரல் 2 தோரை	சமசதுரம் 6 விரல் 2 தோரை உயரம் 3 விரல்
3	திருநாவுக்கரையர்	22 விரல் 2 தோரை	2 விரல் 6 தோரை	சமசதுரம் 8 விரல் 6 தோரை உயரம் 4 விரல்
4	திருஞானசம்பந்த அடிகள்	22 விரல் 2 தோரை	2 விரல் 2 தோரை	சமசதுரம் 9 விரல் 2 தோரை உயரம் 4 விரல்
5	பெரியபெருமாள் (இராசராசன்)	1 முழம் $4\frac{1}{2}$ விரல்	5 விரல் 2 தோரை	சமசதுரம் 11 விரல் உயரம் 5 விரல் 6 தோரை
6	உலோகமாதேவியார்	22 விரல் 2 தோரை	5 விரல்	சமசதுரம் 9 விரல் உயரம் 5 விரல் 2 தோரை
7	தேவாரதேவர் திருமேனி (சந்திரசேகரர்)	5 விரல் 2 தோரை	$1\frac{1}{2}$ விரல்	சமசதுரம் 2 விரல் 4 தோரை உயரம் 1 விரல்

பொருள் விளக்கம்:-

பொய்கை நாடு:- காவிரியின் வடகரையில் திருவையாற்றைச் சுற்றியுள்ள பகுதி. இராசேந்திர சிங்க வளநாட்டின் உள் நாடுகளில் ஒன்று.

தென்னவன் மூவேந்த வேளான்:- இவன் பொய்கை நாட்டின் தலைவன். இராசராசசோழன் தஞ்சைமாநகரில் எடுப்பித்த பெரியகோயிலில் இவ் வேந்தன் ஆணைப்படி கோயிற்பணி செய்துவந்தவன். சிவபெருமானிடத்தில் சிறந்த பக்தி உடையவன். இவன் தஞ்சைப் பெரிய கோவிலில் திருஞான சம்பந்த அடிகள், திருநாவுக்கரசர், சுந்தரர், பரவையார், மெய்ப்பொருள் நாயனார், சிறுத்தொண்ட நாயனார் என்போர்க்குச் செப்புப் படிமங்கள் எழுந்தருளுவித்து அவற்றிற்கு அணிகலன்களும் அளித்துள்ளான். இச் செயல் இவன் சமய குரவர்களிடத்தும் சிவனடியார்களிடத்தும் வைத்திருந்த பேரன்பினை நன்கு புலப்படுத்துவதாகும். மெய்ப்பொருள் நாயனாரது படிமத்தைவைத்த செய்தியைக் கூறும் கல்வெட்டில் அவ்வடியார் பெயரைக் கூறாமல் "தத்தா நமரே காண் என்றமிலாடுடையார்" என்று இவன் குறிப்பிட்டிருப்பது அவர்பால் இவனது உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த அன்பின் முதிர்ச்சியை இனிது உணர்த்துவதாகும்.

இவன் அரசரிடத்தும் பேரன்புடையவன் என்பது இராசராசன், உலோகமாதேவி ஆகியோரது படிமங்களை எழுந்தருளுவித்து அவற்றிற்கு அணிகலன்களும் கொடுத்திருப்பதனால் விளங்கும். இவன் கி. பி. 995-ம் ஆண்டில் திருச்சோற்றுத்துறைக் கோயிலில் நாள்தோறும் தேவாரத் திருப்பதிகம் பாடுவோர்க்கு நிவந்தமாகப் பொன் அளித்துள்ளான். இராசராசன் இவனது சிறந்த பண்புகளை ஆராய்ந்துணர்ந்துதான் இராசராசேச்சுரத்தில் ஸ்ரீ கார்யஞ் செய்யும் வேலையில் இவனை அமர்த்தினன் போலும் (சோழர்வரலாறு (T. V. S. 140 பக்.)

நம்பியாரூரர்:- தேவாரம் பாடியசமயகுரவர்களில் இறைவனிடம் தோழமையோடு பழகியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவருக்கு நம்பியாரூரர். தம்பிரான்தோழர் முதலிய பெயர்கள் உள்ளன. தொண்டைநாட்டுத் திருநாவலூரில் சடையனார், ஞானியார் என்ற இருவரும் ஈன்றெடுத்த இளஞ்சுடர், இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றவர். பரவையார், சங்கிலியார் என்ற இருவரையும் மணம்புரிந்து வாழ்ந்தவர்.

நங்கை பரவையார்:- திருவாரூரில் தேவ கணிகையர் குலத்தில் தோன்றி, தியாகேசப்பெருமான் திருவருளால் சுந்தரரைக் கணவனாகப்பெற்ற சுடர்க்கொடி. இறைவன், இவள் சுந்தரர் மீது கொண்ட ஊடலைநீக்க நள்ளிரவில் தூதுசென்ற வரலாற்றைநாடறியும். பரவையார் கயிலாயத்தில் கமலினி என்ற பெயரோடு அம்பிகைக்குத் தொண்டுபுரிந்து நந்தவனத்தில் சுந்தரரைக் காதலித்த குற்றத்திற்காக நிலவுலகில் பிறந்தவள்.

திருஞான சம்பந்தர்:- சீகாழியில் சிவபாத ஹிருதையர், பகவதியார் இருவருக்கும் மகவாகத்தோன்றி மூன்று வயதிலேயே அம்பிகை ஊட்டிய ஞானப் பாலை உண்டு தேவாரம் பாடிய குழந்தை திருஞான சம்பந்தர். இவர்செய்த அற்புதங்கள் மிகப்பல. இறைவனிடம் பொற்றாளம், முத்துப்பந்தர், பொற்கிழி முதலியன பெற்றது, பாண்டிய நாட்டில் சைவம் பரப்பிச் சமண இருள் ஓட்டி கூன் பாண்டியன் நெடுமாறனின் வெப்புநோய் தீர்த்து கூன்நிமிர்த்தது, எலும்பைப் பெண்ணுருவாக்கியது முதலியன இவர் நிகழ்த்திய செயல்கள் பெரிய புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர்:- திருவாமூரில் புகழனார், மாதினியார் இருவரும் பெற்றெடுத்த புதல்வர் நாவுக்கரசர். பல சமயநெறிகளையும் அறிந்து இறைவனருளால் சூலைநோயுற்றுப் பின் சூலைநோய் நீங்கி சைவத்தைச் சார்ந்தவர். இளமையில் இவர்

பெயர் மருணீக்கியார் என்பது. நாவுக்கரசர் என்பது இறைவ ஞல் கொடுக்கப்பட்டது. இவர் பாடிய தேவாரப் பாடல்கள் கல் நெஞ்சையும் உருக்வைப்பன. எண்பத்தொரு ஆண்டுகள் நில வுலகத்தில் வாழ்ந்து சைவத்தையும், தமிழையும் பரப்பியவர்.

பிரதிமம் - மனிதர் உருவெடுப்பது

திருமேனி - கடவுள் உருவெடுப்பது.

தக்ஷிணமேருவிடங்கன் - இராசராசேச்சுரத்து **விமானம்** "தக்கணமேரு" எனப்படும். வராஹ மிஹிரர் இயற்றிய பிருகத் சம் ஹிதையில் கூறப்பட்டுள்ள இருபது வகைப்பட்ட விமானங் களுள் இது **மேரு** அமைப்புடையது. தென்னுட்டிலிருப்பது ஆதலின் "தக்கண மேரு" எனப்பட்டது. இறைவன் பெயர் "விடங்கர் என்பது. உளியால் செதுக்கப்படாதவர் என்பது இதன் பொருள்,

பாதாதி கேசாந்தம் - அடிமுதல் முடிகாறும்.

தோரை - நெல்.

8 தோரை - 1 விரல்.

12 விரல் - 1 சாண்.

2 சாண் 1 முழம்.

கனமாக - உள் துளை இல்லாமல்.

தேவாரதேவர் - இராசராசன் தேவாரம் பாடுவதற்காக எழுந்தருளுவிக்கப்பட்ட கடவுள் (சந்திரசேகரர்) (டாக்டர் உல்ஷ் துரை குறிப்பு.)

நம்பிராட்டியார் - மனைவியார்.

உலோகமாதேவியார் - இராசராசனின் பட்டத்தரசியாக விளங்கியவள். இவளுக்கு தந்திசத்திவிடங்கி என்னும் வேறு பெயரும் உண்டு. இவ் அம்மையார் தஞ்சைக்கு வடக்கே

உள்ள திருவையாற்றில் ஐயாறப்பரது கோயில் வடக்குத் திருச்சுற்றில் உலோகமாதேவீச்சுரம் என்னும் கோயில் எடுப்பித்து அதற்கு நிபந்தம் அளித்துள்ளான். அஃது இந்நாளில் உத்தர கைலாயம் என வழங்குகிறது.

கைக்காறை - கை வளையல்.

பிரபை - திருவாசி.

மா - இங்கே மஞ்சாடியில் $\frac{1}{10}$ பங்கு (நில அளவில் $\frac{1}{20}$ பங்கு)

திருப்பட்டிகை - அரைக் கச்சு.

கொக்குவாய் - கொக்கி.

நாண்படு கண் - பொருத்துவாய்.

பட்டைக் காறை - கழுத்திலணியும் அட்டிகை போன்றது.

திருக்கம்பி - காதில் அணிவதற்கான அணி.

காற்காறை - கொலுசு என்று வழங்கும் அணி.

குதம்பை - காதணி.

குறுவாணியக்குடி - ஊர். வேறு பெயர் பரகேசரிபுரம்.

இராசேந்திரசிங்கவளநாடு - இதுசோழநாட்டில் காவிரிக்கும் சிதம்பரத்திற்கும், வடபால் ஓடும் வெள்ளாற்றுக்கும் (நிவா) இடைப்பட்ட பெருநிலப் பரப்பாகும். இது குலோத்துங்கன் காலத்தில் 'தியாகவல்லி வளநாடு' என்றும், விக்கிரம சோழன் காலத்தில் 'திரிபுவனமுழுதுடை வளநாடு' என்றும் வழங்கப்பட்டது.

வெண்ணிக்கூற்றம் - பெருநங்கைமங்கலம், பூவலூர் என்ற ஊர்கள், இக் கூற்றத்தைச் சேர்ந்தவை. (புறநானூறு அடிக்குறிப்பு. ராவ்பகதூர் வெங்கையர்)

கல்வெட்டு - 6

இராசராசக் கிணறு

ஸ்வஸ்திஸ்ரீ

திருமகள்	போலப்	பெருநிலச்	செல்வியுந்
தனக்கே	யுரிமை	பூண்டமை	மனக்கொளக்
காந்தளூர்ச்	சாலை	கலமறுத்	தருளி
வேங்கை	நாடும்	கங்க	பாடியுந்
தடிகை	பாடியும்	நுளம்ப	பாடியும்
குடமலை	நாடும்	கொல்லமும்	கலிங்கமும்
முரட்டொழில் சிங்களர்		ஈழ	மண்டலமும்
இரட்ட	பாடி	ஏழரை	யிலக்கமும்
முந்நீர்ப்	பழந்தீவு	பன்னீ	ராயிரமும்
திண்டிறல்	வென்றித்	தண்டாற்	கொண்டதன்
எழில்வள	ரூழியுள்	எல்லா	யாண்டும்
தொழுதகை விளங்கும்		யாண்டே	செழியரைத்
தேசுகொள் கோராஜ		கேசரி	வன்மரான
உடையார்ஸ்ரீ ராசராச		தேவர்க்கு	யாண்டு

உ௰௬ ஆவது, ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருநாமத்தால் கிணறும், தொட்டியும்சமைப்பித்தான் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் பணிமகன் சோழமண்டலத்துத் தென்கரை நாட்டு நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன். இவனே ஸ்ரீ இராஜராஜ கிணற்றில் தொட்டிக்கு நீரிறைப்பார்க்கு அரு மொழித்தேவன் மரக்காலால் நிசதம் நெல் ஐ உங ஆகத்

திங்கள் ௬-க்கு நெல் ஐ ௩௰ கலமும் ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் ஐ ௨௩ ஆக திங்கள் ௬-க்கு நெல் ௩௰ கலம், இப்பந்தலுக்குக்குசக்கலம் இடுவார்க்குத் திங்கள் ௧-க்கு நெல்லு வத ஆக திங்கள் ௬-க்கு நெல்லு ௪ கலமும் ஸ்ரீ ராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டுதோறும் புதுக்குப்புறமாக வைச்ச நெல்லு ௨ கலம் வத ஆக ஐ ௬௰௪ கலம் வத. இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர்ச் சபையோம் இறை திரவியமும், கிரய திரவியமும், கொண்டு இறை இழிய்ச்சி ....

கல்வெட்டு இருக்குமிடம்:- *செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசிக்குச் செல்லும் வழியில் உள்ளதும், மாமண்டூருக்குத் தென்கிழக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளதுமான உக்கல் என்ற ஊரிலுள்ள திருமால் கோயிலின் மேற்புறச் சுவரில் உள்ளது.*

அரசன்:- *முதல் இராசராசசோழன் (கி. பி. 985 - 1014)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *29-வது ஆட்சியாண்டு கி. பி. 1014.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *முதல் இராசராச சோழனது பணிமகனாகிய, சோழமண்டலத்துத் தென்கரை நாட்டு நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன் என்பான், இராசராசன் பெயரால் சயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஒரு கிணறு அமைத்து அதற்குக் கீழ்க்கண்டவாறு நிவந்தம் அளித்துள்ளான்.*

(1) இராசராசன் கிணற்றில் தொட்டிக்கு நீரிறைப்பார்க்கு அருமொழித்தேவன் மரக்காலால் நாள்தோறும் 2 குறுணி நெல்லாக 6 மாதத்திற்கு 30 கலம் நெல்லும்,

(2) இராசராசன் பெயரால் நீரட்டுவார்க்கு நாளொன்றுக்கு 2 குறுணியாக 6 திங்களுக்கு 30 கலம் நெல்லும்,

(3) குசக்கலம் இடுவார்க்குத் திங்கள் ஒன்றுக்கு 2 தூணி யாக 6 திங்களுக்கு 4 கலம் நெல்லும்,

(4) ஆண்டாண்டுதோறும் கிணறு, தொட்டி பழுது பார்ப் போர்க்குநிவந்தமாக 2 கலன் 2 தூணி நெல்லும், ஆக மொத்தம் 66 கலம்2 தூணி நெல்லை ஊதியமாக அளித்துள்ளான் என்று தெரிகிறது.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

மனக்கொள - மனங்கொண்டு.

காந்தளூர்ச்சாலை - இது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி யாக இந்நாளில் உள்ளது. அதனை 'வலியசாலை' என்றும் வழங்குவர். இது மலைநாட்டுக் கடல் துறை பட்டினமாகும்.

காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி - இதுபற்றி இருசாரார் கொள்கைகள் (1) இவ்வூரில் கல்விச்சாலை ஒன்று இருந்தது என்றும், அதில் இவ்வளவு மாணவர்கள்தான் உண்ணலாம் என்ற வரையறை செய்யப்பட்டது என்றும் சொல்லுவார் திரு. ச. செல்லம் அவர்கள்.

(2) திருவாளர்கள் டாக்டர் உல்ஷ்துரை, T. A. கோபி நாதராவ் M. A., K. A. நீலகண்ட சாஸ்திரியார் M. A., ஆகியோர் இவ்வூரில் உள்ள மரக் கலங்கள் அழிக்கப்பட்டன என்பர்.

வேங்கை நாடு - கிருஷ்ணை, கோதாவரி ஆகிய இருபேராறு களுக்கும் இடையில் அமைந்த நாடாகும். அது அரச னில்லாமையால் குழப்பமுற்றிருந்தது. அதனை அறிந்த இராச ராசன் தன் பதினான்காம் ஆட்சி ஆண்டில் அதன்மீது படை யெடுத்துச் சென்று அமைதியை உண்டாக்கிச் சக்தி வர்மன் என்பவனை அதற்கு அரசனாக்கினான்.

கங்கபாடி - மைசூர் நாட்டின் தென் பகுதியும், சேலம் மாவட்டத்தின் வட பகுதியும் தன்னகத்துக்கொண்ட நாடாகும். அதன் தலைநகர் தழைக்காடு என்பது. அந்நாட்டைக் குவலாள புர பரமேசுவரர்களான மேலைக்கங்கர்கள் ஆண்டுவந்தனர்.

நுளம்பபாடி - மைசூர் இராச்சியத்தின் கீழ்ப் பகுதியையும் பல்லாரி ஜில்லாவையும் தன்பாற்கொண்ட நாடாகும். இதனைப் பல்லவர்களுள் ஒரு பிரிவினரான நுளம்பர்கள் ஆண்டுவந்தனர்.

தடிகைபாடி - மைசூர் ஜில்லாவைத் தன்னகத்தே கொண்டது.

குடமலை நாடு - குடகு. கொங்காள்வார் மரபில் வந்த ஒருவன் அப்போது அதனை அரசாண்டுவந்தான். பணசோகே என்ற இடத்தில் ஒரு பெரும் போர் நடந்தது. அதில் அவன் தோற்று ஓடிப்போனான். அப்போரில் வீரங்காட்டிப் போர் புரிந்த மணிஜா ("மீனிசா" என்பர் மா. இராசமாணிக்கனார்) என்பவனின் திறமையைப் பாராட்டி இராசராசன் ஆணையின் படி அவனுக்கு க்ஷத்திரியசிகாமணி கொங்காள்வான் என்ற பட்டமும், மாளவி என்ற சிற்றூரும் அளிக்கப்பட்டது.

கொல்லம் - திருவாங்கூரிலுள்ள ஒரு சிறு நாடாகும். இதனையும் இதனைச் சார்ந்த கொடுங்கோளூரையும் இராசராசன் வென்றமைபற்றி அவனுக்குக் "கீர்த்தி பராக்கிரமன்" என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

கலிங்கம் - கோதாவரி யாற்றிற்கும் மகாநதிக்கும் இடையில் கீழ்க் கடலைச்சார்ந்த ஒரு நிலப்பரப்பாகும். அது இந்நாளில் வட சர்க்கார் என வழங்கும் பகுதியாகும். கலிங்க வேந்தன் கீழைச் சாளுக்கியமன்னனுக்கு அடிக்கடி இடையூறு விளைவித்துக் கொண்டிருந்ததால் இராசராசன் அதை வெல்ல வேண்டியது இன்றியமையாததாயிற்று.

முரட்டொழில் - இது முரட்டெழில் என்று இருக்க வேண்டும். எட்டாம் கல்வெட்டில் "முரட்டெழில்" என்றே

உள்ளது. "முரட்டுத் தன்மையும் அழகும் வாய்ந்த" என்பது இதன் பொருள். முரண் + தொழில் என்றுகொண்டு மாறுபாட்டையே தங்கள் தொழிலாகக்கொண்டவர்கள் என்றுரைப்பினும் அமையும்.

ஈழமண்டலம் - இலங்கை. ஈழமண்டலத்திலிருந்த ஐந்தாம் மகிந்தன் சோழனுக்குப் பகைவனாயிருந்த பாண்டியர்க்கும், சேரர்க்கும் உற்றுழி உதவிவந்ததனால் இராசராசன் தன் மகனை அனுப்பி அதன்மீது படையெடுத்துச்சென்று வென்றுவரச் செய்தான். "முரட்டெழில் சிங்கள ரீழமண்டலம்" என்றும், எண்டிசை புகழ்தர ஈழமண்டலம்" என்றும் இவன் மெய்க்கீர்த்திகள் கூறுவனவற்றைக் கூர்ந்து நோக்கினால் ஈழ நாட்டுப் போரில் வலிமிக்க சிங்கள வீரர்கள் பேராற்றல் காட்டிப் போர் புரிந்தனர் என்றும், அத்தகையோரை வென்று ஈழத்தைக் கைப்பற்றியமை இராசராசனுக்குப் பெரும்புகழை உண்டு பண்ணியது என்றும் தெரிகிறது.

இரட்டபாடி - பம்பாய் மாகாணத்தின் தென்பகுதி. இது மேலைச் சளுக்கியர்களுடைய வாழ்விடம்.

ஏழரை இலக்கம் - ஏழரை இலக்கம் வருவாயை உடையது என்பர் ஒரு சிலர். ஏழரை இலக்கம் பூமியை உடையதுஎன்பர் ஒரு சிலர்.

பழந்தீவு - சேரநாட்டிற்குத் தென்மேற்கே அரபிக்கடலிலுள்ள மால்தீவுகளைக்குறிக்கும் பழைய பெயராகும். "கன்னித் தென்கரைக் கடற் பழந்தீபம்" என்னும் அகத்தியச் சூத்திரத்தாலும், "குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந் தீபமும்" என்னும் தெய்வச் சிலையாரது தொல்காப்பியச் சொல்லதிகார உரைப் பகுதியாலும், பண்டைக்காலத்தில் குமரியாற்றிற்குத் தெற்கே கடலில் பழந்தீவுகள் இருந்தமை இனிது புலனாகும். பன்னீராயிரம் என்பது நிலப்பரப்பைக் குறிக்கும். "வடுகவழி பன்னீராயிரம்" (S. I. I. Vol. iii Part i Page 91) என வருதல் காண்க.

தொழுதகை - இது தொழுதகஎன்று இருத்தல்வேண்டும். எட்டாம் கல்வெட்டில் தொழுதக என்றே உளது. தொழத்தக்க நிலையில் என்பதே இதன் பொருள். தொழுதகை என்று பாடம் கொண்டும் அதை தொழு+உதகை என்று பிரித்தும், உதகையை முதலாம் இராசராசன் பாண்டியரிடமிருந்து வென்றான் (Deprived the Seliyas of (their) splendour at the very moment when Udagai) என்று அரசியலார் மொழிபெயர்ப்பில் காணப்படுகின்றது. குடகு நாட்டை வென்ற போதே உதகைஅதில் அடங்கிவிட்டதாகையால் அதை வேறு கூறவேண்டியதில்லை. அவ்வாறு பிரிப்பதற்கு இலக்கணம் இல்லை. அதனால் தொழத்தக்க என்பதே பொருள்.

செழியர் - பாண்டியர்.

உடையார் - மரியாதை மொழி. கடவுள், அரசர், குரு இவர்கள் பெயர்களின் முன் இம் மொழியை அமைத்துக் கூறுவது பண்டைய மரபு. His Highness Maharaja of Travancore என்பது போல.

இராசகேசரி - சோழர்கள் மாறி மாறிப் புனைந்து கொண்ட பட்டங்கள் இராசகேசரி, பரகேசரி என்பதாகும். இராசகேசரி என்றால் அரசர்களுள் சிங்கம்போன்றவன் என்றும், பரகேசரி என்றால் அயலார்க்குச் சிங்கம் போன்றவன் என்றும் பொருள் படும். இப் பட்டப் பெயர்களால் இன்ன அரசர்க்குப் பிறகு இன்ன அரசர் பட்ட மெய்தினர் என்பதனை அறியலாம்.

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்:-

முதல் இராசராசன் காந்தளூர்ச்சாலையிலுள்ள கலங்களை அறுத்தருளினான். வேங்கைநாடு. கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம். இரட்டபாடி, பழந்தீவு —இவைகளை வென்றான்.

உரைநடைப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

ஜயங்கொண்ட சோழமண்டலம் - முதல் இராசராசன் பட்டப் பெயர்களுள் சயங்கொண்டசோழன் என்பது ஒன்றாகும். இவன் தொண்டை மண்டலத்தை வென்ற பிறகு அதற்கு ஜயங்கொண்ட சோழமண்டலம் என்று பெயரிட்டான்.

காலியூர்க் கோட்டம் - தொண்டை மண்டலத்திலுள்ள 24 கோட்டங்களுள் ஒன்றாகும். கோட்டம் இக்கால மாவட்டத்திற்கு ஒப்பாகும்.

சதுர்வேதிமங்கலம் - (சதுர் - நான்கு; வேதி-மறை உணர்ந்தவர்) நான்மறை உணர்ந்த பிராமணர்களின் குடியிருப்பான கிராமம். பெரும்பாலும் அது அந்தப் பிராமணர்களுக்கு வரியில்லாமல் வழங்கப்பெற்றிருக்கும். இதில் சில சிற்றூர்கள் உண்டு. இது 'தனியூர்' என்றும் வழங்கப்பெறும்.

மேலைப்பெருவழி - மேற்கே போகும் பெருவழி. பெருவழி (Main Road)

பணிமகன் - வேலைக்காரன்.

நித்த விநோத வளநாடு - இது, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் வட்டத்தின் கீழ்ப்பகுதியும், பாபநாசம் வட்டத்தின் மேற்குப் பகுதியும், மன்னார்குடி வட்டத்தின் வடக்குப் பகுதியும் அரசிலாற்றின் தெற்குப் பகுதியும் கொண்ட நிலப்பரப்பாகும்.

ஆவூர்க் கூற்றம் - இது தஞ்சை ஜில்லாவில் பாபநாசம் தாலுகாவில் தேவாரம் பெற்ற தலமாகிய ஆவூரைத் தலைநகராகக்கொண்ட ஒரு சிறு நிலப்பரப்பாகும். இரும்புதலை, விளத்தூர் முதலான ஊர்கள் இக் கூற்றத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

அருமொழிதேவன் மரக்கால் - இராச ராசன் இயற் பெயரால் அவன்காலத்தில் விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தில் வழங்கிவந்த மரக்காலாகும்.

நிசதி - நாள்தோறும் (Daily)

ஐ - இது நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

ந - இது குறுணியைக் குறிக்கும் அடையாளம்.

வத - இது இரண்டு தூணியைக் குறிக்கும் அடையாளம். (2 தூணி - 8 குறுணி)

புதுக்குப்புறம் - பழுது பார்ப்பதற்கு வைக்கப்பெற்ற நிபந்தம். புறம் இப் பொருளில் வருவதை திருவிளக்குப்புறம் மடப்புறம் - இவைகளில் காணலாம்.

குசக்கலம் - மட்பாத்திரம்.

இறை திரவியம் - வரிப்பணம்.

கிரய திரவியம் - வாங்கும் விலை (Actual Cost)

பொதுச் செய்தி

அக்காலத்தில் பணியாட்களுக்கு ஒரு ஆண்டில் 6 மாதத்திற்குத்தான் கூலி கொடுக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் வழிப்போக்கர்களின் உதவிக்காக 6 மாத காலம் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்திருந்தனர் என்றும் தெரிகிறது. இக் கல்வெட்டில் வந்துள்ள தூய தமிழ்ச் சொற்கள் பெருவழி (Main Road), பணிமகன் (Humble Servant), புதுக்கு (Repair) என்பன.

கல்வெட்டு - 7

இராசாசிரயபுரத்து நகரத்தார் தேவதானம்

ஸ்வஸ்திஸ்ரீ

திருமகள்	போலப்	பெருநிலச்	செல்வியும்
தனக்கே	யுரிமை	பூண்டமை	மனக்கொள
காந்தளூர்ச்	சாலை	கலமறுத்	தருளி
வேங்கை	நாடுங்	கங்க	பாடியும்
நுளம்ப	பாடியும்	தடிகை	பாடியும்
குடமலை	நாடுங்	கொல்லமும்	கலிங்கமும்
எண்டிசை	புகழ்தர	வீழ	மண்டலமும்
இரட்ட	பாடி	ஏழரை	இலக்கமும்
திண்டிறல்	வென்றித்	தண்டாற்	கொண்டதன்
னெழில்வள	ரூழியு	ளெல்லா	யாண்டுந்
தொழுதக	விளங்கும்	யாண்டே	செழியரைத்
தேசுகொள்	கோராச	கேசரி	வர்மரான

உடையார் ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு உ௰௬ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப்பாடித் தூஞாட்டு மேற்பாடியாகிய ராசாசிரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த் துஞ்சின தேவர்க்குப் பள்ளி படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்திலெடுப்பித் தருளினதிரு அரிஞ்சிகை ஈஸ்வரத்து மஹாதேவர் ஸ்ரீ கோயி லுக்குந் திருச்சுற்றாலைக்கும் திருமுற்றத்துக்கும் திருநந்த வனத்துக்கும் மடவிளாகத்துக்குமாக நாங்கள் இத்தேவற் குக்கொடுத்த நிலத்துக் கெல்லை, நுகாவென்னு மாற்றுக்கு மேற்கு இவ்வூர் மும்முடிச்சோழப் பெருந் தெருவில்

வியாபாரி ஆச்செருமான் வயிரமேகன் தோட்டப் பாழான நிலத்தின் வடவருகே நுகாவாற்றினின்றும் இருகோலகலத்தால் மேற்குநோக்கிப்போன பெருவழி எண்பத்தேழு கோலா சறுதிக்கு வடக்கு இவ்வாசறுதியே வடக்கு நோக்கிச் சோழேந்திர சிம்மேஸ்வரம் உடைய தேவர் தேவரடியார் மத்தவாணச்சேரியேறப்போன தெருவுக்குக் கிழக்கும் சோழேந்திர சிம்மேஸ்வர முடையார் கோயிலின் தெற்கில் திருநந்த வனத்தின் தென்னருகே நுகாவென்னுமாற்றுக்குக் கிழக்கு நோக்கி நாற்கோலகலத்தாற்போன பெருவழிக்குத் தெற்கும் இந்நாற் பேரெல்லையுள்ளுமகப்பட்ட நிலம் எங்களூரளந்து கூறிட்ட பதினெண்சாண் கோலால் குழி ஐயாயிரத்தொரு நூற்று முப்பத்தாறரையுமித்தேவற்குத் தேவதான இறையிலியாகக் கொடுத்தோம். இந்நிலத்தாறே நுகா வென்னும் ஆற்றினின்றும் இத்தேவரின் நிலத்துக்கும் இலுப்பைக் கழனிக்கு நீர் பாய்ந்த வாய்க்கால் காற்கோல் அகலத்தால் இத்தேவரின் நிலத்துக்கும் இலுப்பைக் கழனிக்கு நீர்பாயப் பெறவும் இப்பரிசு தேவதான இறையிலியாகச் சிலாலேகைசெய்து கொடுத்தோம். மேற்பாடியான ராசாசிரயபுரத்து நகரத்தோம். இந்நகரத்தார் சொல்ல எழுதினேன். இந்நகரக் கரணத்தான் நாராயணனடைக் கலவனேன். இவையென்னெழுத்து. இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

கல்வெட்டு இருக்குமிடம்:- *வடார்க்காடு ஜில்லா திருவல்லத்திற்கு வடக்கே, ஆறுமைல் தொலைவிலுள்ள மேற்பாடி என்னும் ஊரிலிருக்கும் சோழேச்சுரக் கோயில் அடித்தளத்தில் உள்ளது.*

அரசன்:- *முதல் இராசராசன் (கி. பி. 985 - 1014)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *29 ஆவது ஆட்சியாண்டு.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- முதல் இராசராச சோழன் அரிஞ்சய சோழன் நினைவாக மேற்பாடியாகிய இராசாசிரயபுரத்தில் அரிஞ்சயேச்சுரம் என்ற கோயிலொன்று எடுப்பித்தான். இராசாசிரயபுரத்து மக்கள் அக்கோயிலுக்கும் அதன் திருச்சுற்றுலைக்கும், திருமுற்றத்துக்கும், திருநந்தவனத்துக்கும், மடவிளாகத்திற்குமாக $5136\frac{1}{2}$ குழி நிலத்தைத் தேவதான இறையிலியாகக் கொடுத்துள்ளனர்.

உரைநடைப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

பெரும்பாணப்பாடி - பாலாற்றுக்கு வடககே புங்கனூரிலிருந்து காளத்திவரையிலுள்ள நிலப்பகுதியை நெடுங்காலமாக ஆண்டுவந்தவர் **பாணர்** (Banas) எனப்பட்டனர். அவர் ஆண்ட நாடு **பாணப்பாடி** அல்லது **பெரும்பாணப்பாடி** எனப்படும். அவர்கள் பல்லவர் காலத்தில் அனந்தப்பூர்க்கு அண்மையில் இருந்தவர்கள்.

தூஞாட்டு - தூநாட்டு. (ஞகரம் - பொலி)

மேற்பாடி - வடார்க்காடு ஜில்லா பாலாற்றின் உபநதியாகிய நுகாவின் மேற்குக் கரையில் உள்ள திருவல்லத்திற்கு வடக்கே 6 மைல் தொலைவில் உள்ளது.

ஆற்றூர்த்துஞ்சின - ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்த. "**துஞ்சிய**'! என்னும் சொல்லின் பொருள் "இறந்த" என்பதே **சிலப்பதிகாரம்** மதுரைக் காண்ட முடிவில் 'அரசு கட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று இளங்கோ அடிகள் கூறியிருத்தல் காண்க. அக்காலத்தரசர் புறநாட்டைக் கைப்பற்றி மாற்றரசரைப் போர்க்களத்தில் முறியடித்திருந்தால் அதனை விளக்கும் தொடர்சொற்களைச் சேர்த்து, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' என்றும், 'பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி' என்றும் அவர்பெயரைப் பிற்காலத்தார் வழங்கியது போலவே ஒவ்வொரு அரசனும்

இறந்த ஊர்களின் பெயர்களையே விசேடனமாக்கி அவர்கள் பெயரைப் பிற்காலத்தார் வழங்கலாயினர். (புறநானூறு, பழைய வுரை. பக்கம் 673 வி. கனகசபை பிள்ளை குறிப்பு) அது போலவே அரிஞ்சய சோழனும், ஆற்றூரில் இறந்த காரணத்தால் "ஆற்றூர்த் துஞ்சின தேவர்" எனப்பட்டான்.

ஆற்றூர்த் துஞ்சினதேவர்:- இவர் அரிஞ்சய சோழன் ஆவர். இவருக்கு அரிகுலகேசரி என்றும், அரிந்தமன் என்றும், பெயர்கள் உண்டு. இவர் முதற் பராந்தகனின் மூன்றுவது மகன் ஆவர். கண்டராதித்தனுக்குப் பிறகு கி. பி 954-ல் முடிசூட்டப்பெற்றார்.

பள்ளிபடை:- அரசனது சமாதிக்கோயில் பள்ளிபடை என்று அக்காலத்தில் வழங்கப்பெற்றது.

திருச்சுற்றுலை - திருச்சுற்று மாளிகை.

திருமுற்றம் - கோயிற்பகுதி.

மடவிளாகம் - கோயிலைச்சுற்றியுள்ள தெரு.

நுகா - பாலாற்றின் உபநதி.

இராசாசிரயபுரம் - 'இராசாசிரயன்' என்பது இராசராசன் பட்டப் பெயர்களுள் ஒன்று. அவன் பெயரால் 'மேற்பாடி' என்னும் ஊர்க்கு வழங்கிவந்த பெயராகும்.

மும்முடிச் சோழப் பெருந்தெரு - 'மும்முடிச்சோழன்' என்ற இராசராசன் பட்டப்பெயரால் வழங்கிவந்த தெருவாகும்.

ஆச்செருமான் வைரமேகன்:- இவன் மேற்பாடி என்னும் ஊரில் மும்முடிச் சோழப்பெருந் தெருவில்வசித்த ஒருவணிகன். அவனுக்கு ஒரு தோட்டப் பாழான நிலம் இருந்தது. அதன் வடக்குப் பக்கத்தில் நுகா ஆற்றினின்றும் மேற்கு நோக்கிப் போன பெருவழி இருந்தது. அப்பெருவழி இருகோல் அகலம் 87 கோல் நீளம உடையது.

ஆசறுதி - முடிவு.

சோமேழுந்திர சிம்மேஸ்வரம் - மேற்பாடியில் இருந்தகோயில்.

மத்தவாணச்சேரி - சோமேழுந்திர சிம்மேஸ்வர முடையார் தேவரடியார்கள் இருந்த சேரி.

இந்நிலத்தாறே - இந்நிலத்தின் வழியாகவே.

இப்பரிசு - இந்த முறையிலே.

இலுப்பை - மரம் (Bassia Langifolia)

கரணத்தான் - மத்தியஸ்தன். வாரியப் பெருமக்கள் பணித்தவற்றைச் செய்பவன்.

பன்மாஹேஸ்வரரக்ஷை - பன்மகேஸ்வரரக்ஷை. பல சிவனடியார்கள் பாதுகாப்பார்களாக. இது காப்புரை.

பொதுச் செய்தி

பண்டைக் காலத்தில் துஞ்சிஞேரின் நினைவாகக் கோயில் எடுக்கும் வழக்கம் இருந்தது. அக்காலத்தில் நிலவளவாக கோல் என்னும் அளவு பயன்பட்டு வந்தது.

இக் கல்வெட்டில் உள்ள மெய்க்கீர்த்தியில் "முந்நீர்ப் பழந் தீவு பன்னீராயிரமும்" என்றவரி விடப்பட்டிருத்தல் காண்க. அதனல் இக்கல்வெட்டு இராசராசனின் 29வது ஆட்சியாண்டின் முற்பகுதியில் முந்நீர்ப்பழந்தீவை வெல்வதற்கு முன் தரப்பட்டிருத்தல் வேண்டும். 'முந்நீர்ப் பழந்தீவு' என்ருல் கடலாற் சூழப்பட்ட பழந்தீவு என்று பொருள்படும்.

கல்வெட்டு - 8

திருப்பதியம்

ஸ்வஸ்திஸ்ரீ

திருமகள்	போலப்	பெருநிலச்	செல்வியும்
தனக்கே	யுரிமை	பூண்டமை	மனக்கொளக்
காந்தளூர்ச்	சாலை	கலமறுத்	தருளி
வேங்கை	நாடுங்	கங்க	பாடியும்
தடிகை	பாடியும்	நுளம்ப	பாடியும்
குடமலை	நாடும்	கொல்லமும்	கலிங்கமும்
முரட்டெழில்	சிங்களர்	ஈழ	மண்டலமும்
இரட்ட	பாடி	ஏழரை	யிலக்கமும்
முன்னீர்ப்	பழந்தீவு	பன்னீரா	யிரமும்
திண்டிறல்	வென்றித்	தண்டாற்	கொண்டதன்
னெழில்வள	ரூழியு	ளெல்லா	யாண்டுந்
தொழுதக	விளங்கும்	யாண்டே	செழியரைத்
தேசுகொள்	கோராஜ	கேசரி	வன்மரான
ஸ்ரீராஜ	ராஜ	தேவர்க்கு	யாண்டு

இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத் தெண்மரும், இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான ஒருவனும், இவர்களிலே நிலையாய்க் கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேசரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உடையார்

உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும். இவர்களில் செத்தார்க்கும், அனுதேசம் போனார்க்கும் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பம்செய்யவும். அவ்வவர்க்கு அடுத்தமுறைகடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந் நெல்லுப் பெறவும். அவ்வவர்க்கு அடுத்தமுறைகடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும். ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய்மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது

1. பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப் பிச்சனான சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி
2. திருவெணாவல் செம்பொற் சோதியானதக்ஷிண மேருவிடங்கப் பிச்சனான ஞானசிவனுக்கு ,,
3. பட்டாலகன் அம்பலத்தாடியான மனோத்தும சிவனுக்கு ,,
4. பட்டாலகன் சீருடைக் கழலான பூர்வசிவனுக்கு ,,
5. பொற்சுவரன் திருநாவுக்கரையனான பூர்வ சிவனுக்கு ,,
6. மாதேவன் திருஞானசம்பந்தனானஞானசிவனுக்கு,,
7. கயிலாயன் ஆரூரனான தர்ம சிவனுக்கு ,,
8. செட்டியெடுத்த பாதமான கவசசிவனுக்கு ,,
9. இராமன் சம்பந்தனான சத்ய சிவனுக்கு ,,
10. அம்பலவன் பத்தர்கள் ....டனான வாம சிவனுக்கு ,,
11. கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவனுக்கு ,,
12. நக்கன் சீராளனான வாமசிவனுக்கு ,,

13. அப்பி திருநாவுக் கரையனான நேத்திர சிவனுக்கு
நிசதம் நெல்லு முக்குறுணி
14. சிவக்கொழுந்து சீராளனான தர்ம சிவனுக்கு ,,
15. ஐஞ்நூற்றுவன் வெண்காடனான சத்யசிவனுக்கு ,,
16. அரையன் அணுக்கனான திருமறைக்கா......
னான தர்மசிவனுக்கு ,,
17. அரையன் அம்பலக் கூத்தனான ஓங்கார
சிவனுக்கு ,,
18. ஆரூரன் திருநாவுக்கரையனான ஞானசிவனுக்கு ,,
19. கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வசிவனுக்கு ,,
20. ஐஞ்நூற்றுவன் சீயாரூரான தத்புருஷசிவனுக்கு ,,
21. சம்பந்தன் ஆரூரனான வாமசிவனுக்கு ,,
22 அரையன் பிச்சனான தர்மசிவனுக்கு ,,
23. காஸ்யபன் எடுத்த பாதப் பிச்சனான ருத்ர
சிவனுக்கு ,,
24. சுப்ரமண்யன் ஆச்சனான தர்மசிவனுக்கு ,,
25. கூத்தன் அமரபுஜங்கனான சத்யசிவனுக்கு ,,
26. ......வெண்காடனான அகோரசிவனுக்கு ,,
27. மாதேவன் திருநாவுக்கரையனான விஜ்ஞான
சிவனுக்கு ,,
28. கூத்தன் வெண்காடனான ருத்ரசிவனுக்கு ,,
29. ஐஞ்நூற்றுவன் திருவாய் மூரான அகோர
சிவனுக்கு ,,
30. திருமலைக் கூத்தனான வாமசிவனுக்கு ,,
31. ஐஞ்நூற்றுவன் எடுத்த பாதமானதர்மசிவனுக்கு ,,
32. அரையன் தில்லைக் கரைசான பூர்வசிவனுக்கு ,,
33. காளி சம்பந்தனான தர்மசிவனுக்கு ,,
34. காபாலிக வாலியான ஞானசிவனுக்கு ,,
35. வெண்காடன் நமசிவாயமான ருத்ரசிவனுக்கு ,,
36. சிவன் அனந்தனான யோக சிவனுக்கு ,,
37. சிவக்கொழுந்து சம்பந்தனான அகோரசிவனுக்கு ,,

38. இராமன் கணவதியான ஞான சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி
39. பிச்சன் வெண்காடனுன அகோரசிவனுக்கு ,,
40. மறைக்காடன் நம்பி ஆரூரனுன ஞானசிவனுக்கு ,,
41. சோமன் சம்பந்தனுன ஞானசிவனுக்கு ,,
42. சத்தித் திருநாவுக்கரையனுன ஈசானசிவனுக்கு ,,
43. பொற்சுவரன் நம்பி ஆரூரனுன தர்மசிவனுக்கு ,,
44. ஆச்சன் திருநாவுக்கரையனுன நேத்ரசிவனுக்கு ,,
45. ஐயாறன் பெண்ணோர் பாகனுன ஹிருதய சிவனுக்கு ,,
46. ராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகாசிவனுக்கு ,,
47. செல்வன் கணவதி தெம்பனுன தர்மசிவனுக்கு ,,
48. கூத்தன் தில்லைக் கூத்தனுன ஞானசிவனுக்கு ,,
49. உடுக்கை வாசிக்கும் தேவதை கோமபுறத்து தத்தயக்கிரமவித்தன்மகன் சூர்யதேவக்ரம வித்தனுன ஆலால விடங்க உடுக்கை விஜ் ஜாதிரனுன சோமசிவனுக்கு ,,
50. கொட்டி மத்தளம் வாசிக்கும் குணப்புகழ் மருதனுனசிகா சிவனுக்கு ,,

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சை இராசராசேச்சுரக் கோயிலின் வடபுறச் சுவர்.*

அரசன்:- *முதல் இராசராசசோழன்* (கி. பி. *985 - 1014*)

கல்வெட்டுத்தோன்றிய காலம்;- *29-வது ஆட்சியாண்டு* (*கி. பி. 1014*)

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *முதலாம் இராச ராசன், தஞ்சாவூர் இராசராசேச்சுர முடையார்க்குத் திருப் ப்தியம் விண்ணப்பஞ்செய்வதற்குத்திருமுறை ஓதுவார் நாற்பத் தெண்மர், கொட்டி மத்தளம் வாசிப்போன், உடுக்கை*

அடிப்போன் ஆக ஐம்பதின்மரைக் கொடுத்து அவர்கள் நாடோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் நிவந்தம் பெறுமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

1. அவர்களில் செத்தார்க்கும் பிறதேசம் போனார்க்கும் பதிலாக அவ்வவர்க்கு அடுத்த நெருங்கிய இனத்தவர் அந்நெல்லைப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய வேண்டும்.

2. அவர்கள் தகுதியுடையரல்லாதுவிடில் தகுதியுடையவரைத் தேர்ந்தெடுத்துத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லைப் பெறச்செய்யவேண்டும்.

3. அடுத்த நெருங்கிய உறவினர் இல்லையாயின் நியாயத்தாரே தகுதியுடையவரை நியமித்துத் திருப்பதிகம் பாடச் செய்து அந்நெல்லைப் பெறச்செய்யலாம்.

உரைநடைப் பகுதிப் பொருள் விளக்கம்:-

திருப்பதியம் விண்ணப்பம் செய்ய - இது பண்டைய வழக்கம். திருப்பதிகம் ஓத என்பது பொருள். பதிகம் என்பது பத்துப் பாட்டைக்கொண்ட தேவாரத் திருப்பாடல்கள்.

பிடாரர்கள் - தேவாரத்தை இசையுடன் பாடுவோர். (ஓதுவார்)

கொட்டிமத்தளம் - மத்தளத்தின் பெயர். The big drum என்பர் டாக்டர் உல்ஷ்துரை.

பேரால் - ஒவ்வொருவருக்கும்.

இராசகேசரி - இது தஞ்சாவூர் அரண்மனையில் இராசராசன் பட்டப்பெயரால் வழங்கிவந்த மரக்காலின் பெயர்.

ஆடவல்லான் - இது தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் கூத்தப்பெருமான் பெயரால் வழங்கிவந்த மரக்காலின் பெயர். இவ்விரு மரக்கால்களும் ஒரே அளவையுடையன என்பது "இராசகேசரி யோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால்" என்ற கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

உள்ளூர்ப்பண்டாரம் - உள்ளூரில் இருக்கும் கருவூலம் அல்லது பொக்கிஷசாலை (City Treasury)

அனுதேசம் போனார் - அயல்நாடு சென்றவர். (Emigrate)

தலைமாறு - பதிலாக (Instead of)

அடுத்தமுறை கடவார் - அடுத்த நெருங்கிய உறவுடையவர். (The nearest relation)

ஆளிட்டு - ஆள் ஏற்படுத்தி.

8283

நியாயத்தாரே - தொழில் செய்வாரே.

திருவாய் மொழிந்தருளினபடி - கட்டளைப்படி.

பாலன் திருவாஞ்சியத்தடிகள் - இவர் ஊர் திருவாஞ்சியம். திருவாஞ்சியம் என்பது தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில், பெருவேளூர்க்குப் பக்கத்தில் உள்ள தேவாரம் பெற்ற தலமாகும். பெரியபுராணத்தில் "திருவாஞ்சியத்தடிகள பாசமறுத்து ஆட்கொள்ளும் தாள்பணிந்து" என்று கூறப்படுவதால் திருவாஞ்சியத்தடிகள் என்னும் இறைவன் பெயரையே இவனுக்கு இவன் பெற்றோர் வைத்தனர் போலும். இவனது பட்டப்பெயர் இராசராசப் பிச்சன் என்பது. இவனுக்கு சிவதீட்சை செய்விக்கப்பெற்றகாலை வைத்த பெயர் சதாசிவன் என்பது.

ஐஞ்நூற்றுவன் சீயாரூரரான் - ஸ்ரீ ஆரூரர். தஞ்சை ஜில்லா நாகப்பட்டினம் தாலூகாவில் உள்ள திருவாரூரைச் சேர்ந்தவன்.

ஐந்நூற்றுவன் திருவாய்மூரான - திருவாய்மூர். வாய்மூர் என்று பெரிய புராணத்தில் குறிக்கப்படுகிறது. தஞ்சைஜில்லா நாகப்பட்டணம் தாலூகாவில் உள்ளது.

மறைக்காடன் - திருமறைக்காட்டைச் சேர்ந்தவன். இப்பொழுது வேதாரண்யம் (வேதம் - மறை; ஆரண்யம் - காடு) என வழங்குகிறது. கோடிக்கரைக்கு (Point Calimere) வடபால் ஏழாவது மைலில் உள்ளது.

ஐயாறன் - திருவையாறுஎன்னும் ஊரினன். திருவையாறு என்பது ஐந்து ஆறுகள் கூடும் இடத்தில் காவிரியின் வடகரையில் தஞ்சாவூருக்கு வடக்கே 7 மைல் தொலைவில்உள்ளது. ஐந்து ஆறுகள் சூழ்ந்த இடமாதலால் திருவையாற்றில் உள்ள இறைவனுக்கும் "பஞ்சநதீஸ்வரர்" என்னும் பெயர் உண்டாயிற்று.

பெண்ணொர் பாகன் - அர்த்த நாரீஸ்வரன்.

தில்லைக் கூத்தன் - "The dancer at Chidambaram".

சூரியதேவக் கிரமவித்தன் - உடுக்கை வாசிப்பவன். வேதத்தை ஓதும் முறை சம்ஹிதா, பதம், கிரமம், கனம், ஜடா என்று ஐந்துவகைப்படும். இவைகளில் **கிரமம்** என்ற முறைப்படி வேதத்தை ஓதியவன் **கிரமவித்தன்** ஆவன். சூரிய தேவன் என்பது பெயர்.

தேவதைய கோமபுரம் - இதே பெயர் "லெய்டன் சாசனத்தில்" 158ம் வரியிலும், 421ம் வரியிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

குறிப்பு:- தேவாரம் பாடுவோர் நாற்பத் தெண்மரின் பெயர்களும், துணைக்கருவி வாசிப்போர் பெயர்களும் சிவன் என்ற முடிவை உடையன.

கல்வெட்டு - 9

குந்தவையார் சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவதுவரை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருத்தமக்கையார், வல்ல வரையர் வந்திய தேவர் மஹாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் தாம் எழுந்தருளுவித்த திருமேனிகளுக்குக் கொடுத்த பொன் ஆடவல்லான் என்னும் குடிஞைக் கல்லால் நிறை எடுத்தும் ரத்னங்கள்; சரடும் சட்டமும் செப்பாணிகளும், அரக்கும், பிஞ்சும் நீக்கி நிறையுள்ளன நிறையெடுத்தும், அரக்கும் பிஞ்சும் கூட ரத்தினம் கட்டி வேறு நிறை அறியவொண்ணுதன அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேருவிடங்கன்என்னும் காசுக்கல்லால்நிறையெடுத்தும்,கல்லில்வெட்டின தக்ஷிணமேருவிடங்கர்நம்பிராட்டியார் உமாபரமேசுவரியார்க்குக் கொடுத்தன; திருமகுடம் ஒன்று பொன் முன்னூற்று நாற்பத்து எண் கழஞ்சரையே மூன்று மாவும் கட்டின வயிரம் மட்டதாரை அறுநூற்று முப்பத்தாறும், மட்டதாரைச் சவக்கம் நூற்றறுபத்து ஒன்பதும் மட்டதாரைச்சப்படி முப்பத்திர......ஆக வைரம், பொறிவும், முறிவும் ரத்தபிந்துவும், காகபிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட எண்ணூற்று ஐம்பத்தொன்பதினால் நிறை ஏழு கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியும், நாலு மாவும் மாணிக்கம் ஹழஹழன் குணவியன் நூற்று இருபத்தைந்தும் ஹழஹழன் நூற்றிருபத்திரண்டும் கோமளம் நாற்பத்தொன்றும் நீலகந்தி பதினொன்றும் தளம் பத்தும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும், வெஜ்ஜமும், லஸுநியும், த்ராசமும் கற்பற்றும் உடையன உட்படப் பரியனவும்

நெரியனவும் ஆக முன்னூற்றெண்பதினல் நிறை பதினறு கழஞ்சேமுக்காலே இரண்டு மஞ்சாடியும்;

எட்டுமாவும், கட்டினவும், கோத்தனவும், ஆக முத்து வட்டமும், அனுவட்டமும், ஒப்புமுத்தும் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் பழமுத்தும் இப்பிபற்று அராவினவும் சிவந்த நீரும், குளிர்ந்தநீரும் வரையும் கறையும் குறுவும் சுப்பிரமும், உடையன உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக முத்து அறுநூற்று அறுபத்து ஒன்பதினல் நிறை முப்பத்தறு கழஞ்சே மஞ்சாடியும் குன்றியும் ஆகநிறை நானூற்றெழு கழஞ்சே ஒன்பது மஞ்சாடிக்கு விலை காசு ஐயாயிரம்.

வாளி ஒன்று பொன் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் எட்டு மாவும் தைத்தமுத்துவட்டமும், ஒப்புமுத்தும், நிம்பொளமும், குளிர்ந்த வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் திரங்கலும் உடையன உட்பட முத்து ஒன்பதினல் நிறைகழஞ்சே ஒன்பது மாவும் ஆக நிறை இரு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் எழுமாவுக்கு விலை காசு பதினஞ்சு. வாளி ஒன்று பொன் கழஞ்சே எட்டு மஞ்சாடியும், எட்டு மாவும், தெத்த முத்து வட்டமும், ஒப்பு முத்தும், நிம்பொளமும், குளிர்ந்த நீரும், வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் திரங்கலும் உடையன உட்பட முத்து ஒன்பதினல் நிறைகழஞ்சே ஒன்பது மாவும், ஆக நிறை இருகழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் எழு மாவுக்கு விலைகாசு பதினஞ்சு. உழுத்து ஒன்று பொன் இருகழஞ்சே குன்றியும் பளிக்கு வயிரம் ஆறினல் நிறை ஒன்பது மாவும், மாணிக்கம் கோமளம் இரண்டினல் நிறை ஆறு மாவும் தைத்தமுத்து அம்புமுதும் வரையும் அம்புமுது பாடனும் ஆக இரண்டினல் நிறை ஒன்பது மஞ்சாடியும் எழுமாவும் ஆக நிறை இரு கழஞ்சரையே மஞ்சாடியும் எழுமாவுக்கு விலை காசு பதினஞ்சு. உழுத்து ஒன்றுபொன்

இருகழஞ்செ குன்றியும் கட்டின பளிக்குவயிரம் ஆறினுல் நிறை ஒன்பது மாவும் மாணிக்கம் கோமளம் இரண்டினுல் நிறை குன்றியும் தைத்தமுத்து அம்புமுதுபாடனும் குருவும் உடையன இரண்டினுல் நிறை ஒன்பது மஞ்சாடியும் ஒன் பது மாவும் ஆக நிறை இரு கழஞ்சரையே மஞ்சாடியும் எட்டு மாவுக்குவி ....

திருமாலே ஒன்று பொன் எண்பத்தறு கழஞ்சரையே நாலு மஞ்சாடியும், அரை மாவும் கட்டின வயிரந் தூயன எண்பதும், மட்டதாரை இருநூற்றுத் தொண்ணூறும், மட்டதாரைச் சப்படி ஐம்பத்துமூன்றும் பந்தஸாரம் நாலும், சப்படி ஐஞ்சும், சவுக்கம் பதினஞ்சும், உருளே ஐம்பத்தெட் டும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்த பிந்துவும், காக பிந்துவும்வெந்தனவும் உடையனஉட்பட ஐந்நூற்றைஞ்சினுல் நிறை இருகழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாவரையும் மாணிக்கம் ஹழஹழன் குணவியன் இருபதும் ஹழஹழன் முப்பதும் நீலகந்தி ஆறும் கோமளம் முப்பத்து மூன்றும், தளம் இருபதும் சட்டம் ஒன்றும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும் வெஜ்ஜமும், லஸுநியும், திராசமம் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக நூற்றெருபதினுல் நிறை ஐங்கழஞ்சரையே அரைக்காலும் கோத்தமுத்து ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிப்பொளமும் பயிட்டமும் அம்புமுதும் குளிர்ந்த நீரும் சிவந்தநீரும் இப்பி பற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து தொண்ணூற்று நாலினுல் நிறைஒன்பதின் கழஞ்சே குன்றியும் ஆக நிறை நூற்றுமுக்கழஞ்சரையே மஞ்சாடிக்கு விலேகாசு ஆயிரம்.

ஸ்ரீ பாகுவலயம் ஒன்று பொன் எண்பத் தொன்பதின் கழஞ்செ மஞ்சாடியும் மாகாணியம் கட்டின வயிரந் தூயன இருபதும் மட்டதாரை நானூற்று ஆறும், மட்டதாரைச்

சப்படி ஐஞ்சும் மட்டதாரைச் சவக்கம் பத்தும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்த பிந்துவும் காகபிந்துவும் வெந்தன வும் உடையன உட்பட நானூற்று நாற்பத்தொன்றினுல் நிறை முக்கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் முக்காணியும் மாணிக்கம் ஹழஹழன் குணவியன் எட்டும் ஹழஹழன் பதினெழும் கோமளம் பத்தொன்பதும் நீலகந்தி இரண்டும் தளம் எட்டும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும் வெஞ்ச மும் லஸுநியும் இராசமும் கற்பற்றும் உடையன உட் படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்து நாலினுல் நிறை அறுகழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் மூன்று மாவும் கோத்த முத்து வட்டமும், அனுவட்டமும் ஒப்பு முத்தும் குறு முத்தும் பயிட்டமும் குளிந்தநீரும், சிவந்தநீரும் இப்பிபற்றும் அராவினவும் வரையுங் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து அறுபத்து எட்டினுல் நிறை ஐங் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் குன்றியும் ஆக நிறை நூற்று நாற் கழஞ்சரையே நாலு மஞ்சாடிக்கு விலே காசு ஆயிரத்திருநூற்றைம்பது. ஸ்ரீ பாகுவலயம் ஒன்று பொன் எண்பத்தொன்பதின் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் நான்மாவரையும் கட்டின வயிரந் தூயன இருபதும் மட்ட தாரை நானூற்று ஒருபத்து மூன்றும் மட்டதாரைச் சப்படி ஐஞ்சும் மட்டதாரைச் சவக்கம் பத்தும் ஆகவயிரம் பொறி வும் முறிவும் ரத்த பிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்பட நானூற்று நாற்பத்தெட்டினுல் நிறை முக்கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் மும்மாவரையும் மாணிக்கம் ஹழ ஹழன் குணவியன் எட்டும் ஹழஹழன் பதினைஞ்சும் கோமளம் இருபதும் நீலகந்தி இரண்டும் தளம் எட்டும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராசமும் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்து மூன்றினுல் நிறை அறு கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் நரன்குமாவும் கோத்தமுத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்தும் குறு முத்தும்

பயிட்டமும் குளிர்ந்தநீரும் சிவந்தநீரும் இப்பிபற்று அராவின வும்வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட அறுபத்தி ரண்டிஞல் நிறை ஐங்கழஞ்சரையே குன்றியும் ஆக நிறை நூற்று நாற்கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஏழு மாவுக்கு விலை காசு ஆயிரத்து இருநூற்றைம்பது.

ஸ்ரீ சந்தம் ஒன்று பொன் அறுபத்தொன்பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் ஐந்து மாக்காணியும் கட்டின வயிரம் மட்டதாரை முன்னூற்றைம்பதும் மட்ட தாரைச் சவக்கம் நாற்பதும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உடையன உட்பட முன்னூற்றுத் தொண்ணூறிஞல் நிறை கழஞ்சரையே நாலு மஞ்சாடியும் ஆறு மாவும் மாணிக்கம் ஹழஹழன் குணவியன் ஐந்தும் ஹழஹழன் இருபதும் கோமளம் முப்பமும் நீலகந்தி நாலும் சட்டம் இரண்டும் தளம் பத்தொன்பதும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராசமம் கற்பற்றும் உடையனவும் பரியனவும் நெரியனவும் ஆக எண்பதிஞல் நிறை அறு கழஞ்சே ஏழு மஞ்சாடியும் எட்டுமாமுக்காணியும் கோத்தனவும் தைத்தனவும் ஆக முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் பயிட்டமும் நிம்பொளமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பிபற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து ஆயிரத்து நாநூற்று அறுபத்திரண்டிஞல் நிறை தொண் நூற்று அறு கழஞ்சே காலும் ஆக நிறை நூற்று எழுபத்து நாற் கழஞ்சே காலுக்கு விலைகாசு ஆயிரத்தைஞ்ஞூறு.

திருக்கைப்பொட்டு ஒன்று பொன் பதினெண் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் எட்டு மாவும் மாணிக்கம் கோமளம் ஒன்று நிறை மஞ்சாடியுங் குன்றியும் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறு முத்தும்

நிம்பொளமும் பயிட்டமும குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து நூற்று முப்பத்தேழினுல் நிறை ஏழு கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை இருபத்தறு கழஞ்சேய் முக்காலே நாலு மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு எண்பது.

திருக்கைப் பொட்டு ஒன்று பொன் பதிணெண் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மாணிக்கம் கோமளம் ஒன்று நிறை மஞ்சாடியும் மூன்று மாவும் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்தும் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் வரையுங் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து நூற்று நாற்பத்து மூன்றி ஞல் நிறை எண் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் ஆக நிறை இருபத்தறு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலைகாசு எண்பது சூடகம் ஒன்று பொன் எண்பதின் கழஞ்சே நாலு மஞ்சாடியும் அறுமாவரையும் கட்டின வயிரந்தூயன முப்பதும் மட்டதாரை நானூற்றுமூன் றும் மட்டதாரைச் சவக்கம் எழுபதும் மட்டதாரைச் சப்படி முப்பத்தைஞ்சும் உருளை எண்பத்திரண்டும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்படஅறுனூற்று இருபதிஞல் நிறைநாற்கழஞ்சே ஏழுமாவும் மாணிக்கம் ஹழஹழன் குணவியன் பத்தும் ஹழஹழன் இருபத்துநாலும் கோமளம் பதினேழும் நீலகந்தி நாலும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும் வெஜ்ஜமும் லஸுநியும் த்ராசமம் கற்பற்றும் உடையனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்துஐஞ்சிஞல் நிறைகழஞ்சரையே மஞ்சாடியும் ஒரு மாவரையும் ஆக நிறை எண்பத்தைங் கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் குன்றிக்கு விலைகாசு எண்ணூறு. சூடகம் ஒன்று பொன் எண்பத்து நாற் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் கட்டின வயிரங்

தூயன முப்பதும் மட்டதாரை நாநூற்றைம்பத்தாறும் மட்ட தாரைச் சவக்கம் எழுபதும் மட்டதாரைச்சப்புடி முப்பத் தாறும் உருளை எண்பத்து மூன்றும்ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்பட அறுநூற்று எழுபத்தைஞ்சினுல் நிறை நாற்கழஞ்சே நாலு மஞ்சாடியும் குன்றியும் மாணிக்கம் ஹழஹழன்குணவியன் பத்தும் ஹழஹழன் முப்பத்தொன்றும் கோமளம் பதினாறும் நீலகந்தி மூன்றும ஆக மாணிக்கம் குழிவும் பிரஹாரமும் வெஜ்ஜமும் லஸுநியும் திராசமம் கற்பற்றும் உடையனவும் உட்படப்பரியனவும் நெரியனவும் ஆக அறுபதினுல் நிறை கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் குன்றியும் ஆக நிறை தொண்ணூறு கழஞ்சே முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு எண்ணூறு.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சாவூர்ப் பெரியகோயிலின் தென்புறச் சுவரில் இரண்டாவது அடுக்கில் உள்ளது.*

அரசன்:- *முதல் இராஜேந்திரசோழன். (கி. பி. 1012 - 1044)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *மூன்றும் ஆட்சி யாண்டிற்குமுன். கி. பி. 1015 க்கு முன்.*

அரசனைப்பற்றிய குறிப்பு:- *இவன் முதல் இராசராசனின் புதல்வன். இளமையில் மதுராந்தகன் என்று பெயர்பெற்றிருந்த தாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இராஜ ராஜ சோழனுக்கு வானவன் மாதேவிபால் பிறந்தவன் இவனை 'இறைவன் நெற்றிக்கண் காணுத மற்றொரு காமவேள்' என்றும் அச்செப்பேடு பகர்கின்றது. இவனது மெய்க்கீர்த்தி "திருமன்னி வளர இருநில மடந்தையும்" என்று தொடங்குவதாகும். இவன் "கடாரங்கொண்ட சோழன்" 'கங்கைகொண்டசோழன்' எனவும் அழைக்கப்பட்டான். இவன் சைவ சமயத்தில் பெரிதும் ஈடு*

பாடுடையவன். எனினும் புறச் சமயத்தையும் போற்றும் பண்புடையவன். இவன் கங்கைகொண்ட சோழபுரத்துத் திருக்கோயில் எடுப்பித்தவன்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

இராஜராஜதேவர் தமக்கையார் வல்லவரையர் வந்திய தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார், தஞ்சைக் கோயிலில் தாம் எழுந்தருளுவித்த திருமேனிகளுக் குக் கொடுத்த அணிகலன்களில் பொன்னை ஆடவல்லான் என்னும் குடிஞைக்கல்லால் நிறை எடுத்தும ரத்னங்களைத் தக்ஷிணமேருவிடங்கன் என்னும் காசுக் கல்லால்நிறை எடுத்தும் கல்லில்வெட்டிய செய்தி இதில் கூறப்பட்டுள்ளது.

பொருள் விளக்கம்:-

வல்லவரையர் வந்தியதேவர் - இவர் இராசராசனின் தமக்கையான குந்தவைப் பிராட்டியாரின் கணவன் ஆவர். வட ஆற்காடு ஜில்லாவில் பிரமதேசம என்ற ஊரைச் சூழ்ந்த பகுதிகளை அரசாண்டவர். சேலம் ஜில்லாவில் ஒரு பகுதி வல்லவரையர் நாடு என்று அக்காலத்தில் வழங்கப்பெற்றது. வல்லவர் என்று தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றவர்கள் சளுக்கியரும் இராட்டிரகூடருமேயாவர். ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற வல்லவரையர் கீழைச் சளுக்கிய வேந்தன் ஆவர் "வல்லவரையன் வாண்டிய தேவர்" என அழைக்கப் பெறுவர். இவனது வேறொரு மனைவி குந்தளதேவி என்பவள். மற்றொருத்தி குந்தாதேவியார். இவ்வல்லவரையர் சோழரின் சிறந்த படைத்தலைவர்.

ஆழ்வார் - மரியாதைப் பெயர். ஆண்பாலரை 'உடையார்' என்றும், பெண்பாலரை 'ஆழ்வார்' என்றும் கூறுதல் பண்டை மரபு.

பெரியகுந்தவையார் - சுந்தர சோழனுடைய மகள். முதல் இராசராசனின் தமக்கையார். முதல் இராசராசனின் மகள்

குந்தவை எனப் பெயர் பெற்றவளாதலின் இவள் பெரிய குந்தவையார் எனப்பட்டாள். இவர் வல்லவரையர் வந்தியத் தேவரை மணந்துகொண்டார். முதல் இராசராசன் தஞ்சையில் எடுப்பித்த கோயிலில் இவ்வம்மையார் தன் தந்தை சுந்தர சோழன் படிமத்தையும தாய் வானவன் மாதேவி படிமத்தையும் எழுந்தருளுவித்தார். தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் சுந்தரசோழ விண்ணகர ஆதுரசாலை என்ற மருத்துவ நிலையம் ஒன்றை நிறுவினர். முதல் இராசராசன் சிறந்த சிவபக்தனுகை விளங்கியதற்கு இவளே காரணம்.

இவள், தக்ஷிண மேருவிடங்கர் நம்பிராட்டியார் உமா பரமேஸ்வரியார்க்குக் கொடுத்த அணிகலன்களாவன:-

(1) திருமகுடம் (2) வாளி (காதணி) (3) வாளி (4) உழுத்து (5) திருமாலை (6) ஸ்ரீ வாகுவலயம் (7) ஸ்ரீசந்தம் (8) திருக்கைப்பொட்டு (9) சூடகம் (10) சூடகம் (11) ஸ்ரீவாகு வலயம் (12) உழுத்து

குடிஞைக்கல் - நகரத்தில் எடைக்குப் பயன்படும் கல்.

தக்ஷிணமேருவிடங்கன் - இரத்தினங்களை எடைபோடும் கல். (3 மா $\frac{3}{20}$ கழஞ்சு.)

வைரம்:-

திருமகுடத்தின் நிறை - பொன் $348\frac{1}{2}$ கழஞ்சு 3 மா.

சவக்கம் - சதுரம்.

மட்டதாரை - வைரத்தின் வகை.

சப்படி - தட்டையாக இருப்பது.

பொறிவு - புள்ளிகளையுடைய வைரம்.

முறிவு - உடைப்புடைய வைரம்.

ரத்த பிந்து - செம்புள்ளியுடையவை.

காகபிந்து - கரும்புள்ளி யுடையவை.

வெந்தன - வெந்தன போன்றிருப்பவை.

மாணிக்கம் :-

குணவியன் - சிறந்தவை (A good quality)

தளம் - பளபளப்பில்லாத மாணிக்கம்.

குழிவு - குழிந்திருப்பது.

ப்ரஹரம் - கோடு முதலிய பட்டிருப்பது.

வெஜ்ஜம் - துளையிருப்பது.

லஸுநி - வெள்ளைப்புள்ளியுடையது.

த்ராசமம் - குறைபாடுடையது.

கற்பற்று - கல்லொடு பொருந்தியது.

பரியன - பெரியவை.

நெரியன - நெரிந்தவை.

நீலகந்தி - நீலகந்திகா என்னும் விலையுயர்ந்த சிவப்பு நிறம் பொருந்திய கல். (இராசநிகண்டு)

அம்புமுது பாடன் - பாடன் - சித்திர வேலைப்பாடுமிக்க விலையுயர்ந்த கல்.

முத்து வகைகள் :-

வட்டம் - வட்டமாய் இருப்பது. சூடகம் - கன்னடியர் இதனைச் சுடியா என வழங்குவர்.

அனுவட்டம் - சிறிய வட்டம்.

ஒப்புமுத்து - பளபளப்பு உடையது.

குறுமுத்து - சிறியவை.

பழமுத்து - பழையமுத்து.

இப்பிபற்று - இப்பியுடன் சேர்ந்திருப்பது.

அராவின - பளபளப்புடையன (இப்பியுடன்)

சிவந்தநீர் - சிவந்த நீரோட்டமுடையன.

குளிர்ந்தநீர் - நல்ல நீரோட்டமுடையன.

வரை - கோடுகளுடையவை.

கறை - கறை படிந்தது (புள்ளிகளுடையது)

குரு - சிவந்த புள்ளிகளையுடையது.

சுப்பிரமம் - வெள்ளைப் புள்ளிகளை யுடையது. (White specks)

பொதுச் செய்தி

(1) அக்கால அளவைகள் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி, மா.

(2) எடை போடுவதற்குப் பயன்பட்டகல் குடிஞைக்கல், காசுக்கல், தக்ஷிணமேருவிடங்கன் முதலியன.

கல்வெட்டு - 10

தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 2

ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்கு ஸ்ரீ கார்யஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் தான் எழுந் தருளுவித்த நம்பியாரூரனார்க்கும் திருஞானசம்பந்தடிகளுக் கும் திருநாவுக்கரைய தேவர்க்கும் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவது வரை கொடுத்த தாரா நிலை விளக்கு ஒன்று இருப்பு நாராசம் உட்பட நிறை நாற்பத் தொருபலவரை. இவனே தான் எழுந்தருளுவித்த பெரிய பெருமாளுக்குக் கொடுத்த தாராநிலை விளக்கு ஒன்று இருப்புநாராசம் உட்பட நிறை நூற்றிருபதின்பலம். வெண் கல மடல் ஒன்று நிறை நாற்பலம்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சாவூர்க் கோயிலின் மேற்குப்புறச் சுவரிலுள்ள ஒரு மாடத்தில் உள்ளது.*

அரசன்:- *முதல் இராசேந்திர சோழன் கி. பி. 1012 - 1044*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *3ம் ஆட்சி யாண்டு கி. பி. 1015.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

பொய்கை நாடு கிழவன், தென்னவன் மூவேந்தவேளான் என்பவன் தஞ்சைப் பெரியகோயிலில் சுந்தரர், சம்பந்தர், அப்பர் இவர்கட்குப் படிமம் அமைத்து தாரா நிலைவிளக்கு

ஒன்று கொடுத்துள்ளான். அதன் நிறை $41\frac{1}{2}$ பலம். மற்றும் இவன் முதலாம் இராசராசன் படிமத்தை எழுந்தருளுவித்து தாராநிலைவிளக்கும், வெண்கல மடல்ஒன்றும் அளித்துள்ளான். தாராநிலைவிளக்கு நிறை 120 பலம் உடையது. வெண்கல மடல் 4 பலம் நிறையுள்ளது.

பொருள் விளக்கம் :-

தாரா - 8 பாகம் செம்பு 5 பாகம் காரீயம் கலந்த உலோகம்.

நாராசம் - இரும்புக் கம்பி (துண்டுகோல்அல்லது உள்ளிடு கம்பியுமாம்)

கல்வெட்டு - 11

தென்னவன் மூவேந்த வேளான் சாசனம் 3

...............ன் மூவேந்த வேளான் யாண்டு மூன்ருவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகளும் ப்ரதிமங் களும் உடையார்கோயிலில் முழத்தால் அளந்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்தும் ரத்னங்கள் சரடு நீக்கி தக்ஷிணமேரு விடங்கன் என்னும் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின. பாதாதி கேசாந்தம் முக்காலே அரைக்கால் முழ உசரத்து எட்டு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த க்ஷேத்ரபால தேவர் ஒருவர். இவர் எழுந்தருளிநின்ற ஒன்பதிற்று விரல் உசரத்து 'ஒன்பதிற்று விரல் சமசதுரத்து பத்மத் தொடுங் கூடச் செய்த பீடம் ஒன்று. இவர்க்கே இவன் கொடுத்த திரள்மணிவடம் ஒன்று பொன் கால். சுருக்கின வீரபட்டம் ஒன்று பொன் எழுமஞ்சாடி. திருக்குதம்பைத்தகடு இரண்டு பொன் மூன்றுமஞ்சாடி. பாதாதி கேசாந்தம் பதினெண்விரல்

உசரத்து இரண்டு ஸ்ரீஹஸ்தம் உடையராய் ஆடுகிறுராகக் கனமாக எழுந்தருளுவித்த ஸ்ரீ பைரவ மூர்த்திகள் ஒருவர். இவர் எழுந்தருளி நின்ற ஒன்பதிற்று விரல் உசரத்து எண் விரல் அகலத்து பத்மத்தொடுங் கூடச்செய்த பீடம் ஒன்று இவர்க்கே இவன் கொடுத்த திரள்மணி வடம் ஒன்று பொன் நாலு மஞ்சாடி வடம் ஒன்றிற் கோத்த முத்துக்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் ஆகமுத்து முப்பத்து மூன்றிஞல் நிறை அரைக்கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றிக்குக் காசு கால். வடம் ஒன்றிற்கோத்த முத்துக்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் ஆகமுத்து முப்பத் தேழிஞல் நிறை எட்டு மஞ்சாடிக்கு காசுகால். பாதாதிகேசாந்தம் பதினெழுவிரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச்செய்த சிறுத்தொண்டநம்பி ஒருவர். இவர்க்கே இவன்கொடுத்தன. திரண்மணி வடம்ஒன்று பொன் மூன்று மஞ்சாடியுங் குன்றி. ருத்ராக்ஷக்காறை உருத்திராக்ஷம் நீக்கி பொன் அரைக் கழஞ்சே மஞ்சாடி. பாதாதி கேசாந்தம் பதிணைவிரல் (15) உசரத்துக் கனமாகச்செய்த திருவெண்காட்டு நங்கை ஒருவர். இவர்க்கே இவன் கொடுத்தன பட்டைக்காறையிற் கோத்த தாலி உட்பட பொன் ஒன்பது மஞ்சாடியுங் குன்றி. பாதாதி கேசாந்தம் பன்னிருவிரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த சீராளதேவர் ஒருவர். இவர்க்கே இவன் கொடுத்தன சுருக்கின வீரபட்டம் ஒன்று பொன் நாலுமஞ்சாடி. திருக்குதம்பைத் தகடு இரண்டு பொன் மஞ்சாடியுங் குன்றி. பட்டைக்காறையுஞ் சூலமும் பொன் அரைக் கழஞ்சே நாலுமஞ்சாடியுங் குன்றி. பிரதிமங் கள் மூவரும் நின்ற இருபத்துமூவிரல் நீளத்து எழுவிரல் அகலத்து பத்மத்தொடுங் கூட எண்விரல் உசரத்து பத்மத் தொடுங் கூடச்செய்த பீடம் ஒன்று.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சைப் பெரியகோயிலின் மேற்புறச் சுவற்றின் அடித்தளத்தில் உள்ளது.*

அரசன்:- முதல் இராஜேந்திர சோழன் (கி. பி. 1012 - 1044)

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- மூன்றும் ஆட்சி யாண்டு.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

இராஜேந்திரனது மூன்ருவது ஆட்சியாண்டில் தென்னவன் மூவேந்த வேளான் என்பவன் தஞ்சைப் பெரிய கோயிலில் பீடங்களுடன் க்ஷேத்ர பாலதேவர், பைரவமூர்த்தி ஆகிய இருகடவுள் படிமங்களும், சிறுத்தொண்ட நம்பி, திருவெண் காட்டு நங்கை, சீராளதேவன் ஆகிய மூவர் படிமங்களையும் ஒரே பீடத்தில் அமைத்து அவற்றிற்குக் கீழ்க்கண்டவாறு அணி கலன் அளித்துள்ளான்.

க்ஷேத்ரபாலதேவர்:- (1) திரள்மணிவடம் (2) திருக் குதம்பைத்தகடு 2 (3) வீரபட்டம்.

பைரவமூர்த்தி:- திரள்மணிவடம் (2) முத்துவடம்

சிறுத்தொண்டநம்பி:- (1) திரள்மணிவடம் (2) உருத்தி ராக்ஷக்காறை.

திருவெண்காட்டு நங்கை:- பட்டைக்காறையில் கோத்த தாலி.

சீராளதேவர்:- (1) வீரபட்டம் (2) திருக்குதம்பைத்தகடு (3) பட்டைக்காறை.

பொருள் விளக்கம்.-

மூவேந்த வேளான் - இவன் ஐந்தாம் கல்வெட்டிலும், பத்தாம் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்ற ஸ்ரீ கார்யஞ்செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவனே யாவன்.

இராசராசன் காலத்தில் அதிகாரியாக இருந்த "வேளான் உத்தம சோழனுகிய மதுராந்தக மூவேந்த வேளான்" என்பவனே இங்குக் குறிக்கப்பெற்றவன் என ஐயுறுவார்க்கு இது கூறப்பட்டது.

க்ஷேத்ரபாலதேவர் - தலத்திற்குரிய கடவுள் அல்லது பைரவர்.

ஸ்ரீ ஹஸ்தம் - திருக்கை.

திரள்மணிவடம் - திரண்ட உருத்திராக்கமாலை.

சுருக்கின வீரபட்டம் - தலையுடன் சுற்றிப்பொருத்தி வைக்கப்படும் பொற்றகடு.

திருக்குதம்பைத் தகடு - காதணி.

18 விரல் - $1\frac{1}{2}$ சாண் - $\frac{3}{4}$ முழம்.

ருத்திராக்ஷக்காறை - உருத்திராக்கங்களைக் கோக்கக்கூடிய கயிறு.

சிறுத்தொண்டர் - ஊர் திருச்செங்காட்டங்குடி. இவர் இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் காலத்து அரசன் நரசிம்மவர்ம பல்லவன் I. இவனது படைத் தலைவனுக அமர்ந்து வாதாபியை வென்று அதை அழித்துப் பல பொருள்களையும் கவர்ந்து அரசன் முன் கொணர்ந்தார் சிறுத்தொண்டர். இச்செய்தி பெரிய புராணத்தில்,

"மன்னவர்க்குத் தண்டுபோய் ... ...
... ... இகலரசன் முன்கொணர்ந்தார்"

என்று காணப்படும் பாடலால் நன்கு விளங்குகிறது. இவர் காலத்து அரசனுகிய நரசிம்மவர்மன் இவரது சிவபக்தியை அறிந்து ஓய்வளித்தார். திருச்செங்காட்டங்குடியில் இருந்து அடியார்களுக்குத் திருவமுது அளித்துவந்தார். இவர் மனைவி பெயர் திருவெண்காட்டு நங்கை. மகன் சீராளதேவன் எனப்படுபவன். ஒருநாள் சிவபெருமான் பைரவ உருவம் தாங்கி

வந்து பிள்ளைக்கறி கேட்க, தன் மகனையே வாளால் அரிந்து கறியாக்கியிட்டனர். 'மகன் எங்கே' என்று வந்த பைரவர் கேட்க, இப்போது 'உதவான் அவன்' என்று சிறுத்தொண்டர் பதில் அளித்தார். பைரவரின் உத்தரவுக்கு இணங்கத் தொண்டரும் அவர்மனைவியும் தெருவில் சென்று மகனே! சீராளா!! வருக!!! என்றழைத்தார்கள். சீராளனும் வந்தான். பைரவரும் மறைந்தார். இறைவன் விடைமீது காட்சி கொடுத்தார்.

" அன்பின் வென்ற தொண்டரவர்க்கு
அமைந்த மனைவியார் "

என்று சேக்கிழார் திருவெண்காட்டு நங்கையைக் கூறுகின்றார்.

" தொண்டனுக்கு எந்நாளும் சோறளிக்கும் தொண்டர் " என்று சிறுத்தொண்டரைப் புகழ்கின்றார்.

கல்வெட்டு - 12

தென்னவன் மூவேந்தவேளான் சாசனம் 4

(A. On the east face of the first pillar)

ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிவர்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவது உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரமுடையார்க்கு ஸ்ரீகார்யஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் யாண்டு மூன்றாவது வரை செய்வித்த செப்புப் பிரதிமங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்னங்கள் தக்ஷிணமேருவிடங்கன் என்றும் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின. பாதாதி கேசாந்தம் இரு

பதிற்று விரல் உசரத்து இரண்டு கையுடையராகக் கனமாகச் செய்த தத்தாநமரேகாண் என்ற மிலாடுடையார் ஒருவர். இவர் நின்ற பதிற்று

(B. On the east face of the second pillar)

விரல் நீளத்து எண்விரல் அகலத்து எண்விரல் உசரத்து பத்மத்தொடுங் கூடச் செய்த பீடம் ஒன்று. இவனே இவர்க்குக் கொடுத்தன. உருத்திராக்ஷம் ஒன்றிற் கட்டின பொன் எழுமஞ்சாடி உட்பட உருத்திராக்ஷம் ஒன்று நிறை அரைக் கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலைகாசு ஒன்று.

பொருள் விளக்கம்:-

தத்தா நமரே காண்:- Oh Tattan! (he is) one of us; see! *இவ்வாறு கூறியவர் மெய்ப்பொருள் நாயனார். இவர் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் - என்ற சிவநெறியின்கண் ஒழுகியவர். இவர் திருக்கோவலூரில் வாழ்ந்த மிலாடர் கோமான். அன்பர் வேடமே சிந்தை செய்தவர். அடியார்களுக்குக் குறைவறக் கொடுத்தவர். இவருக்கு முத்தநாதன் என்ற பகைவனிருந் தான். அவன் நாயனாரைக் கொல்லக் கருதி மெய்யடியார் வேடம் பூண்டு சென்று, துயிலினின்றும் நாயனாரை எழுப்பச் செய்து, நாயனார் வணங்கும் பொழுது தனது உடைவாளால் வெட்டினான்.* **தத்தன்** *என்ற வாயிற்காவலன் இதனையறிந்து முத்தநாதனைக் கொல்ல வாளை ஓங்க உடனே நாயனார் "தத்தா நமர்" (அவர் நம்மவர்) என்று கூறி "இவ்வடியார்க்கு எவராலும் இங்கு நேரக் கூடாது" என்றும் சொல்லி கீழே வீழ்ந்தார். இக் கருத்தமைந்த பாடல் திருத்தொண்டர் திருவந்தாதியில் காணலாம். பாடல் வருமாறு:-*

"கற்றநங் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புகலும் திருவாய்
மற்றவன் "தத்தாநமர்" எனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளாமென்று பேசுவரே"

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சாவூர்க் கோயிலின் மேற்குத் திருச்சுற்று மாளிகையில் உள்ள இரண்டு தூண்களில் உள்ளது.*

அரசன்:- *முதல் இராசேந்திரசோழன் (கி. பி. 1012-1044)*

கல்வெட்டுத்தோன்றிய காலம்;- *3-வது ஆட்சியாண்டு கி. பி. 1015)*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சைப்பெரிய கோயிலில் 63 நாயன்மார் களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனுர்க்குப் (மிலாடுடையார்) பீடத்துடன் கூடிய படிமம் ஒன்று அமைத்து அதற்குக் கண் மணிமாலை ஒன்று கொடுத்துள்ளான்.*

கல்வெட்டு - 13

சாமுண்டப்பை நிபந்தம்

ஸ்வஸ்திஸ்ரீ

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த

சுந்தர முடியு மிந்திர ணாமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண்கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு
பீடிய லிரட்டபாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளை இய நாமணைக் கோணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் றெல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணறத் தாக்கித்
திக்கிணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்

தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்குவொட்டல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்தர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
மாப்பொரு தண்டாற்கொண்ட கோப்பரகேசரி
வர்மரான

உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு உ௨வது ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் பங்கள நாட்டு நடுவில் வகை முகை நாட்டுப் பள்ளிச்சந்தம் வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை ஜிநாலயத்துத் தேவற்குப் பெரும் பாணப்பாடிக்கரை வழிமல்லியூரில் இருக்கும் வியாபாரி நந்நப்பயன் மணவாட்டி சாமுண்டப்பை வைத்த திருநந்தா விளக்கு ஒன்றினுக்குக் காசு இருபதும் திருவமுதுக்கு வைத்த காசு பத்தும்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *போளூருக்கு அருகில் உள்ள திருமலையின் உச்சிப்பாறையில் இருக்கின்றது.*

அரசன்:- *முதல் இராஜேந்திரசோழன் (கி. பி. 1012 - 1044)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *12வது ஆட்சியாண்டு. கி. பி. 1024.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *இராசேந்திரனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் பெரும்பாணப்பாடிக்கரை வழிமல்லியூரில் இருக்கும் வியாபாரி நன்னப்பையன் மணவாட்டி சாமுண்டப்பை என்பவள், ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்கள நாட்டு நடுவில் உள்ள வகை முகைநாட்டுப் பள்ளிச் சந்தம் வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை சினாலயத்தில் உள்ள தேவற்கு ஒரு நந்தா விளக்கு வைத்து அதற்கு இருபது காசும், திருவமுதுக்குப் பத்துகாசும் நிபந்தமாக அளித்துள்ளாள்.*

மெய்க்கீர்த்திப்பகுதிப் பொருள் விளக்கம்:-

திருமன்னி வளர - திருமகள் நிலைபெற்று வாழ.

இருநிலமடந்தை - பெரிய நிலமகள்.

போர்ச் சயப்பாவை - வெற்றித் திருமகள்.

சீர்த்தனிச்செல்வி - கீர்த்திக்குரியவள். [இராசேந்திரன் செல்வமும், பெரியநிலப்பரப்பும், வெற்றி மேம்பாடும், மிக்க புகழும் உடையவன் என்று இதனால் தெரிகிறது.]

நெடுதியல் ஊழியுள் - நெடுநாளாக நிலைபெற்று வருகின்ற ஊழியுள்.

இடைதுறைநாடு - கிருஷ்ணை துங்கபத்திரைக்கும் இடைப் பட்டசமவெளி. இதனை இப்போது "ரெய்ச்சூர்" என வழங்கும் கோட்டம் எனலாம். இஃது "எடதொறே இரண்டாயிரம்" என்று கன்னடர் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

வனவேலி - காட்டை வேலியாகவுடைய.

படர் - விரிந்த.

வனவாசி - மத்திய பிராருக்குத் தென்பகுதி.

சுள்ளிச் சூழ் - காட்டரணையுடைய.

கொள்ளிப்பாக்கை - ஐதராபாத்துக்கு 45 கல் வடகிழக்கே உள்ளது. இதன் இன்றைய பெயர் "கூல் பாக்" என்பது. இது "கொள்ளிப்பாக்கை ஏழாயிரம்" எனப்படும்.

நண்ணற்கருமுரண் - கிட்டுதற்கரிய மாறுபாடு.

மண்ணைக் கடக்கம் - இராட்டிர கூடர்க்குத் தலைநகராக இருந்தது. சிறிது காலம் மேலைச் சளுக்கியரும் இதனைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். மண்ணைக் கடக்கம் இப்பொழுது 'மான்ய கேடம்' என வழங்குகிறது. "நண்ணற்கருமுரன்" என்ற

அடைமொழியால் இதன் மதில் கடக்க முடியாத வன்மை யுடையது எனத் தெரிகிறது. இதனை இராசேந்திர சோழன் வென்றனன் என்பதை திருவொற்றியூர் மண்டபம் ஒன்றுக்கு இடப்பட்ட 'மண்ணைகொண்ட சோழன்'' என்ற பெயரால் அறியலாம்.

பொருகடல் ஈழம் - கடல் அலையால் மோதப்படும் இலங்கை.

முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த - முற் கூறிய இலங்கை அரசரிடத்தில் பாண்டியர் வைத்த.

சுந்தர முடியும் - அழகிய கிரீடத்தையும்.

இந்திரன் ஆரமும் - இந்திரன் பாண்டியனுக்குக் கொடுத்த முத்தாரமும்.

ஈழப்போர் - இராசராசன் காலத்தில் தோற்று ஒளிந்த ஐந்தாம் மஹிந்தன் சில ஆண்டுகள் கழித்துச் சோழ நாட்டுக்கு உட்பட்ட ஈழப் பகுதியை மீட்க முயன்றான். இதனையறிந்த இராசேந்திரன் ஈழத்திற்குச் சென்று வென்று, ஈழத்தரசனுக் கும் அவன் மனைவியர்க்குமுரிய முடிகளையும் அணிகலன் களையும் பொன்மணிகளையும் கைப்பற்றி மீண்டான். இவற் றுடன் ஒரு நூற்றாண்டுக்கு முன் இராசசிம்ம பாண்டியன் அங்கு விட்டிருந்த மணிமுடியையும், முத்தாரத்தையும் கைப் பற்றிக்கொண்டான்.

எறிபடை - ஈட்டிப்படை. கேரளன் - சேரன்.

பல்பழந்தீவு - மாலடிவ்ஸ் (Maladives) என்று அழைக்கப் படும் அராபிக்கடல் தீவுகள்.

இராசேந்திரன் சேர மன்னன் சிரீடத்தையும் பெற்றான். அராபிக் கடலில் உள்ள பழந்தீவுகளை வென்றுகொண்டான்.

சாந்திமத்தீவு - அரபிக் கடலிலிருந்த ஒரு தீவாதல் வேண்டும்.

யாவரும் கிட்டுதற்கரிய அரண்களையுடைய சாந்திமத்தீவில் பரசுராமனால் வைக்கப்பட்டிருந்த செம்பொன் முடியையும் ராசேந்திரன் சேரநாட்டுப் படையெடுப்பின்போது கவர்ந்து கொண்டான்.

இருபத்தொருகால் - இருபத்தொரு முறை.

அரசு களை கட்ட - அரசாகிய களைகளைக் களைந்த

முயங்கி - இது பல்லாரிக் கோட்டத்திலுள்ள 'உச்சங்கி துர்க்கம்' என்பர் சிலர். 'ஐதராபாத் சமஸ்தானத்தில் உள்ள 'மாஸ்கி' என்பதாகும்' என்பர் சிலர். இராசேந்திரன் இவ்வூரில் மேலைச் சளுக்கிய மன்னனாகிய சயசிங்கனைப் போரில் வென்று இரட்பாடி ஏழரை இலக்கத்தைக் கைப்பற்றினான். சயசிங்கன் மேலைச்சளுக்கிய வம்சத்து ஆகவமல்லனது தகப்பன். ஐந்தாம் விக்கிரமாதித்தனது தம்பியாகும். கி. பி. 1015 முதல் 1042 முடிய அரசாண்டவன்.

நவநிதி - (1) சங்கநிதி (2) பதுமநிதி (3) மகாபதுமநிதி (4) மகரம் (5) கச்சபம் (6) முகுந்தம் (7) குந்தம் (8) நீலம் (9) வரம்

விக்கிரம வீரர் - வலிமைபொருந்திய வீரர்.

சக்கரக்கோட்டம் - விசாகப்பட்டினம் ஜில்லாவிற்கு வட மேற்கே மத்திய மாகாணத்தில் வத்சராச்சியத்தில் இருந்த ஒரு நகரமாகும்.

காமிடை வளை இயநாமணக்கோணை - பூஞ்சோலைகள் நெருங்கிய வளப்பமுள்ள நாமணைக்கோணை என்னும் ஊர்.

நாமணைக்கோணை, மதுரமண்டலம், பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் -இவைகள் வேங்கி நாட்டை ஒட்டிய பகுதிகள்.

பாசடைப்பழனம் - பசுமையான இலைகளும்வயல்களுமுள்ள.

ஆதிநகர் - இந்நகரில் இராசேந்திரன் இந்திரரதன் என்பவனை வென்று ஒட்டரதேசத்தையும் கோசலநாட்டையும் பிடித்துக்கொண்டான்.

ஒட்டரதேசம் - ஒரிஸா.

கோசலம் - ஒரிசாவுக்கு அண்மையில் உள்ள மகாகோசலம் என்னும் ஊர் ஆகும்.

பூசுரர் - பிராமணர்

தண்டபுத்தி - ஒட்டரதேசத்துக்கும் வங்காளத்துக்கும் நடுவில், சுவர்ணரேகை யாற்றுக்கு இரு கரையிலும் உள்ளநாடு.

தன்மபாலன் - பாலவம்சத்தைச் சேர்ந்த அரசன்.

தக்கணலாடம் - தக்ஷிண விராடம். (ராடா)

கோவிந்த சந்தன் - வங்காளத்து அரசனுகிய மஹிபாலனது போர்ப் படைத்தலைவன்.

ஒட்டல் - காதணி (Ear Rings)

சங்கு - Bracelets)

வெஞ்சமர் விளாகத்து - போர்க்களத்து.

உத்தரலாடம் - தற்போதுள்ள குஜராத் தேசம் (Modern Gujarat)

எறிபுனல் கங்கை - ஓடுகின்ற நீரையுடைய கங்கை.

வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கை - கங்கை புண்ணிய நதி என்பது இதனுல் தெரிகிறது.

உரைநடைப் பகுதிப் பொருள் விளக்கம்:-

பள்ளிச் சந்தம் - புத்த சைன கோயிலுக்குக்கொடுக்கப்பட்ட இறையிலி நிலம்.

திருமலை - போளூருக்கு அருகில் உள்ளது.

குந்தவை சினாலயம் - முதலாம் இராசராசனுடைய தமக்கையார் ஏற்படுத்திய கோயில்.

சினாலயம் - இது சமணர்க்கு உரிய ஆலயம். இங்கு சமணர்கள் பலர் கூடி தீர்த்தங்கரர்கள் வரலாறுகளைக் கூறி அருகனை வழிபடுவர்.

திருவமுது - பழ அரிசியால் சமைத்த அமுது, கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிர்அமுது, அடைக்காய் அமுது, வெள்ளிலை அமுது, என்பன நாள்தோறும் மூன்றுபொழுதிலும் திருவமுது செய்விக்கப்பட்டன. (திருவமுது - நிவேதனம்)

நந்தா விளக்கு - நூண்டா விளக்கு. இத்தொடர் கல்வெட்டுக்களில் 'நுந்தாவிளக்கு' என்றும், 'நொந்தா விளக்கு' என்றும் வழங்கப்பெறும்.

கல்வெட்டு - 14

ஆசார்ய போகம்

ஸ்வஸ்திஸ்ரீ

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த

சுந்தர முடியு மிந்திர ஞரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிப்டைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண்கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு
பீடிய லிரட்டபாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளை இய நாமணைக் கோணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் ருெல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணறத் தாக்கித்
திக்கிணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்

தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்குவொ ட்டல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்தர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்கவர்ம
ஞகிய கடாரத் தரசனை வாகையும்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் ருென்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூறுடை வளைப்பந் தூறும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் பல்வினை மாதம லிங்கமும்
கலாமுதிர்க் கடுந்திற லிலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி
வன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு

கக ஆவது, நாள் இருநூற்று நாற்பத்திரண்டினுல் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்துத் தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானம் செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்கோயிலில் ஆச்சார்ய போகம் நம் உடையார் சர்வசிவ பண்டித சைவாச்சாரியார்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் பிரசிஷ்யருமாய் ஆர்யதேசத்தும் மத்திய தேசத்துத்தான் கௌடதேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆண்டாண்டுதோறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக் கல நெல்லு ஆண்டாண்டுதோறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினுல்.............த்திருவாய்க் கேள்விப்படி கல்லில் வெட்டித்து. இது இவ் வம்சத்துள்ள சைவ ஆச்சார்யர்களே இத்தன்மம் ரக்ஷிக்க.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சைப் பெரியகோயிலின் கர்ப்பக் கிருகத்தின் தென்புறச் சுவரில் உள்ளது.*

அரசன்:- *முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1012 - 1044.)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *19-ம் ஆட்சியாண்டு 242 ஆம் நாள். (கி. பி. 1031)*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- *தஞ்சை இராசராசேச்சுரக் கோயிலில் இருந்த தன் குருவாகிய சர்வசிவ பண்டிதர்க்கும் அவரது சிஷ்யர்களாய் ஆர்யதேசம், மத்தியதேசம கௌடதேசம், ஆகிய இவ் விடங்களில் இருந்தவர்களுக்கும சந்திர சூரியர் உள்ளவரை ஆண்டாண்டுதோறும் ஆடவல்லான்*

என்னும் மரக்காலால் இரண்டாயிரக் கல நெல் அளிக்குமாறு முதல் இராசேந்திரன் ஏற்பாடு செய்திருந்தான்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

சங்கிராமம் - போர்.

அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி - சோழர்கள் கப்பற் படை வைத்திருந்தனர் என்பதற்குச் சான்று.

கடாரம் - இது மலேயா தீபகற்பத்தின் மேல்கரையில் உள்ளது. இது இப்பொழுது 'கெடா' என வழங்கப்படுகிறது. இதை முதன்முதல் எழுதியவர் திரு. C. F. ஆண்ட்ரூஸ் ஆவர். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பட்டினப்பாலையில் காழகம் எனப் படும் பகுதி கடாரமேயாம் என்பது அதற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் கருத்து.

உரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும் - உரிமை மனைவிகளைப்போல் விளங்கும் பெருஞ் செல்வத்தையும்.

புதவமும் கதவமும் - இரண்டு கதவுகளையும், "புதவக் கதவமும் புடைத்தனன் ஓர்நாள்" என்பது சிலப்பதிகாரம்.

ஸ்ரீவிசயம் - சுமத்ரா என்று இக்காலத்தில் வழங்கும் சொர்ணத் தீவிலுள்ள பாலம்பாங் என்னும் இராச்சியமாகும். "திருநாடு" என்பது பொருள்.

பண்ணை - சுமத்ரா தீவின் கிழக்கரையில் உள்ளது. அஃது இந்நாளில் பனி, பனை (Pani or Panei) என்றுவழங்கப்படுகிறது.

மலையூர் - ஹாலண்டு தேயத்தினரான ஓர் ஆராய்ச்சியாளர் இதனை ஜம்பி (Jambi) எனக் கூறுகிறார்.

இலாமுரிதேசம் - இது சுமத்ரா தீவின் வடபகுதியில் உள்ள நாடாகும். அரேபியர் இதனை 'லாமுரி' என்று குறித்துள்ளார்.

மாப்பப்பாளம், தலைத்தக்கோலம் - 'க்ரா' பூசந்திக்குப் பக்கத்துப் பகுதிகள் ஆகும்.

மாயிருடிங்கம் - மலேயாவின் நடுவில் இருந்ததாகும். சீன தேயத்தினர் இதனை ஜிலோடிங் (Ji-lo-ting) என வழங்கியுள்ளனர்.

வளைப்பந்தூறு, இலிம்பிங்கம் - மலேயா தீவில் உள்ளன.

இலங்காசோகம் - மலேயாவிலுள்ள கெடாவிற்குத் தெற்கே இருந்தது எனத் தெரிகிறது. அது சீன தேயத்தினரால் 'லிங்-யா-சென்-கியா' (Ling-ya-ssen-kia) என்று வழக்கப்பட்டுள்ளது.

மாநக்கவாரம் - இது நிக்கோபர் தீவுகளின் பழம் பெயர் ஆகும்.

கடுமுரண் - வலிமை பொருந்திய.

தண்டால் கொண்ட - சேனையால் வென்ற.

கடாரப் படையெடுப்பு:- இராசேந்திரன் தன் ஆட்சியின் முற் பகுதியில் நட்புக் கொண்டிருந்த கடாரத்தரசனுடன் போர் புரிந்து கடாரத்தை வென்றதற்குக் காரணம் புலப்படவில்லை. ஒருகால் வாணிகம் காரணமாக அந்நாட்டில் தங்கியிருந்த தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு இராசேந்திர சோழன் அப்படையெடுப்பை நிகழ்த்தியிருத்தல் கூடும். இப்படையெடுப்பில் சுமத்ரா தீவிலுள்ள விசயம், பண்ணை, மலையூர், இலாமுரிதேசம் முதலிய இடங்களையும், மலேயா தீபகற்பத்தில் உள்ள மாபப்பாளம், தலைத்தக்கோலம், மாயிருடிங்கம், வளைப்பந்தூறு, இலங்கா சோகம், கடாரம், மாதமலிங்கம், இலிம்பிங்கம் முதலிய இடங்களையும் இராசேந்திரன் கைப்பற்றிக்கொண்டான்.

உரைநடைப்பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

கோயிலினுள்ளால் - அரண்மனையின் உட்பக்கத்தில்.

முடிகொண்டசோழன் திருமாளிகை - அரண்மனையின் ஒரு பகுதிக்கு உள்ள பெயர்.

தேவாரத்துச் சுற்றுக்கல்லூரி - பூசிக்கப்படும் இடம் - வழிபாடு செய்யும் இடம். வாரம் - பல பொருளொரு சொல். உரிமை கடமை, அன்பு என்னும் பொருள் தருவது. சிலப்பதிகாரத்தில் (உரை, அரங்கேற்றுக்காதையில்) வாரம் - ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் உடையது (இசைப்பாட்டு) என்றுள்ளது. தே+வாரம் - தெய்வத்தன்மை பொருந்திய அன்புப் பாடல் என்பதே, தேவாரம் என்னும் சொற்றொடர்க்குப் பொருளாகும். ஓதி வழிபடுவதற்கு உரியதாதல் பற்றி வழிபாடு என்று பொருள் கொள்ள வேண்டியதாயிற்று.

ஆசார்யபோகம் - ஆசாரியர் அனுபவிக்கவேண்டிய நிபந்தம்.

சர்வசிவ பண்டிதர் - இவர் தஞ்சை ராசராசேச்சுரத்தில் இருந்த கங்கைகொண்ட சோழனின் குரு.

கௌட தேசம் - வங்காள தேசம்.

நிறைச்சளவாக - அளவு குறையாமல் கூம்பிய மரக்காலாக. (Fully measured)

திருமந்திர ஓலை - அரசனது ஆணையை எழுதுவோர்.

திருவாய்க்கேள்வி - அரசன் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு வந்து திருமந்திர ஓலையிடம் அறிவிப்போர்.

கல்லில் வெட்டித்து - கல்லில் வெட்டப்பட்டது.

பொதுச் செய்தி

பரசுராமன் இருபத்தொருகால் அரசுகளை கட்டியதற்கு வரலாறு:- கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் அரசன் பரசுராமனது தந்தையாகிய ஜமதக்னி முனிவரைக் கொன்று

விட்டமையை பரசுராமன் அறிந்து இருபத்தொரு தலைமுறைகளாக அரசர்குலத்தவர்களை வேரறுத்து வந்தான்.

பாண்டியனுக்கு இந்திரன் முத்தாரம் கொடுத்ததற்கு வரலாறு:-

ஒரு காலத்தில் வான்பொய்த்ததனால் சேர சோழ பாண்டிய நாடுகள் வறுமையால் வருந்திய காலத்தே, அவ்வந் நாட்டு மன்னர்கள் உக்கிரபாண்டியன் உள்ளிட்டோர் இந்திரன் நாளோலக்கத்தினை அடைந்து அவன் அருளால் மழைவளம் பெற்று வர எண்ணி இறைவன் திருவருளால் அவன் நாண்மகிழிருக்கையை எய்தினர். எய்திய ஞான்று இந்திரன் இவர்களை வரவேற்று இவர்கட்கு இருக்கைகள் அமைத்திட, அவ்விருக்கைகளில் சேரர், சோழர் அமர, உக்கிரகுமாரன் அங்கு அமராது இந்திரன் இருக்கையின்பால் அவனொடு ஒப்ப அமர்ந்தனன். இந்திரன் அதுகண்டு அழுக்காறெய்தி, உக்கிர குமாரரைப் பாராது ஏனையோரைப் பார்த்து, அவர்கள் அங்கு வந்த காரியத்தை வினவ, அவர்கள் மழை வேண்டிவந்தமை கூற, இந்திரன் அங்ஙனமே வரம் அளித்து அவர் தம்மைப் போக்கிய பின் உக்கிரகுமாரர் தருக்குற்று இருத்தல், மாரி வேண்டாப் பெருமிதம் இவற்றை நோக்கிச் சூழ்ச்சியாக எண்ணிறந்தோர் தாங்கிவந்த முத்தாரத்தை அந்த உக்கிர குமாரன் தோளில் அணிவித்துப் பொய்மைப் புகழ் உரைகள் கூறி விடுக்க, உக்கிரகுமாரன் அதனைப் பொருள் செய்யாது தம் நாடு மீண்டான். இது திருவிளையாடல் புராண வரலாறு.

கல்வெட்டு - 15

மனிமங்கலம் சபையோர் சாசனம் 1

ஸ்வஸ்திஸ்ரீ

திங்களேர் தருதன் றெருங்கல்வெண் குடைக்கீழ்
நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து
தன்சிறிய தாதை யுந்திருத் தமையனும்
குறிகொடன் னிளங்கோக் களையு நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்
வானவன் வில்லவன் மீனவன் கங்க
னிலங்கையர்க் கிறைவன் பொலங்கழற் பல்லவன்
கன்னகுச் சியர்கா வலனெனப் பொன்னணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக
ழாங்கவர்க் கவர்நா டருளிப் பாங்குற
மன்னுபல் லூழியுட் டென்னவர் மூவருள்
மாறு பரணன் பொன்முடி யானுப்
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து
வாரள வியகழல் வீரகே ரளனை
முனைவயிற் பிடித்துத் தனது வாரணக்
கதக்க ளிற்றினு லுதைப்பித் தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையுங் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்துதன்
முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை முல்லையூர்த் துரத்தி யொல்கலில்
வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கி

மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு வில்லவன் குடமடிக் கொண்டுதன்
நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலேந்தாங் கெஞ்சலில்
வேலேகெழு காந்தளூர்ச் சாலே கலமறுத்
தாகவ மல்லனு மஞ்சற் கேவுதன்
தாங்கரும் படையா லாங்கவன் சேனேயுட்
கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் களிற்றெடு மடியத் திண்டிறல்
விருதர் விக்கியும் விசயா தித்தனுங்
கருமுரட் சாங்க மய்யனு முதலினர்
சமர பீருவொத் துடைய விரிசுடர்ப்
பொன்னே டையங்கரிப் புரவியொடும் பிடித்துத்
தன்ன டையிற் சயங்கொண் டொன்னர்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்
தொருதனித் தண்டாற் பொருகட லிலங்கையர்
கோமான் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்த தென்றமிழ் மண்டல
முழுவ துமிழந் தெழுகட லீழம்
புக்கவிலங் கேச ஞகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன வாக்கித்தன் கன்னகுச் சியனும்
ஆர்கலி யீழஞ் சீரிதென் றெண்ணி
உளங்கொள்த னுடுதன் னுறவொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித்தன் கார்க்களி றிழந்து
கவ்வையுற் ருேடக் காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்துத் தாயைமூக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழில் புரிந்து

வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொளீழத் தரசனு கியசீ
வல்லவ மதன ராசன் மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகா லாவதும் பொருபடை நடாத்திக்
கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுசூ தனனென்
றெணைப்பல வரைசரை முனைவயிற் றுரத்தி
வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருட்
சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில்
வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியர்
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துர ரையணர் சிங்களர் பங்களர்
ஆந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலொன் றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்துநான் மறையவர் முகந்துகொளக் கொடுத்து
விசுவலோ கத்தும் விளங்கமனு நெறிநின்
றசுவமே தஞ்செய் தரைசுவீற் றிருந்த
சயங்கொண்ட சோழ னுயர்ந்த பெரும்புகழ்க்
கோவிராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசாதிராச தேவர்க்கு யாண்டு

உ௰௬ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டு மணிமங்கலமான இராஜசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்து மஹாசபையோம். எம்மூர் பிரம்ஹஸ்தானத்துத் தனுர்ஞாயிற்று பூர்வபக்ஷத்து த்வித்தியையும் புதன்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் கூட்டம் குறைவறக் கூடியிருந்து பணிப்பணியால் பணித்த இவ்வூர் ஸ்ரீமத் துவாராபதியான ஸ்ரீ காமக்கோடி விண்ணகர் ஆழ்வார்க்குத் திருவமுதுக்கும் அர்ச்சனுபோகத்துக்கும்

இத் தேவர் பண்டாரத்தே நூறுகாசு பொலிசைக்குக் கொண்டு இக்காசு நூற்றுலும் வந்த பொலிசைக்கு இறை கரத்தூட்டாக இறையிழிச்சிக் கொடுத்த நிலமாவது,

பெருநல்வதிக்கு வடக்கு, பாதிரிக் கழனி மேலைக் காலுக்குக் கிழக்கு, விளைநிலங்குழிமுன்னூறும்பாதிரிக்கழனி நடுவிற் காலுக்கு மேற்கு, விளைநிலங்குழி இருநூறும் பெரு நல்வதிக்குத் தெற்கு, ஆலைமேட்டில் மனையறுதி வாய்க்கா லுக்குக் கிழக்கு, விளைநிலங்குழி நூற்றெண்பதும், ஆலை மேட்டில் நந்தவனத் தோட்டக்காலுக்கு மேற்கு விளைநிலங் குழி நானூறும், இக்காலுக்குக் கிழக்கு விளைநிலங்குழி இரு நூறும், தெந்திரிய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு விளை நிலங்குழி முன்னூறும், சுண்டிலேரி வதிக்குக் கிழக்கு விளை நிலங்குழி நானூறும், பாவைதுறை வாய்க்காலுக்கு வடக்கு திருவயோத்தி தேவர் நிலங் குழி இருநூற்றைம்பதுக்குக் கிழக்கு தடியிரண்டிலுல் குழி இருநூறும் ஆகத் தேவர் நிலங்குழி இரண்டாயிரத்திருநூறும் இறைகரத்தூட்டாக சந்திராதித்தவல் நிற்பதாகத் திருவமுதுக்கும் அர்ச்சனு போகத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்து கொடுத்தோம்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சீபுரம் வட்டம், மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராச கோபாலசாமி கோயிலின் வடக்கு, மேற்குச் சுவர்கள்.*

அரசன்:- *முதல் இராசாதிராசன். (கி. பி. 1018 - 1054)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *இவன் அரியணை ஏறிய 29-வது ஆண்டில். அதாவது கி. பி. 1046-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி புதன்கிழமை.*

அரசனைப்பற்றிய குறிப்பு:-

முதல் இராசேந்திர சோழனின் மூத்த புதல்வன். இவ் வேந்தன் சகம் 940க்குச் சமமான கி. பி. 1018 ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்றவன். இவன் அஸ்வமேதயாகம் செய்தவன். மனுநெறி முறைப்படி அரசாண்டவன். சயங்கொண்ட சோழன் என்பது இவனுடைய வேறுபெயர் என்று இக்கல்வெட்டு அறிவிக்கிறது. இவனுக்கு வில்லவர், மீனவர், வேள்குலர், சளுக்கியர், வல்லவர், கௌசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐயணர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலிய அரசர்கள் திறைசெலுத்தி வந்தனர். இவன் 'இராசகேசரி என்ற பட்டமுடையவன். இவன் கல்வெட்டுக்களில் மூன்று வகை மெய்க்கீர்த்திகள் காணபடுகின்றன. ஒன்று 'திங்களேர் பெறவளர்' எனத்தொடங்குகிறது. மற்றொன்று 'திங்களேர் தரு' என்று தொடங்குகிறது. வேறொன்று 'திருக்கொடியொடு தியாகக்கொடி' என்று தொடங்குவதாகும்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான இராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மஹாசபையார், அவ்வூர் காமகோடி விண்ணகர ஆழ்வார் பண்டாரத்திலிருந்து நூறு காசை வட்டிச்குக்கொண்டு, அக்காசு நூற்றுலும் வந்த வட்டிக்கு இறைகரத் தூட்டாக இரண்டாயிரத்து இருநூறு குழி நிலத்தைக் கொடுத்துள்ளனர்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

திங்களேர் தருதன் தொங்கல் - சந்திரனைப் போல் அழகு விளங்கும் மாலையணிந்த.

நிலமகணிலவ - பூமிதேவி விளங்க.

மலர்மகட் புணர்ந்து - திருமகளைத் தனக்கு உரிமையுடையவளாகக்கொண்டு.

கருங்கலி கடிந்து - பெரிய வறுமையைப் போக்கி.

தன்சிறியதாதை - தன் சிற்றப்பனாகிய எறிவலி கங்கை கங்கைகொண்ட சோழன்.

குறிக்கொள் தன் இளங்கோக்களையும் - தன் ஏவல் வழி ஒழுகும் தன் தம்பிமார்களையும்.

துன்று எழில் - நெருங்கிய அழகுடைய.

பாங்குறு தென்னவர் மூவருள் - பக்கத்திலுள்ள பாண்டியர் மூவருள்.

வார் அளவிய - வாரால் இறுக்கப்பட்ட.

ஒல்கலில் - சுருங்குதல் இல்லாத.

வேணாட்டரசு - திருவாங்கூர் அரசனை.

இராமகுடம் - இது எலிமலையை அடுத்துள்ள ஒரு சிறு நாடாகும். அவ்விடத்து ஆண்டுவந்த அரசர்கள் மூர்ஷிகவம்சத்தவர் அவர்களில் இராமகுட மூவர் திருவடிகள் என்பவன் ஒருவன் இவனை இராசாதிராசன் வென்றான். இத்தொடரை இரா+மகுடம்+மூவர் எனக்கொண்டு பரசுராமனால் முடிசூட்டப் பெற்றவர்கள் என்பர். மற்றும் இத்தொடர்க்கு 'மகுடமிழந்த இலங்கையரசன், வீரகேரளன், சுந்தர பாண்டியன் ஆகிய மூவர்' என்று பொருள் கொள்வாருமுளர். எனினும், "தென்னவர் மூவருள்" என முதற்கண் பேசப்படுவதால் இக்கூற்றுப் பொருந்தாது.

அடல்கெழு - வலிமை பொருந்திய.

வில்லவன் - சேரன்.

வேலைகெழுகாந்தளூர்ச்சாலை - கடற்கரைக்கு அருகிலுள்ள காந்தளூர்ச்சாலை.

மஞ்சகேவு, கண்டப்பயன், கங்காதரன் - இவர்கள் ஆகவ மல்லனுடைய படைத்தலைவர்கள்.

வண்டமர்களிற்றொடு - (மதம் ஒழுகும இடங்களில்) வண்டுகள் மொய்த்திருக்கும் ஆண் யானைகளோடு.

விசயாதித்தன், சாங்கமய்யன் - ஆகவ மல்லன் மகனாகிய விக்கியொடு போர்புரிய வந்த படைத்தலைவர்கள்.

சமரபீரு வொத்துடைய - (கோழையைப்போல்) போரில் புறங்காட்டி ஓட (Retreated like cowards)

ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.

தென்றமிழ் மண்டலம் - பாண்டிநாடு.

எழுகடல் ஈழம்புக்க - அலைகள் எழும்புகின்ற கடலால் சூழ்ந்த இலங்கையில் புகுந்திருந்த.

காண்டகு தன்னதாகிய கன்னகுச்சியினும் - அழகுவாய்ந்த தனனுடைய கன்னகுச்சி இராச்சியத்தைக் காட்டிலும்.

தன்னுடுதன் உறவொடும் புகுந்து - தன்னுட்டிலுள்ள தன் உறவினர்களுடன் புகுந்து.

கவ்வையுற்ரோட - துன்பமுற்ரோட. தவ்வை - தமக்கை.

வெங்களத்துலந்த - போர்க்களத்து இறந்த.

வடபுலத்து இருகாலாலும் - வடதிசையில் இரண்டாம் முறையும்.

வம்பலர் - புதிய மலர்களை. இளக்கமில் - கீழ்ப்படியாத.

கம்பிலி - பல்லாரி ஜில்லாவில் உள்ளது.

வேள்குலர் - சிற்றரசர்கள். வல்லவர் - சாளுக்கியரின்வேறு பெயர் அல்லது பல்லவர்,

கோசலர் - கோசல தேசத்தார்.

கொங்கணர் - கன்னரதேசத்தவர்.

சிந்துரர் - சிந்துநாட்டரசர்.

பங்களர் - வங்காள தேசத்தரசர்.

அந்திரர் - ஆந்திரர்.

அவனியுள் - இராச்சியத்துள்.

முகந்து - பெற்று.

விஸ்வலோகத்து - எல்லா உலகத்தும்.

ஜயங்கொண்ட சோழன் - முதலாம் இராசாதி ராசனின் வேறு பெயர்.

மெய்க்கீர்த்தியால் அறியும் போர்களும், பிறசெய்திகளும்:-

பாண்டியனோடு போர்:— மானுபரணனின் பொன்முடி தரித்த தலையை வெட்டினன். வாரால் இறுக்கப்பட்ட வீர கண்டாமணியையுடைய வீரகேரளனை முனைவயிற் பிடித்துத் தனது களிற்றால் உதைப்பித்தருளினன். மிக்க புகழ் உடைய சுந்தர பாண்டியன் தன் வெண்கொற்றக் குடையையும் வெண்கவரியையும், சிங்காதனத்தையும் போர்க்களத்தில் இழந்து முடிகீழே விழ, தலையை விரித்துக்கொண்டு கால் தள்ளாட ஓடினன். அவனை இராசாதிராசன் முல்லையூர்க்குத் துரத்தினன்.

சேரனோடு போா:— சேரன் தோற்று நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடினன். இராசாதிராசன் வஞ்சிசூடி காந்தளூர்ச் சாலை கல மறுத்தான்.

மேலைச் சளுக்கியப்போர் - ஆகவமல்லன், பெரும்படையுடன் முதலாம் இராசாதிராசனோடு பொருதான். இறுதியில் சளுக்கியர் படைத்தலைவர்களாகிய கண்டப்பய்யனும் கங்காதரனும் இறந்தனர். விக்கி, விசயாதித்தன், சாங்கமய்யன் ஆகியோர் தோற்று

ஓடினர். இராசாதிராசன் அவர்களுடைய யானை, குதிரைகளைப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய கொள்ளிப்பாக்கை என்னும ஊரை தீக்கிரையாக்கினன்.

இலங்கைப்போர்:- இராசாதி ராசன் இலங்கையரசனகிய விக்ரமபாஹுவின் கிரீடத்தையும், பாண்டிய நாட்டை இழந்து இலங்கைக்குச் சென்றிருந்த விக்கிரம பாண்டியனுடைய கிரீடத்தையும் தனதாக்கிக்கொண்டான். கன்னியாகுப்ஜத்தை ஆண்ட வீரசலாமேகன் என்பவன் தன் நாட்டைவிட்டுஉறவினர்களுடன் ஈழம்புகுந்து அதனை ஆண்டுவந்தபோது இராதிராசன்பால் தோல்வியுற்று தன்தாய், தமக்கை மனைவி, முதலானவர்களை விட்டுவிட்டுப் புறங்காட்டியோடினன். இராசாதிராசன் அவர்களைப் பிடித்து வீரசலாமேகனின் தாயை மூக்கரிந்தான். இதனல் அவமானமடைந்த வீரசலாமேகன் மீளவும் போரிட்டு உயிர் துறந்தான். கன்னரன் வழியில் வந்து இலங்கையில் வதிந்திருந்த சீவல்லவன் மதனராசன் என்பவனதுமணிமுடியையும் கைப்பற்றிக்கொண்டான்.

இரண்டாவது மேலைச்சளுக்கியப்போர்:— இராசாதிராசன் இரண்டாவது முறையாக ஆகவமல்லனமீது படையெடுத்துச் சென்றுன். ஆகவமல்லனுடைய படையில் இருந்த கண்டர் தினகரன், நாரணன், கணபதி, மதிசூதனன் என்பவர்கள் புறங்காட்டி ஓடினர். பிறகு கம்பிலிநகரிலிருந்த சளுக்கியருடைய மாளிகையை இடித்துத் தள்ளி வெற்றித் தூணும் நாட்டினன்.

பிறபோர்கள்:— திருவாங்கூர் அரசனை ஊரைவிட்டுத் துரத்தினன். இராமகுடத்திலுள்ள மூன்று அரசர்களைக் கொன்றுன்.

பிறசெய்திகள்: உறவினர்களுக்கு மகுடஞ்சூட்டி நாடு அருளியது: — தன் சிறியதாதை, தமையன், தம்பிமார்கள், புதல்வர்கள் இவர்களுக்கு வானவன, வல்லவன், மீனவன், கங்கன், இலங்கையர்க் கிறைவன், பொலங்கமழன், பல்லவன், கன்னகுச்சியர் காவலன் என்னும் பட்டங்களுடன் நாடுகளையும் கொடுத்தருளினன்.

உரைநடைப் பகுதிப் பொருள் விளக்கம்:-

பிரம்ஹஸ்தானம் - பஞ்சாயத்தார் கூடுமிடம்.

தனுர்ஞாயறு - மார்கழிமாதம்

த்விதியை - இரண்டாம் திதி.

துவாராபதி - துவாரகைக்குத் தலைவராகிய.

கூட்டம் குறைவறக் கூடியிருந்தது - without a vacancy in the assambly.

ஸ்ரீ காமகோடி விண்ணகர் ஆழ்வார் - மணிமங்கலமான இராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலின் பெயர். இக்காலம் இத்தேவரின் பெயர் இராசகோபாலப் பெருமாள் என்று வழங்கப்பெறுகிறது.

அர்ச்சனபோகத்துக்கு - அர்ச்சனைக்கு.

இறை கரத் தூட்டாக - வரியைக் கையில் கொடுத்து விடுவதாக.

இறை இழிச்சி - வரி நீக்கி.

மேலைக்கால் - மேலை வாய்க்கால்.

தடி - வயல்.

திருவயோத்திய தேவர் - இராமர் கோயில்.

குறிப்பு:- நிலங்களின் அளவைக் கூட்டிப் பார்த்தால் மொத்தம் 2,180 குழிகள்தான் வருகின்றன. ஆனால் கல்வெட்டில் இரண்டாயிரத்து இருநூறு குழிகள் என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஒரு முழு எண்ணாக இருக்கவேண்டி (Perhaps 20 kuli were added for rounding) இவ்வாறு கூறப்பெற்றது என்று டாக்டர் உல்ஷ் துரை கூறுகிறார்.

பொதுச் செய்தி

அக்காலத்தில் சோழமன்னர் வருமானத்தில் ஆறிலொரு பகுதிவரியாக வாங்கினர் எனறு தெரிகிறது.

"ஆறிலொன்று அவனியுள் கூறுகொள் பொருள்களுமுகந்து என்னும் முதலாம் இராதிராசனின் மெய்க்கீர்த்திப் பகுதியே சான்றாகும்.

கல்வெட்டு - 16

அமண்பாக்கம் சாசனம்

ஸ்வஸ்திஶ்ரீ

திருமாது புவியெனும் பெருமாத ரிவர்தன்
மாதே வியர்க ளாக மீதொளிர்
வெண்குடை யுயர்த்துத் திண்கலி பெயர்த்துத்தன்
சிறிய தாதை யாகிய எறிவலிக்
கங்கைகொண்ட சோழனைப் பொங்கிகல்
இருமுடிச் சோழ னென்றும் பொருமுரட்
டன்றிருத் தம்பியர் தம்முள் வென்றிகொள்
மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங் கோழிமன்
றெடுகழல் வீர சோழனைப் படிபுகழ்க்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்
சோழ கங்க னென்றுந் தோள்வலி
மேவிகல் பராந்தக தேவனைச் சோழ
வயோத்திய ராச னென்றும்
இருதயத் தன்பொடு கருது காதலருள்
இந்த லம்புக ழிராசேந்திர சோழனை
உத்தம சோழ னென்றுந் தொத்தணி
முகையவி ழலங்கல் முடிகொண்ட சோழனை
இகல்விச யாலய னென்றும் புகர்முகத்
தேழுயர் களிற்றுச் சோழகே ரளனை
வார்சிலைச் சோழ கேரள னென்றுந்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்துச் சிறப்பமர் சோழ

சனக ராச னென்றுங் கனைகடற்
படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனைச்
சுந்தர சோழ னென்றுஞ் செந்தமிழ்ப்
பிடிகளிற் றிரட்ட பாடி கொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச் சியராச னென்றும் பின்னுந்தன்
காதலர் காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனைகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும்
மானச் சிலைக்கையோ ரானைச்சேவகனை
நிருபேந்திர சோழ னென்றும் பருமணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படிமிசை
நிகழு நாளினு ளிகல்வேட் டெழுந்துசென்
றெண்டிற லிரட்ட மண்டல மெய்தி
நதிகளும் நாடும் பதிகளு மநேகம்
அழித்தனன் வளவனெனு மொழிப்பொருள் கேட்டு
வேகவெஞ் சளுக்கிய ஆகவ மல்லன்
பரிபவ மெனக்கிதென் றெரிவிழித் தெழுந்து
செப்பருந் திரத்தக் கொப்பத் தகவையிற்
சென்றெதி ரேன்றமர் தொடங்கிய பொழுதவன்
செஞ்சர மாரிதன் குஞ்சர முகத்தினுந்
தன்றிருத் துடையினுங் குன்றுறழ் புயத்தினுந்
தைக்கவுந் தன்னு டன்களி றேறிய
தொடுகழல் வீரர்கள் மடியவும் வகையா
லொருதனி யநேகம் பொருபடை வழங்கியும்
மொய்ம்பமர் சளுக்கி தம்பிசய சிங்கனும்
போர்ப்புலி கேசியுந் தார்த்தச பன்மனு
மானமன் னவரின்மண் டலியசோ கையனும்
ஆனவன் புகழா ரையனுந் தேனிவர்
மட்டவி ழலங்கல் மொட் டையனுந் திண்டிறல்

நன்னி நுளம்பனு மெனுமிவர் முதலினர்
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரேவனும் வயப்படைத் துத்தனுங்
கொன்னவில் படைக்குண்ட மய்யனு மென்றின
வெஞ்சின வரைசரோ டஞ்சிச் சளுக்கி
குலங்குலை குலைந்து தலைமயிர் விரித்து
வெந்நுற் றுளித்துப் பின்னுற நோக்கிக்
கால்பரிந் தோடி மேல்கடற் பாயத்
துரத்திய பொழுதச் செருக்களத் தவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன் மூல
பத்திர சாதி பகட்டரை சநேகமும்
எட்டுநடை பரிகளு மொட்டக நிரைகளும்
வராகவெல் கொடிமுத லிராசபரிச் சின்னமும்
ஒப்பில்சத்தி யவ்வை சாங்கப்பையென் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன பிறவு முனைவயிற் கொண்டு
விசையா பிடேகம் செய்துதென் றிசைவயிற்
போர்ப்படை நடாத்திக் கார்க்கட லிலங்கையில்
விறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகனைக்
கடகளிற் றுடுபடக் கதிர்முடி கடிவித்
திலங்கையர்க் கிறைவன் மானு பரணன்
காதலரிருவரைக் களத்திடைப் பிடித்து
மாப்பெரும்புகழ் மிகவளர்த்த கோப்பரகேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர தேவர்க்கு யாண்டு

நாலாவது, நாள் அ௨௨ (82) ஜயங்கொண்ட சோழ மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு ராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோம். இவ்வாட்டை சிம்ம ஞாயிற்று அபரபக்ஷத்து அஷ்டமியும் வியாழக்கிழமையும் பெற்ற ரோஹிணி நாள்; எம்மூர் பிர்மஹ தான மண்டபத்தேகூட்டம்குறைவறக் கூடியிருந்து எங்களூர்

ஸ்ரீமத் துவாராபதியான ஸ்ரீ காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்த நிலமாவது; எங்களூர்த் தென் பிடாகை அமண்பாக்கத்து நிலம் (1) கீழ்பாற்கெல்லை மண்ணிக்காலுக்குமேற்கும், (2)தென்பாற்கெல்லைமண்ணிக் காலுக்கு வடக்கும், (3) மேல்பாற்கெல்லை அரைசங்குட்டத் துக்கும் நங்காசியென்னும் புலத்துக்கும் கிழக்கும் (4) வட பாற்கெல்லை பழுவூர் நக்கப்புத்தேரிக் கரைக்குத் தெற்கும் இத்தேவர்க்கு முன்பு சிலாலேகை பண்ணின நிலத்துக்குத் தெற்கும், ஆக இந்நாற்பாற்கெல்லைக்கும் நடுவுபட்ட நில மும் ஓடையும் உடைப்பும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் இந் நாற்பாற் கெல்லைக்கும் நடுவுபட்டதெல்லாம் சேனாபதிகள் ஜயங்கொண்ட சோழ பிரம்மாதிராஜர் தாயார் காமக்கவ்வையார் பக்கல் ஸ்வம் கொண்டு சந்திராதித்தவல் இந்நிலத்துக்கு இறையிறுத்துக் கொடுப்போமானோம். மஹா சபையோம். சபையுள்ளிருந்து கரையிட்டுக் கரைப்பொந்து பணித்த காராம்பி செட்டு நாராயணக் கிரமவித்தனும் இராயூர் சந்திரதேவ அத்தாழிக் கிரமவித்தனும் ஸஹனை மாதவக்கிரமவித்தனும் பணிப்பணியால் பணிகேட்டு எழுதி னேன். இவ்வூர் ஊர்க்கரணத்தான் அலங்காரன் சீராம நேன். இவை என் எழுத்து.

கல்வெட்டு இருக்குமிடம்:- *செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் வட்டம், மணிமங்கலம் ஊரிலுள்ள இராசகோபாலப் பெருமாள் கோயிலின் உள்பிராகாரத்துக் கீழ்புறச் சுவர்.*

அரசன்:- *இரண்டாம்இராசேந்திரன் (கி. பி. 1052 - 1064) (விசயராசேந்திரன்)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *4-ம் ஆட்சியாண்டு கி. பி. 1056.*

அரசனைப்பற்றிய குறிப்பு:- *இரண்டாம் இராசேந்திரன் முதல் இராசேந்திரனின் இரண்டாம் புதல்வன். பரகேசரிஎன்ற*

பட்டமுடையவன். இவன் மகன் இராசகேசரி, இராசமகேந்திரன் என்பவன் இவ்ன் காலத்திலேயே இறந்தான். இவன் காலம் கி. பி. 1052 முதல் 1064 முடிய என்பர் K. A. நீலகண்ட சாஸ்திரியார். இவனுடைய மகள் மதுராந்தகி என்பவள். இவன் நாடகம் முதலான கலைகளில் பெரும் பற்றுடையவன் என்பது தஞ்சைக்கோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடிப்ப தற்கு ஆண்டு ஒன்றுக்கு 120 கல நெல் நிபந்தமாக அளித்துள்ளமையால் விளங்கும். இவன் உறவினர்பால் பேரன்புடையவன் என்பது இக்கல்வெட்டால் விளங்கும்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:

இராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையார், சேனாபதிகள் சயங்கொண்ட சோழபிர்மாதிராயரின் தாயர் காமக் கவ்வையர் பக்கல் பொருள் பெற்று, இராசசூளாமணிச் சதுர் வேதிமங்கலத்துத் தென்பாலுள்ள அமண்பாக்கம் என்னும் சிற்றூரில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தை விலைக்கு வாங்கிக் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்துள்ளனர்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

மீதொளிர் - மேலே ஒளி விடுகின்ற.

வெண்குடை உயர்த்து - வெண்குடை தன்னைக் கவிந் திருக்கும்படிச் செய்து.

திண்கலி பெயர்த்து - வறுமையைப் போக்கி. (Uprooted the powerful kali age)

எறிவலி கங்கை கொண்ட சோழன் - முதல் இராசராசனின் இரண்டாவது பிள்ளை.

பொங்கு இகல் - போரில் வலிமைபெற்ற.

மும்முடிச்சோழன் - சேர, சோழ, பாண்டியநாடுகள் ஆகிய மூன்றுக்கும் அரசனென்று முடி சூட்டப்பெற்றவன்.

 8283

தெம்முனை அடுதிறல் - பகையாயுள்ளவர்களைப் போரில் வென்ற வல்லமையுடைய.

கோழிமன் தொடுகழல் வீரசோழனை-உறையூர்க்கு அரசனு யிருந்தகட்டப்பட்ட கழலினையுடைய வீரசோழனை.

தோள்வலிமேவிகல் - தோள் வலிமை பொருந்திய ஆற்றல் உடைய.

காதலருள் - புதல்வர்களுள்.

தொத்தணி முகையவிழ் அலங்கல் - பூங்கொத்துக்களின் அரும்புகள் மலர்கின்ற மாலையை யுடைய.

இகல் விசயாலயன் - வலிமைமிக்க விசயாலயனை.

ஏழுயர் களிறு - ஏழுமுழம் உயர்ந்திருக்கும் யானை. இதுவே பட்டத்துக்கு உரியதாகும்.

செந்தமிழ்ப் பிடிகளிற்று - செந்தமிழ் நாட்டிலுள்ள பெண், ஆண் யானைகள் அடங்கிய சேனையையுடைய.

கன்னகுச்சிய ராச்சியம் - கன்னோசி ராச்சியம்.

காதலர் காதலர் - பேரர்.

மேதகு கதிராங் கனைகழல் - சிறப்புப் பொருந்திய ஒளி விடுகின்ற் ஒலிக்கின்ற வீரகண்டாமணியை அணிந்த.

மானச் சிலைக்கை - பெருமை பொருந்திய வில்லைக்கையி லேந்திய.

படிமிசைநிகழுநாளில் - உலகில் வாழுங் காலத்தில்.

இகல்வேட்டுஎழுந்து - போரை விரும்பி எழுந்து.

இரட்டமண்டலம் - இரட்டபாடி.

பதிகள் - நகரங்கள்.

வேகவெஞ்சளுக்கி - கோபம் கொண்ட சளுக்கியனாகிய.

எரிவிழித்து - கண்களில் தீப்பொறி பறக்கும்படி பார்த்து.

செப்பருந்திரத்த - செப்பருந்தீர்த்த என்று கொள்ள வேண்டும். "செப்பருந்தீர்த்தக் கொப்பத்து" என்று கல் வெட்டுக்களில் குறிக்கப் பெறுவதால் இது தீர்த்தச் சிறப்பு வாய்ந்த ஒரு தலமாதல் வேண்டும்.

அகவையில் - இடத்தில்.

சென்றுஎதிரேன்று - சென்று எதிரே எதிர்த்து.

குஞ்சரம் - பட்டத்து யானை.

வகையால் ஒரு தனி அனேகம் பொருபடை - பல வகையாலும் ஒப்பற்ற அநேக ஆயுதங்களை.

மொய்ம்பு அமர் - வலிமை பொருந்திய.

சளுக்கியதம்பி - ஆகவமல்லனுடைய தம்பி.

போர்ப்புலிகேசி - போரில் வல்ல புலிகேசி.

வன்னியர்களில் ஏவன் என்னும் பெயருடையவனும். வன்னியர் - படைத்தலைவர் "நாற்படை வன்னியராக்கிய பெருமாள்" என்பது கல்லாடம்.

கொன்னவில் படைக் குண்டமய்யனும் - பெருமையாகப் புகழ்ப்படுகின்ற படையையுடைய குண்டமய்யன் என்னும் சேனாதிபதியும்.

வெந்நுற்று - முதுகுகாட்டி.

கால்பரிந்தோடி - காலால் வேகமாக ஓடி

பகட்டரைசு அநேகமும் - அரச யானைகள் பலவும்.

பத்திரசாதியானை - இதன் உயர அளவு ஏழு முழமும், நீளம் எட்டு முழமும், வயிற்றின் சுற்றளவு பத்து முழமும் ஆகும்.

எட்டுநடை பரிகளும் - மிகவேகமுடைய குதிரைகளும் (Horses of lofty gait.)

பரிச்சின்னம் - அடையாளம்.

கடிவித்து - பிடுங்கிக்கொண்டு.

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் போர்கள்:-

கொப்பத்துப்போர்:— இரண்டாம் இராசேந்திரன் இரட்ட மண்டலத்தில் உள்ள அநேக நதிகள், நாடுகள், நகரங்கள் இவைகளை அழித்துவிட்டான் என்னும் மொழிப்பொருள் கேட்டு, சளுக்கிய அரசனுகிய ஆகவமல்லன் கொப்பத்துக்குச்சென்று சோழனோடு யுத்தம் செய்யத் தொடங்கினான். ஆகவமல்லன் விட்ட அம்புகள் சோழனது பட்டத்து யானையின் முகத்திலும் அவனுடைய தொடைகளிலும், புயங்களிலும் தைத்தன. சோழனுடைய வீரர்கள் பலர் மடிந்தனர். சோழனும் பலவகை யாலும் ஒப்பற்ற அம்புகளைச் சளுக்கியர் மீது வழங்கினன். அது பொழுது ஆகவமல்லனுக்குத் துணையாக வந்திருந்த ஜயசிங்கன், புலிகேசி, தசபன்மன், அசோகய்யன், ஆரையன், மொட்டையன், நன்னிநுளம்பன் என்பவர்கள் இறந்துபட்டனர். ஆகவமல்லனே தன் சேனுபதிகளான எவன், தித்தன், குண்ட மய்யன் இவர்களுடன் முதுகுகாட்டி ஓடிவிட்டான். இராசேந்திர சோழன் ஆகவமல்லனுடைய சத்துருபயங்கரன், கரபத்திரன், மூலபத்திரன் முதலான அரச யானைகள், எட்டு நடைபரிகள், ஒட்டக நிரைகள், வராகக்கொடி, இராச பரிச்சின்னம் இவைகளுடன் அவனுடைய மனைவியர் காமக்கிழத்தியர்களையும் கைக் கொண்டான்.

இலங்கைப் போர்:— இலங்கையில் தங்கியிருந்த கலிங்க தேசாதிபதியாகிய வீரசலாமேகனுடைய கிரீடத்தைப் பிடுங்கிக் கொண்டான். இலங்கைக்கு அரசனுகிய மானுபரணனுடைய பிள்ளைகள் இருவரையும் பிடித்துக்கொண்டான்.

இரண்டாம் இராசேந்திர சோழன் தன்கிளைஞர்க்குப் பட்டம் கொடுத்து மகுடஞ் சூட்டியது:-

உறவினர்	பெயர்	பட்டம்
சிற்றப்பன்	எறிவலி கங்கைகொண்ட சோழன்	பொங்கிகல் இருமுடிச்சோழன்
தம்பியர்கள்	1. மும்முடிச் சோழன்	தெம்முனையடுதிறல் சோழபாண்டியன்
	2. வீரசோழன்	படிபுகழ்க் கரிகால் சோழன்
	3. மதுராந்தகன்	சோழகங்கன்
	4. பராந்தக தேவன்	சோழ அயோத்திய ராஜன்
புதல்வர்கள்	1. இராசேந்திரசோழன்	உத்தமசோழன்
	2. முடிகொண்டசோழன்	இகல்விசயாலயன்
	3. சோழகேரளன்	வார்சிலை சோழகேரளன்
	4. கடாரங்கொண்டசோழன்	சோழஜனகராஜன்
	5. முடிகொண்டசோழன்	சுந்தர சோழன்
	6. இரட்டபாடிகொண்டசோழன்	சோழகன்னகுச்சியராஜன்
பேரர்கள்	1. மதுராந்தகன்	வெல்படைச்சோழவல்லபன்
	2. ஆனைச்சேவகன்	நிருபேந்திர சோழன்

உரைநடைப் பகுதிப் பொருள் விளக்கம்:-

ஜயங்கொண்டசோழமண்டலம்:- தொண்டைமண்டலத்தை முதலாம் இராசராசன் வென்ற பிறகு அதற்கு வைத்தபெயர்.

செங்காட்டுக் கோட்டம்:- தொண்டை மண்டலத்தின் 24 கோட்டங்களுள் ஒன்று. கோட்டம் என்பது வளநாட்டுக்குச் சமமாகும்.

இவ்வாட்டை - இவ்வாண்டு.

சிம்மஞாயற்று - ஆவணி மாதத்தில்.

துவாராபதி - கண்ணபிரான்

நங்காசி - வயலின் பெயர்.

பழூர் நக்கபுத்தேரி - பழூர் நக்கன் என்னும் சிவ னடியாரால் வெட்டப்பட்ட ஏரி.

ஸ்வம் - பொருள் (Funds என்று டாக்டர் உல்ஷ் துரை கூறுகிறார்.)

சந்திராதித்தவல் - சந்திர சூரியர் உள்ளவரையில்.

இறையிறுத்து - வரிநீக்கி.

கரை இட்டு - எல்லை இட்டு.

கரைப்பொந்து பணித்த - மேற்பார்வை செய்த.

காரம்பி செட்டு - பிராமணருடைய குடிப்பெயர்.

பணிப்பணியால் - பணித்த உத்தரவால்.

சேனபதிகள் ஜயங்கொண்ட சோழ பிரமாதிராயர்:- இவர் இரண்டாம் இராசேந்திரனின் படைத் தலைவர்களுள் ஒருவர்; அந்தண குலத்தினர். இவருடைய தாய் காமக்கவ்வை என்பவள். இவள் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்கு இறையிலி நிலம் அளித்துள்ளாள்.

பொதுச்செய்தி

"ஆக இந் நாற்பாற்கெல்லைக்கும் நடுவுபட்ட நிலமும் ஓடையுமுடைப்பும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் இந்நாற் பாற்கெல்லைக்கும் நடுவுபட்டதெல்லாம்" - என்னும் கல்வெட்டுப் பகுதியால் நிலத்தை விற்பனை செய்து கொடுத்தவர், சில நாள் கழித்து, நிலத்தைத்தான் விற்றேனே யொழிய அதிலுள்ள மரம், கிணற்றிலுள்ள கற்கள் இவைகளை விற்கவில்லை என்று வாதாட உரிமை உண்டு. அவ்வாறு உரிமையில்லாதபடி சாசனம் பழங்காலத்தில் எவ்வாறு நுட்பமாய் ஆராய்ந்து எழுதப்பட்டது என்பது அறிதற்குரியது.

கல்வெட்டு - 17

மணிமங்கலம் சபையோர் சாசனம் 2

ஸ்வஸ்திஸ்ரீ

திருவளர் திரள்புயத் திருநில வலயந்
தன்மணிப் பூணெனத் தாங்கிப் பன்மணிக்
கொற்றவெண் குடைநிழற் குவலயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி மற்றுள
அறைகழ லரையர்தன் னடிநிழ லொதுங்க
உறைபிலத் துடைகலி யொதுங்க முறைசெய்து
விரைமலர்த் தெரியல் விக்கலன் றன்னெடு
வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக்
கங்கபாடிக் களத்திடை நின்றுந்
துங்கபத் திரைபுகத் துரத்தி யாங்கவர்
வேங்கைநன் ஞட்டிடை மீட்டுமவர் விட்ட
தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்

செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ
னொருமக ளாகிய விருகையன் றேவி
நாகலை யென்னுந் தோகையஞ் சாயலை
முகத்தொடு மூக்குவே ருக்கிப் பகைத்தெதிர்
மூன்றும் விசையினு மேன்றெதிர் பொருது
பரிபவந் தீர்வனெனக் கருதிப் பொருபுனற்
கூடல் சங்கமத் தாகவ மல்லன்
மக்க ளாகிய விக்கலன் சிங்கண
னென்றிவர் தம்மொடு மெண்ணில்சா மந்தரை
வென்றடு தூசிமுனை விட்டுத் தன்றுணை
மன்னருந் தானும் பின்னடுத் திருந்து
வடகட லென்ன வகுத்தவத் தானையைக்
கடகளி றென்றுற் கலக்கி யடல்பரிக்
? கோசலைச் சிங்கனைக் கொடிப்படை முன்னர்த்
தூசிவெங் களிற்றொடுந் துணித்துக் கேசவ
தண்ட நாயக்கன் தார்க்கேத் தரையன்
திண்டிறல் மாரயன் சினப்போத் தரைய
னிரேச்சய னிகல்செய்பொற் கோதைமு வத்தியென்
றூர்த்தடு துப்பி லநேகசா மந்தரைச்
சின்ன பின்னஞ் செய்து பின்னை
முதலி யான மதுவண னோடே
விரித்த தலையோடு விக்கல னோடச்
செருத்தொழி லழிந்து சிங்கண னோட
அண்ணல் முதலிய அனைவரு மமர்போர்ப்
பண்ணிய பகடிழிந் தோட நண்ணிய
ஆகவ மல்லனு மவர்க்கு முன் னோட
வேகவெங் களிற்றினை விலக்கி வாகைகொண்
டங்கவர் தாரமு மவர்குல தனமுஞ்
சங்குந் தொங்கலுந் தாரையும் பேரியும்
வெண்சா மரையு மேக டம்பமும்

சூகரக் கொடியும் மகர தோரணமும்
ஒட்டக நிரையு முலோகா சனமும்
புட்பகப் பிடியும் பொருகளிற் றீட்டமும்
பாய்பரித் தொகையொடும் பறித்துச் சேயொளி
வீரசிங் காதனம் பார்தொழ வேறி
எழிறர வுலக முழுதுடை யாளொடும்
விசையமணி மகுட மேய்ந்து எழில்கொள்
தத்துமாப் புரவிப் பொத்தப்பி வேந்தனை
வாரணை வன்கழற் கேரளன் றன்னைத்
தார்சன நாதன் றம்பியைப் போர்க்களத்
தலங்கல்சூழ் பசுந்தலை யரிந்து பொலங்கழல்
தென்னவன் ஸ்ரீ வல்லவன் மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரகே சரியை
மதவரை யொன்ரு லுதைப்பித் துதகையிற்
கேரளர் தங்குல செங்கீரை யோடும்
வேரறப் பறிந்தோடி மேல்கடல் வீழ
வாரண மருகுளி செலுத்தி வாரியி
லெண்ணருங் களிற்றின் இரட்டரைக் கவர்ந்த
கன்னியர் களிற்ரெடுங் கட்டிப் பண்ணுப்
பிடியொடு மாங்கவர் விடுதிறை கொண்டுமீண்டு
வேழ நிரைகொண்டு சூழி புனல்
கொண்டாற் றிறவர் குறித்த வெம்போரில்
தண்ட நாயகர் தம்மில் திண்டிறல்
மல்லியண் ணனையு மஞ்சிப்பய் யனையும்
பில்குமதக் களிற்றுப் பிரமதே வனையும்
தண்டா ரசோகையன் தன்னையுந் திண்டிறற்
சத்தியண் ணனையுஞ் சந்திவிக் கிரகப்
பக்தி யண்ணன் றன்னையு மத்தகு
தேமரு தெரியல் வீமயன் றன்னையு
மாமதி வங்கா ரனையும் நாமவேற்

கங்கனை நுளம்பனைக் காடவர் கோனை
வம்புமத யானை வைதும்ப ராயனை
யிருந்தலை யரிந்து பெரும்புனற் றனுது
கங்கை மாநகர் புகுந்தபின் திங்களின்
வழிவரு சளுக்கியிப் பழியொடு வாழ்வதிற்
சாவது சால நன்றென் றேவமுற்
றுன்னிய சிந்தைய ளுகி முன்னம்
புதல்வருந் தானு முதுகிட் டுடைந்த
கூடலே களமெனக் குறித்துக் கூடலில்
வாரா தஞ்சினர் மன்ன ரல்லர்
போர்ப்பெ ரும்பழிப் புரட்ட ராகவென்
றியாவரு மறிய வெழுதிய பதிகம்
மேவரு மோலை விடையொடுங் கொடுத்து
இரட்ட பாடிப் புரட்டரில் மேதகு
கங்கா கேத்தனை யேவ ஆங்கவன்
வந்தடி வணங்கி வாசக முணர்த்தலும்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டும்
ஏந்தெழி லுவகையோ டிருமடங்கு பொலியப்
போந்தப் போர்க்களம் புகுந்து கரந்தையில்
வல்லவர் கோனை வரவு காணுதவன்
சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள்
பார்த்தினி திருந்த பின்னைப் பேர்த்தவன்
கால்கெட வோடி மேல்கட லொளித்தலுந்
தேவ நாதனுஞ் சித்தியுங் கேசியும்
மூவருந் தனித்தனி முதுகிடப் பரவரும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
முரட்டொழி லடக்கி முழங்கெரி மூட்டி
வெங்கதப் புலியேறு வியந்து விளையாடத்
துங்கபத் திரைக்கரைச் செயபத் திரத்தூண்
நானிலம் பரச நாட்டி மேனுள்

வந்தவப் புரட்டனை வல்லவ னுக்கிச்
சுந்தரக் கண்டிகை சூட்டியக் குந்தளத்
தரசனும் மக்களும் ஐம்மடி யஞ்சித்தன்
புரசை யானைப் புழைக்கையிற் பிழைத்திவ்
வுலகெலா மறிய ஓடிய பரிசொரு
பலகையிற் பழுதற எழுதிய பின்னை
சார்த்தின வுரையுஞ் சளுக்கி பதமேற்ற
பூத்தள மாவொடு புட்டில் பேர்த்து
தாம்கைக் கொண்ட வேங்கைநன் னாடு
மீட்டுக் கொண்டலான் மீள்கிலங் கேட்டுநீ
வல்ல னுகில் வந்துகாக் கென்று
சொல்லெனச் சொல்லிய போக்கி எல்லையங்
கடுத்தவத் தானை எழில்விசய வாடையோ
டடுத்த பேராற்றில் வந்து தடுத்த
சனநா தனையுந் தண்டநா யகனும்
இனமார் கடக்களிற் றிராசமய் யனையும்
திப்பர சனையு முதலாக வுடைய
வப்பெருஞ் சேனையை யடவியிற் பாய்ச்சிக்
கோதா விரியில்தன் போதக நீருணக்
கலிங்க மேழுங் கடந்து அப்பால்
சக்கரக் கோட்டத் தப்புறத் தளவும்
மேவருந் தானைத் தாவடி செலுத்தி
வேங்கை நன்னாடு மீட்டுக் கொண்டுதன்
பூங்கழற் கடைக்கலம் புகுந்த படைக்கலத்
தடக்கை விசயா தித்தற் கருளி
இசைகொடு மீண்டுவிட் டருளி யிகலிடைப்
பூண்டசெயத் திருவொடுங் கங்காபுரி புகுந்தருளி
அங்கே ராசாதி ராசன் ராசராசனெனத்
தராபதி யராகத் தமனியத் தியற்றி
படியில் மன்னவ ரடிதொழு தேத்த

இனமணிப் பீடத் திருத்தி முனையிடை
வேங்கை நன்னாட் டிடைக் கொண்ட
இருநிதிப் பிறக்கம் வரிசையிற் காட்டி
ஆழியு நிகளமும் கழற்றி ஆங்கவர்
வாழிய விரதமு மாற்றிப் பூழிமம்
செய்து வரம்பால் செங்கோல் செலுத்தி
வேத நீதியை விளக்கி மீதுயர்
வீரத் தனிக்கொடி தியாகக் கொடியொடும்
ஏற்பவர் வரு கென்று நிற்பக் கோத்தொழில்
உரிமையி னெய்தி அரைசு வீற்றிருந்து
மேவரு மனுநெறி விளக்கிய கோவிராசகேசரிவர்மரான
உடையார் ஸ்ரீவீர ராசேந்திர தேவர்க்கு யாண்டு

அஞ்சாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராச சூளா மணிச்சதுர்வேதிமங்கலத்துமஹாசபையோம். இவ்வாட்டைக் கன்னி ஞாயற்று அபரபக்ஷத்து சதுர்த்தசியுந் திங்கட் கிழமையும் பெற்ற உத்திரத்து நாள்; எம்மூர் பிரம்மஸ்தானம் பெரிய மண்டபத்தே தர்மம் செய்து கூட்டம் குறைவறக் கூடியிருந்து இவ்வூர் ஜீவிதமுடைய சேனாபதிகள் ஜயங் கொண்ட சோழ பிரம்மாதி ராஜர் தகப்பனார் மஞ்சிப்பய னரான ஜயசிங்க குலாந்தக பிரம்மராயர் பக்கல் நாங்கள் ஸ்வங்கொண்டு முன்பிவர்க்கு இறையிலியாகக் கொடுத்து இவருதாயிவர் அனுபவித்து வருகிற நிலமாவது; இவ்வூர் பெருந்தூம்பு நின்றும்போன பெருங்காலுக்குக் கிழக்கு பரத வாய்க்காலுக்கு வடக்கு இவர் விலைகொண்டுடைய கமுகந் தோட்டங்குழி இருநூற்றைம்பதும் பெரிய ஏரிக்கரைக்குக் கிழக்கு பனையந்தஞ்சேரித்தூம்புக்காலுக்குத் தெற்கும் வடக் கொரஞ்சி உருத்ரக் கிரமவித்தன் தோட்டத்துக்குத் தெற்கு பெருவதிக்குமேற்கும் (கிழக்கு) மற்று தேவதானம்நீக்கி குழி

நாலாயிரத்து இருநூறும் ஆக இவ்வூர்க்கோலால் குழி நாலாயிரத்து நானூற்றைம்பதும், இவ்வூர் ஸ்ரீமத் துவாராபதி ஸ்ரீ காமக்கோடி விண்ணகர ஆழ்வார்க்கு அர்ச்சனுபோகமாக இந்த மஞ்சிப்பய்யனுர் மகனுர் சேனுபதிகள் ஜயங்கொண்டசோழ பிரம்மாதிராஜர் கொடுத்தார், இந்நிலம் நாலாயிரத்து நானூற்றைம்பது குழியும் சந்திராதித்தவல் இந்த ஆழ்வார்க்குச் சபையோமே இறையிறுத்துக் கொடுப்போமானேம். மகாசபையோம். சபையுளிருந்து கரையிட்டுக் கரைப்பொந்து பணித்தார் பிருந்தூர் பவனந்தி சகஸ்ரனும், அரணைப் புறத்துத் திண்டகூளமாதவக்கிர வித்தனும், ஈவுனி மாதவக் கிரமவித்தனும், பணிப்பணியால் பணிகேட்டு எழுதினேன் ஊர்க்கரணத்தான் வடுகன் பாக்கரனேன். இவை என் எழுத்து.

கல்வெட்டு இருக்குமிடம்:- *செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரம் தாலூகா, மணிமங்கலம் இராசகோபாலப்பெருமாள் கோயில் மண்டபத்தின் வடபுறச் சுவர்.*

அரசன்:- *வீரராசேந்திரன் (கி. பி. 1063 - 1070)*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *5-ம் ஆட்சியாண்டு.*

அரசனைப் பற்றிய குறிப்பு:- *முதல் இராசேந்திரனது நான்காம் மகனுவன். செங்கற்பட்டு ஜில்லா திருமுக்கூடலிலுள்ள கல்வெட்டொன்றில் காணப்படும் "ஸ்ரீ வீரராசேந்திர தேவர் ஆட்டைத் திருநாள் ஆவணித்திங்கள் திருவாயிலியத்தில்" என்ற சொற்றொடர்களால் இம்மன்னன் ஆவணித் திங்கள் ஆயிலிய நாளிற் பிறந்தவன் என்பது நன்கறியக் கிடக்கின்றது. இவனுக்கு இரு மெய்க்கீர்த்திகள் உண்டு. அவற்றுள் 'திருவளர்திரள் புயத்து' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி மிகப்பெரிது. மற்றொன்று 'வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும்' என்று தொடங்குகிறது.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

ஐயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர்நாட்டு மணிமங்கலமான இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மஹாசபையார், இவ்வூர், ஜீவிதமுடைய சேனாபதிகள் ஐயங்கொண்டசோழ பிரம்மாதிராயர் தகப்பனார் மஞ்சிப்பய்யனான ஐயசிங்க குலாந்தக பிரம்மராயர் பக்கல் பொருள் பெற்று முன்பே இவர்க்கு இறையிலியாகக் கொடுத்து இவர் அனுபவித்து வருகின்ற 4450 குழி நிலத்தை, இவ்வூர் ஸ்ரீமத் துவாராபதி காமகோடி விண்ணகர ஆழ்வார்க்கு அர்ச்சனாபோகமாக மஞ்சிப்பய்யனார் மகனார் சேனாபதிகள் ஐயங்கொண்டசோழ பிரம்மாதிராஜர் கொடுத்தார். இதற்கு மணிமங்கலம் சபையார் இறையிறுத்துக் கொடுத்தனர்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

திருவளர் - திருமகள் உறைகின்ற

குவலயத்து - பூமியிலுள்ள.

அறைகழல் அரசர் - ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த அரசர்.

உறைபிலத்து - பாதாள உலகத்தில்.

கலியது ஒதுங்க - வறுமை போய் விலக.

விக்கலன் - இவனது இயற்பெயர் விக்கிரமாதித்தன். விக்கி என்றும் அழைப்பர். இவன் ஆகவமல்லனது மகன். ஆகவமல்லனது படைத்தலைவர்களில் இவனும ஒருவன். சளுக்கியர் வரலாற்றில் ஆறும விக்ரமாதித்தன் என்று குறிக்கப்பெறுகிறான்.

மாசாமந்தர் - பெரிய சேனாதிபதிகள்.

மீட்டுமவர்விட்ட - மீண்டும் சாளுக்கியர் அனுப்பிய.

தண்டுகெட - சேனை அழியுமபடி.

தண்டநாயகன் - சேனைத்தலைவன். (தண்டு - சேனை)

சாமுண்டராயன் - ஆகவமல்லனால் அனுப்பப்பட்ட பெரும் சேனைத்தலைவன். வீரராசேந்திரன் அவனது பெருஞ்சேனையை அழித்ததோடு அவனது சிரத்தையும் அரிந்தான்.

நாகலை - இவள் இருகையன் என்பானது மனைவி. இவள் சாமுண்டராயனது மகள். அழகுமிக்கவள் என்பது "தோகை யஞ்சாயல்" (Peacock in Beauty) என்ற கல்வெட்டுத்தொடரால் அறியப்படுகின்றது. வீரராசேந்திரன் அவளது முகத்தோடு மூக்கையும் அரிந்தான்.

மூன்றும்விசையினும் - மூன்றும் தடவையும். (Yet a third time.)

பரிபவம் - துன்பம்.

பொருபுனல் - அலைகள் வீசும் நீரையுடைய.

கூடல் சங்கமம் - (1) கூடல் சங்கமம்என்பது துங்கையும், பத்திரையும் கூடும் இடத்திலுள்ள கூடல் என்னும் ஊராக இருத்தல் கூடும என்பது சிலர் கொள்கை. (சோழவம்ச சரித்திரச் சுருக்கம் பக்கம் 25) (2) கிருஷ்ணையும் பஞ்சகங்கையாறுகளும் கூடும் இடமே கூடல் சங்கமம் என்பது வேறு சிலர் கொள்கை. (Dr. Fleets Article.) மறுமுறையும போர் புரிதற்கு அக்கூடல் சங்கமத்திற்கே வீரராசேந்திரனை ஆகவமல்லன் அழைத்தபோது இவன் கரந்தை என்னும் ஊரில் படையுடன் ஒரு திங்களுக்கு மேல் ஆகவமல்லனை எதிர்பார்த்துக் காத்திருந்தான்என்பது இக் கல்வெட்டால் அறியப்படுகின்றது. ஆகவே அக்கரந்தை என்ற ஊருக்கு அண்மையில்தான் கூடல் சங்கமம் இருந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.

சிங்கணன் - ஜயசிங்கன். ஆகவமல்லனுடைய மகன், கோசலைக்கு அரசன்.

எண்ணில் சாமந்தரை - அளவற்ற சேனைத்தலைவர்களை.

பின்னடுத்திருந்து - பக்கத்திருந்து.

இகல் செய்பொற்கோதை மூவத்தி - மூவேந்தி என்று இருக்கவேண்டும். 'மூவேந்தன்' என்பது சோழரது குடிப்பெயர் (A Surname of the cholaking)

முதலியான - சேனைத் தலைவனாகிய.

அண்ணல் முதலிய அனைவருமமர்போர்ப் பண்ணிய பகடிழிந்து ஓட - அரசனுடைய சேனைத் தலைவர்கள் அனைவரும் போரில் செலுத்திய பகடுகளைவிட்டு இறங்கி ஓட.

குலதனம் - மூலப்பொருள்.

மேகடம்பம் - விதானம், மேற்கட்டி (இச்சொல்லை பெருந் தொகை என்னும் நூலில் காணலாம்.)

சூகரக்கொடி - பன்றிக்கொடி. 'காக்கைக்கொடி' என்று சில கல்வெட்டுக்களில் உள்ளது பொருந்தாது. சளுக்கியர் கொடி பன்றிக் கொடியே (சூகரக்கொடி) ஆதலாலும், உல்ஷ்துரை அவர்களும் The Boar-Banner என்று எழுதியிருப்பதாலும் 'சூகரக்கொடி' என்பதே பொருத்தமான பாடமாகும்.

மகரதோரணம் - (மகரம் - மீன்) மீனின் வடிவம் எழுதப் பெற்ற தோரணம்.

புட்பகப் பிடி - பெண் யானையின் பெயர்.

பொத்தப்பி - இந்நாடு தொண்டை மண்டலத்திற்கு வடக்கே கடப்பை ஜில்லாவிலிருந்த ஒரு நாடாகும். காளத்தியைச் சூழ்ந்துள்ள பகுதி. கண்ணப்ப நாயனாரது உடுப்பூரும் இந் நாட்டில்தான் உள்ளது. இந்த நாட்டு வேந்தன் எதற்காகக் கொல்லப்பட்டான் என்று தெரியவில்லை.

தென்னவன் ஸ்ரீ வல்லபன்மகன் சிறுவனை மின்னவில் மணிமுடி வீரகேசரியை - சீவல்லப பாண்டியன் மகன் சிறுவனாய் இருந்த மின்னலைப்போல் ஒளி விடுகின்ற இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற கிரீடத்தையுடைய வீரகேசரியை.

வாரணம் - யானை. செங்கீரை - குழந்தைகள்.

சூழிபுனல் - நீரால் சூழப்பட்ட.

தண்டாரசோகையன் - குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த அசோகையன்.

தேமரு தெரியல் - (தேன் நிறைந்த) வண்டுகள் சூழ்ந்துள்ள மாலை.

மாமதி வங்காரன் - மிக்க அறிவினையுடைய வங்காரன் என்பவன்.

வம்புமதயானை - கழுத்துக்கச்சையும் மதநீரையும் உடைய யானை.

கங்கை மாநகர் - முதல் இராசேந்திர சோழன் கங்கைப் படையெடுப்பு முடிந்ததும் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற தலைநகர் ஒன்றை ஏற்படுத்தினான். இவன் அமைத்த பெருநகர் கங்காபுரிஎன்று கலிங்கத்துப் பரணியிலும், கங்கைமாநகர் என்று மெய்க்கீர்த்திகளிலும், கங்காபுரம் என்று தண்டியலங்கார மேற்கோள் பாடலிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இத்தகைய பெருநகர் இழிந்த நிலையில் இன்று கும்பகோணத்திற்கு வடகிழக்கில் பத்துமைல் தூரத்தில் திருப்பனந்தாளுக்கு வடக்கே கொள்ளிடத்திற்குக் கட்டப்பெற்றுள்ள அணையிலிருந்து அரியலூர்க்குச் செல்லும் பெருவழியில் உள்ளது. உட்கோட்டை, மாளிகைமேடு, ஆயிரக்கலம், வானதரையன்குப்பம், கொல்லாபுரம், வீரசோழநல்லூர், சுண்ணம்புக்குழி, குருகைபாலப்பன் கோயில் என்பன கங்கைகொண்ட சோழபுரத்தின் பகுதிகளாக முன்னர் நிலவியவை.

திங்களின் வழிவருசளுக்கி - இதனால் சளுக்கியர் சந்திர குலத்தவர் என்று தெரிகிறது.

ஏவமுற்று - துன்பமுற்று.

முதுகிட்டுடைந்த - முதுகுகாட்டித் தோற்றோடிய.

இரட்டபாடிப் புரட்டரில் மேதகு கங்காகேத்தனை - இரட்ட பாடியிலுள்ள சாளுக்கிய அமைச்சர்களுள் மேன்மை பொருந்திய கங்காகேத்தனை.

கால்கெடஓடி - காலில் புண்படும்படி ஓடி.

முரட்டொழிலடக்கி - போர்த் தொழிலை அடக்கி.

வெங்கதப் புலியேறு - கொடிய சினமுள்ள ஆண்புலி.

விசயவாடை - இது கிருஷ்ண நதியின் கரையில் இருக்கும் இக்காலத்தில் பெசவாடா அல்லது விஜயவாடா என்று வழங்கப்பெறுகிறது.

அடவியிற்பாய்ச்சி - காட்டிற்கு ஓடும்படிச் செய்து.

போதகம் - யானை.

கங்காபுரி - கங்கைமாநகர் - கங்கைகொண்ட சோழபுரம்.

ஆழியும் நிகளமும்கழற்றி - கைவளையையும் விலங்குகளையும் கழற்றி.

வீரத்தனிக்கொடி - வீரத்தை உணர்த்தும் கொடி.

தியாகக்கொடி - திாயகத்தை உணர்த்தும் கொடி. (தியாகம் - கொடை)

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் போர்ச்செயல்கள்:-

இவன் (வீரராசேந்திரன்) சாளுக்கியரோடு ஐந்து முறை போர் செய்து வென்றான்.

முதற் போர் :— வீரராசேந்திரன் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு இரட்டபாடி நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். அதுபொழுது தன்னை எதிர்த்து வந்த ஆகவமல்லனது இரண்டாவது மகனாகிய விக்கலனையும், அவனது சேனாபதியையும் கங்கபாடிக் களத்தினின்று துங்கபத்திரை நதிக் கரைக்குத் துரத்திவிட்டான்.

இரண்டாம் போர்:— ஆகவமல்லன் இரண்டாம் முறையாக வனவாசியில் தன் பிரதிநிதியாக இருந்த மாதண்ட நாயகனாகிய சாமுண்ட ராயன் என்பவனை வேங்கி நாட்டிற்கு அனுப்பினான். வீரராசேந்திரன் அச்சேனை அழியும்படித் தாக்கியதோடு சாமுண்டராயனது தலையையும் அறுத்தான். பின் அவனது ஒரே மகளாகிய இருகையன்தேவி, நாகலையென்னும் தோகை யஞ்சாயலை முகத்தொடு மூக்கு வேருக்கினான்.

மூன்றும் போர்:— இதுவும் கூடல் சங்கமத்தில் கி. பி. 1064-ல் நடந்தது. "வடகடலென்ன வகுத்தவத் தானையைக் கடகளிறென்றால் கலக்கி" என்ற மெய்க்கீர்த்திப் பகுதியால் கடல்போன்ற பெரும் படையைத் திரட்டிக்கொண்டு சாளுக்கியர் இவனோடு போர்புரிய வந்திருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாகிறது. எனவே இரு தரத்தினரும் கடும்போர் புரிந்தனர் என்பது ஒருதலை. அப்போரில் மேலைச் சளுக்கியத் தண்ட நாயகர்களாகியகேசவன், கேத்தரையன், மாரயன், போத்தரையன் இரேச்சயன் என்போர் கொல்லப்பட்டனர். படைத்தலைவனாகிய மதுவணனும், அரசகுமாரர்களாகிய விக்கலன், சிங்கணன் என்பவர்களும ஆகவமல்லனும் எதிர்த்துப் போர்புரிய முடியாமல் புறங்காட்டி ஓடினர். வீரராசேந்திரன் பெரு வெற்றி யெய்தி ஆகவமல்லனுடைய பாசறையை முற்றுகையிட்டு, அவன் மனைவியரையும், பட்டத்து யானையாகிய புட்பகப் பிடியையும், வராகக் கொடியையும், யானை குதிரைகளையும் மற்றும் பல பொருள்களையும், குலதனம், சங்கு, தொங்கல், தாரை பேரி, மேகடம்பம் முதலியவற்றையும், கைப்பற்றிக்கொண்டு தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்தை யடைந்து விசயாபிடேகம் செய்துகொண்டான்.

நான்காம் போர்:— இப்போர் எங்கு நடைபெற்றதென்று தெரியவில்லை. இதுவும் கூடல் சங்கமத்தில்தான் நடந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அதில் மேலைச் சளுக்கியர் பேரிழப்பிற்கும் பெருந்துன்பத்திற்கும் ஆளாயினர். சளுக்கியத் தண்டநாயகர்களாகிய மல்லியண்ணன், மஞ்சிப்பையன், பிரம தேவன், அசோகையன், சத்தியண்ணன், வீமய்யன் வங்காரன்

என்போர் வீரராசேந்திரனுல் கொல்லப்பட்டனர். மற்றும் கங்கன், நுளம்பன், காடவர்கோன், வைதும்பராயன் என்னும் அரசர்களும் அப்போரில் உயிர்நீத்தனர்.

ஐந்தாம் போர்:— இப்போர் வேங்கிநாட்டில் நடைபெற்றதாதல்வேண்டும். 'வேங்கிப்போர்' என இதை அழைக்கலாம். ஆகவமல்லன் வீரராசேந்திரன்பால் 4-ம் முறையாகத் தோற்ற பின் பழியொடு வாழ்வதினும சாவது சால நன்றென்றெண்ணி தன்பழியைப் போக்கக்கருதி, தன் புதல்வரும்தானும முன்னர்த் தோற்ற கூடல் சங்கமத்தையே போர்க்களமாகக்கொண்டு தன்னேடு போர்புரிய வரவேண்டும் எனறும், அங்ஙனம் வாராதஞ்சியவர் போர்ப்பெரும் பழிப்புரட்டர் ஆவர், மன்னர் அல்லர் என்றும் ஒரு திருமுகமெழுதி கி. பி. 1067ல் கங்காகேத்தன் என்பவனிடம் கொடுத்து அதனை வீரராசேந்திரன்பால் அனுப்பினுன். அதனைப் பெற்றுச் செய்தி யுணர்ந்த வீரராசேந்திரன் சிந்தையும் முகமுந் திருப்புயமிரண்டும ஏந்தெழில் உவகையொடு இருமடங்கு பொலிய ஐந்தாம் முறை ஆகவமல்லனேடு போர்புரிவதற்கு கூடல்சங்கமத்திற்குச் சென்று அதற்கணித்தாகவுள்ள கரந்தை என்னும் இடத்தில் அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். எதிர் பார்த்திருந்தும் ஆகவமல்லன் வாராததனுல் பெருஞ்சினமகொண்டு இரட்டபாடி நாட்டில் அப்பகுதியிலிருந்த தேவநாதன், சித்தி, கேசி என்னும் சளுக்கியத் தலைவர் மூவரும தோற்றுத் தனித்தனியாக முதுகு காட்டி ஓடும்படி போர்புரிந்து பல இடங்களில் எரியூட்டித் துங்கபத்திரைக் கரையில் நானிலம் புகழ ஒரு வெற்றித்தூணும் நிறுவினுன். அன்றியும ஆகவமல்லனைப் போல் ஓர் உருவம் அமைத்துக் கழுத்திற் கண்டிகைபூட்டி அவனும் அவன் மக்களும் தனக்கஞ்சி உலகறிய ஐந்து முறை முதுகுகாட்டி ஓடிய செய்தியை ஒரு பலகையில் எழுதுவித்து அதனை அதன் மார்பில் தொங்கவிட்டு மற்றுஞ்சில அவமானங்களும் செய்து பிறகு அவன் கைப்பற்றியிருந்த "வேங்கிநாட்டை மீட்காமல் திரும்புவதில்லை; வல்லவனுகில் வந்துகாக்க" என்று சொல்லியனுப்பிவிட்டு வேங்கை நாட்டைநோக்கிச் சென்றனன்.

அங்கு எதிர்த்தமேலைச் சளுக்கியத் தண்டநாயகர்களாகிய சனநாதன், இராசமய்யன், திப்பரசன் என்போரை இக்காலத்தில் பெசவாடா என்று வழங்கும் விசயவாடை என்ற இடத்தில் பொருது அவர்களைப் பிழைத்தோடுமாறு செய்தனன். இறுதியில் வேங்கியைத் தன்பால் அடைக்கலம் புகுந்திருந்த கீழைச் சளுக்கிய மன்னனாகிய ஏழாம் விசயாதித்தனுக்கு அளித்து விட்டுத் தன நாடு திரும்பினான்.

பிற போர்கள்:- இவன் பொத்தப்பி வேந்தனையும், சேரனையும் வென்றான். சனநாதனுடைய தம்பியின் தலையை வெட்டினான். சீவல்லபபாண்டியன் மகனாகிய வீரகேசரியைத் தோற்கடித்தான்.

வீரராசேந்திரனின் அரசாளும் திறமை:- இலக்குமி உறைகின்ற பெரிய பூமியாகிய வட்டத்தைத் தன இரத்தினாபரணம் எனத் தாங்கிப் பல முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட கொற்ற வெண்குடை நிழலிலே உலகத்து உயிர்களைப் பெற்ற தாயைக் காட்டிலும் பாதுகாத்து, நிலவரசர்கள் தனக்குத் திறை செலுத்த நாட்டில் வறுமையைப் போக்கி அரசாட்சி செலுத்தினான். வீரக்கொடியுடனும், தியாகக் கொடியுடனும் மனுநெறியின்படி கோத்தொழில் உரிமையில் எய்தி அரசு வீற்றிருந்தான்.

வீரராசேந்திரனின் மனைவியார்:— இவன் மனைவி உலக முழுதுடையாள் என்பவள். குலோத்துங்கசோழன் கல்வெட்டில் "வீரராசேந்திரன் நம்பிராட்டியான அருமொழிநங்கையரான ஸ்ரீமன் மகாதேவியார்,' என்று காணப்படுவதால் வீரராசேந்திரன் மனைவி அருண்மொழி நங்கை என்று மற்றொருவள் இருந்தாள் என்றும், அவள் வீரராசேந்திரன் இறந்த பிறகு 15 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தாள் என்றும் தெரிகிறது. உலக முழுதுடையாளும் இவளும் ஒருவரோ அல்லது வெவ்வேறு மனைவியரோ என்பது தெரியவில்லை.

உரைநடைப் பகுதிப் பொருள் விளக்கம்:-

ஜயங்கொண்ட சோழன் - இராசராசன்.

கன்னி ஞாயிறு - புரட்டாசி மாதம்.

அபரபக்ஷத்து - வளர்பிறையில்.

ஜீவிதமுடைய - The owner of a living in this village.

ஸ்வம் - பொருள்

இவருதாயிவர் அனுபவித்து வருகிற - இவருக்கு உரிமையுடையதாய் இவர் பயன்படுத்தி வருகிற.

கரையிட்டு - எல்லையிட்டு. கரைப்பொந்து பணித்த - மேற்பார்வை செய்த.

இச் சாசனத்தை எழுதப் பணித்தவர்:-

1. பிருந்தூர் பவனந்தி ஸகஸ்ரன்.
2. அரணைப்புறத்து திண்டகூளமாதவக் கிரமவித்தன்.
3. ஈவுணி மாதவக் கிரமவித்தன்.

எழுதியவர்:- ஊர்க்கரணத்தான் வடுகன் பாக்கரன்.

பொதுச் செய்தி

இக் கல்வெட்டுக்கு அரசியலார் பதிப்பில் உள்ள ஆங்கில மொழி பெயர்ப்பில் வீரராசேந்திரன் தன் உறவினர்களுக்குப் பட்டம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டு மூலத்திலுள்ள மெய்க்கீர்த்தியில் இச் செய்தி கூறப்படவில்லை. நம் பாடத்திற்குரியது 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. அரசியலார் கல்வெட்டுப்பதிப்பில் உள்ள மொழிபெயர்ப்புச் செய்தி வீரராசேந்திரனது 3-ம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டை யொட்டி எழுதப்பட்டுள்ளது போலும்.

கல்வெட்டு - 18

குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தி

ஸ்வஸ்திஸ்ரீ

புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளை யிளங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்கிரமத் தொழிலால்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயின்முனைக்
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுடம் முறைமையிற் சூடித்
தன்னடி யிரண்டும் தடமுடியாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னை
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனுது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீவாந் தரத்துப் பூபாலர் திறைவிடு (தந்த)
கலஞ்சொரி களிறுமுறை முறைநிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்

பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விங்நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற்றல்லது தன்கை
வில்லெதிர் கோடா விக்கலன் கல்லதர்
நங்கிலி துடங்கி மணலூர்நாடுவென்று
துங்கபத்திரையளவும் எங்கணும்
பட்டவெங் களிறும் விட்டதன் மானமும்
கூறின வீரமும் கிடப்பவேறின
மலைகளு முதுகு நெளிப்ப இழிந்த
நதிகளுஞ் சுழன்றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தந்நா ளுகந்து தானும் தானையும்
பன்னு ளிட்ட பலபல முதுகும்
பயத்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்துகொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கொண்டு
ஈண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தருளி வெள்ளம்
வருபரித்தரங்கமும் பொருகரித்தரங்கமும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெருவிமுதுகுநெளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொற்றை வெஞ்சுர மேற்றிக் கொற்ற

செயத் தம்பந் திசைதொறும் நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித்தென்னுட்
டெல்லை காட்டிக் குடமலை நாட்டுள
சாவே றெல்லாங் இருவிசும் பேற
மாவே றியதன் வருதனித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டாறுட்பட
நெறிகளில் நிலைகளிட் டருளிப் பொங்கொளி
ஆரமும் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழ
வீற்றிருந் தருளிய கோவிராசகேசரி வன்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு

பதினைஞ்சாவது உடையார் ஸ்ரீ வீரராசேந்திரதேவர் நம் பிராட்டியாரான அருமொழி நங்கையாரான ஸ்ரீமன் மஹா தேவியார்.........

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சைக் கோயில் கருவறையின் வடக்குப்புறச் சுவரில் உள்ளது.*

அரசன்:- *முதற் குலோத்துங்க சோழன்* (கி. பி. *1070 - 1118*)

காலம்:- *15-வது ஆட்சியாண்டு.*

முதற் குலோத்துங்கன்:- *"சுங்கந்தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்" என்று கல்வெட்டுக்களில் புகழப்பட்ட இவ்வேந்தன் கீழைச்சளுக்கியமன்னனுகிய இராசராச நரேந்திரனின் புதல்வன். இவன் தாய் கங்கைகொண்டசோழன் புதல்வியாகிய அம்மங்கைதேவியாராவர். இவன் பூசநாளில் பிறந்தவன் என்பது குண்டூர் ஜில்லா பாபட்லாவில் உள்ள திருமால் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றுல்*

அறியப்படுகின்றது. இவனுக்கு இளமையில் இராசேந்திரன் எனனும் பெயர் இடப்பெற்றிருந்தது என்பது செல்லூர்ச் செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது. "விஷ்ணுவர்த்தனன்" என்னும் அபிடேகப் பெயர் பெற்றவன். இவன் கி. பி. 1070 ஆம் ஆண்டு சூன் திங்கள் 9-ஆம் நாளில் முறைப்படி முடிசூடினன். 'இராசகேசரி' என்னும் பட்டம் பூண்டவன். இவனுக்குப் பல மெய்க்கீர்த்திகள் உண்டு. அவற்றுள் ஒன்று 'திருமன்னி விளங்கும்' என்று தொடங்குகிறது. மற்ருென்று "புகழ்சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த புவியில்" என்று தொடங்குகிறது. இன்னென்று "புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப" என்று தொடங்குவதாகும்.

புணரி அகழ்சூழ்ந்த புவியில் - கடலாகிய அகழ் சூழ்ந்த பூமியில்.

பொன்நேமியளவும் தன்நேமிநடப்ப - மகாமேருமலே வரைக்கும் தன் ஆணையாகிய சக்கரம் நடக்க.

இளங்கோப் பருவத்து - அரசுரிமை ஏற்ற இளமைப் பருவத்து.

சக்கரக் கோட்டம் - மத்திய மாகாணத்தில் உள்ள வத்ச இராச்சியத்தில் உள்ளது. இவ்வத்சராச்சியம் Bastar State என்று இப்போது வழங்குகிறறு. (இவ்வத்சராச்சியமே சக்கரக் கோட்டம் என்று கூறுவது பொருந்தாது) சக்கரக் கோட்டம் "சித்ரக்கூட் (Chitrakut) என்று இந்நாளில் வழங்குகிறது. தற்காலத் தலைநகரகிய ஜகதல் பூருக்கு மேற்கே 25-மைல் தூரத்திலுள்ளது. "சக்கரக் கூடாதீஸ்வரனும் .... தாராவர்ஷ நாமோ நரேஸ்வரா" என்றகுருஸ்பால் கல்வெட்டால் சக்கரக் கோட்டத்தைத் தாராடவர்ஷன் ஆண்டமை அறியக் கிடக்கின்றது.

விக்ரமத் தொழிலால் - வெற்றிகரமான செய்கையால்

மதவரைஈட்டம் - மதத்தையுடைய யானைக் கூட்டம்.

வயிராகரம் - மத்திய மாகாணத்தில் உள்ளதொரு ஊர். வயிராகரத்தில் இவன் எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றினான். வயிராகரத்தில் யானைகளும் வைரச்சுரங்கங்களும் முற்காலத்தில் மிகுதியாக இருந்தன என்று 'அயினி - அக்பரி' என்னும் நூல் கூறுகின்றது. எனவே, நம் குலோத்துங்கன் எண்ணிறந்தயானைகளை அங்குங் கைப்பற்றினான் என்று இவன் மெய்க்கீர்த்தி கூறுவது பொருத்தமுடையதேயாம். இவ்வூர் சக்கரக் கோட்டத்திற்கு அண்மையில் உள்ளது. ஆகவே, வத்சராச்சிய அரசனாகிய தாராவர்ஷன் ஆட்சிக்கு இஃது உட்பட்டது என்பது வெளிப்படை.

வாரி - மிகுதியாகப் பிடித்து.

அயிர்முனை - போர்முனை.

கொந்தள வரசர்தந்தளமிரிய - சளுக்கிய அரசர்தங்களுடைய சேனை புறங்காட்டி ஓட.

வாளுறை கழித்து - வாளை உறையிலிருந்து எடுத்து.

தேமருகமலப் பூமகள் - திருமகள். (Sweet and excellant Lotus-flower)

பொன்னியாடை நன்னிலப் பாவையின் தனிமையும் தவிர - காவிரியை ஆடையாக உடைய சோழமண்டலமாகிய பெண் தனக்குத் தலைவன் இன்மையால் தனிமையாக இருப்பது நீங்க.

இருநிலவளாகம் - பெரிய பூமியாகிய இடம்.

தீவாந்தரத்துப் பூபாலர் - பல தீவுகளிலுள்ள அரசர்.

கலஞ்சொரி களிறு - கப்பலிலிருந்து கொண்டுவரப்பட்ட யானைகள்.

முறை முறை நிற்ப - அணி அணியாக நிற்க.

விலங்கியதென்னவன் - கப்பம்கட்ட மறுத்த பாண்டியன்.

தன்பொன்னகர் - கங்கைகொண்ட சோழபுரம்.

பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ் ....
.... விக்கலன் - நின்னிடத்தில் யான் செய்தது பிழைதான் என்று கூறி தேய்பிறைச் சந்திரன் போல உடல் வளைந்து வணங்குவதன்றித் தனது வில்லை வளைக்க இயலாத (போரில் வெற்றிபெற முடியாது என்பதுபொருள்) விக்கலன் என்றவாறு.

கல்லதர் - கற்கள் நிறைந்த வழியையுடைய.

நங்கிலி துடங்கி மணலூர் - நங்கிலியிலிருந்து மணலூர் வரை. நங்கிலி மைசூர் இராச்சியத்திலுள்ள கோலார் ஜில்லா முலபாகல் தாலூகாவில் உள்ளது. சில கல்வெட்டுக்களில் அளத்தி என்று காணப்படுகிறது. மணலூரும் நங்கிலியும் காணப்படவில்லை.

எங்கணும்பட்ட - எவ்விடத்திலும் இறந்துபோன.

குடதிசைத் தந்நாளுகந்து - தன் பிறந்த நக்ஷத்திரமாகிய பூசநாள் விழாவைச் சேரநாட்டில் நடாத்தி. ('சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர் திருநக்ஷத்திரமான பூசத் திருநாள் எழுந்தருள" என்ற குண்டூர் ஜில்லாக் கல்வெட்டால் இவன் பூசநாளில் பிறந்தவன் என்று தெரிகிறது.)

சிங்கணம் - கங்கமண்டலத்திற்கு அருகில் உள்ளதாதல் வேண்டும். விக்ரமாதித்தன் தம்பி சயசிங்கன் பிரதிநிதியா யிருந்து அரசாண்ட வனவாசி நாடே ஒருகால் அவ்வாறு குறிப் பிடப் பட்டிருத்தல் கூடும். (சோழர்வரலாறு இரண்டாம் பாகம் பக்கம் 17)

பாணி - தேசம்.

ஒருவிசை - ஒருமுறை.

வெள்ளம் வருபரிதரங்கம் - வெள்ளம்போல் வருகின்ற குதிரைப் படையும்.

தந்திரவாரியும் உடைத்தாய் - சேனசமுத்திரமும உடைய தாய்.

வடகடல் தென்கடல் படர்வதுபோல - வடக்கிலுள்ள கடல் தெற்கிலுள்ள கடலைத்தேடிச் செல்வதுபோல (வடகடல் தென் கடலை உண்ணசென்றது போல என்பர் டாக்டர் மா. இராச மாணிக்கனார்.)

பஞ்சவர் ஐவரும் - பாண்டியர்கள் ஐவரும் முதற் குலோத் துங்கன் காலத்தில் ஐந்து பிரிவினராய் இருந்தனர். அன்னோர் உடன்பிறந்தோராக இருத்தல்வேண்டும். 13-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்குவந்த மார்கோபோலோவும் பாண்டியர் ஐவர் என்றே கூறுகிறார்.

அரணெனப் புக்க காடறத்துடைத்து - அவர்கள் அரண் என்று புகுந்திருந்த காட்டை அழித்து.

வனசரர் - வேடர்.

பொற்றை வெஞ்சுரம் - பொற்றைக்கல் நிறைந்த கொடிய காடு.

முத்தமிழ்ப் பொதியில் - பொதியமலை என்றும் பொதிகை என்றும் வழங்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபர்ணி ஆற்றின் தோற்றம் இம்மலையிலேயே ஆகும். இம்மலையே அகத்தியர் உறைவிடமாகும். இவர் 'தமிழ் முனி' என்றும், 'தமிழ் ஞானி' என்றும், 'முத்தமிழ் உரையன்' முத்தமிழ்த் தலைவன் என்றும் அழைக்கப் பெறுவர். இவரே முத்தமிழ் இலக்கணத்தைச் செய்தவர்.

கரிபடுமையச்சையம் - யானைகள் இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலை.

கன்னி - கன்னியாகுமரி (Cape Comorin)

குடமலை நாட்டுள - மேற்குத்தொடர்ச்சிமலை நாட்டிலுள்ள

சாவேறெல்லாம் தனி விசும்பேற - வீரர்கள் எல்லாம் ஒப்பற்ற விண்ணுலகம் போக.

மாவேறிய தன் வருதனித் தலைவரை - யானைகுதிரைகளில் ஏறியிருந்த சேனைத் தலைவரை.

குறுகலர்சூலைய - பகைவர் அழிய.

கோட்டாறு - திருவாங்கூர் இராச்சியத்தில் குமரி முனைக்கு வடக்கில் பத்து மைலில் உள்ள ஊர்.

நிலைகள் இட்டருளி - நிலைப்படைகளை அமைத்தருளி (Standing Army) இந்நிலைப்படை "கோட்டாற்று நிலைப்படை" என வழங்கப் பெற்றது.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வீரச்செயல்:-

1. இளவரசுப் பட்டங்கட்டி வடக்கே திக்குவிஜயம் செய்தது:- இளவரசனாய் இருந்தபொழுது சக்கரக் கோட்டத்திற்குச் சென்று அங்கு ஆண்டுவந்த அரசனைத் தோற்கடித்தான். வயிராகரத்தில் எண்ணற்ற யானைகளைக் கைப்பற்றினான். பின் சளுக்கிய அரசரது சேனையைப் புறங்காட்டி ஓடச் செய்தான்.

2. சோழமண்டலத்தின் ஆட்சியைப்பெற்றது:- காவிரியை ஆடையாக அணிந்துள்ள சோழ மண்டலமாகிய பெண், தனக்குத் தலைவனின்றித் தனிமையாய் இருப்பதை யறிந்து உடன் வந்து மணி மகுடத்தை உரிமையினால் சூடிக்கொண்டு, முன்னை மனுநெறி தழைக்க, வறுமை போய் விலக, திசை தொறும் செங்கோல் செல்ல, இருநிலமுழுதும் தனது திருநிழல் வெண்ணிலாத் திகழ, மேருமலையில் புலிக்கொடி பறக்க, பல தீவுகளிலுமுள்ள அரசர் கொணர்ந்த களிறுகள் அணி அணியாக நிற்க, ஆண்டு வந்தான்.

3. பாண்டியனோடு போர்:- தன்னோடு மாறுபட்ட பாண்டியனுடைய பெரிய தலையைப் பருந்து அலைத்திடச் செய்தான்.

4. மேலைச் சளுக்கியப் போர்:- குலோத்துங்கன் விக்கலனோடு நங்கிலி என்னும் இடத்தில் பொருதான். இப்போரில் விக்கலன் தோற்று ஓடினன். அவனைக் குலோத்துங்கன் துங்கபத்திரை யாற்றுக்கு அப்பாலும் துரத்திச் சென்றான். அவ்வாறு சென்றவன், விக்கிரமாதித்தனை மணலூர் என்னும் ஊரில் மீளவும் தோற்கடித்தான். அப்போரில் இவன் மேலைச் சளுக்கியருடைய களிறுகள் பலவற்றைக் கவர்ந்துகொண்டான்.

5. கங்கப் போர்:- கங்க மண்டலத்தையும் சிங்கணம் என்னும் தேசத்தையும் கைக்கொண்டான்.

6. பாண்டியனோடு இரண்டாவது போர்:- குலோத்துங்கன் பெருஞ் சேனையோடு பாண்டியர்கள் மீது படையெடுத்துச் சென்றான். இக்காலம் பாண்டியர்கள் ஐந்து பிரிவினர்களாய் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, குலோத்துங்கனை எதிர்த்தனர். இப்போரில் பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளித்தனர். முத்துக்குளித்தற்குரிய மன்னார்குடாக் கடலைச் சார்ந்த நாடும், யானைகள் இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலையும், கன்னியாகுமரிப் பகுதியும் இவனால் கைக்கொள்ளப்பட்டன.

7. சேரனுடன் நடத்திய போர்:- சேரனுக்கும், குலோத்துங்கனுக்கும் கோட்டாற்றில் பெரும் போர் நிகழ்ந்தது. மலைநாட்டு வீரர் பலர் இறந்தனர். குலோத்துங்கன் கோட்டாற்றில் சிறந்த படைத் தலைவர்களின்கீழ் நிலைப்படைகள் நிறுவினான்.

குலோத்துங்கனின் நாட்டெல்லை:- வடஎல்லை:- 'பொன்னேமி யளவுந் தன்நேமி நடப்ப' என்பதால் மேரு மலை இவனது வடஎல்லை என்றும், தென்எல்லை:- "கன்னியுங் கைக்கொண்டருளி தென்னாட்டெல்லை காட்டி" என்பதால் தென்எல்லை கன்னியாகுமரி என்றும் அறியலாம்.

கல்வெட்டு - 19

வில்லவராயன் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ

புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளை யிளங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்கிரமத் தொழிலால்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயிர்முனைக்
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுடம் உரிமையிற் சூடித்
தன்னடி யிரண்டும் தடமுடியாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னை
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீவாந் தரத்துப் பூபாலர் திறைவிடு (தந்த)
கலஞ்சொரி களிறுமுறை முறைநிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்

பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விங்நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற்றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
பட்டவெம் பரியும் விட்டதன் மானமும்
கூறின வீரமும் கிடப்பவேறின
மலைகளு முதுகு நெளிப்ப இழிந்த
நதிகளுஞ் சுழன்றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தந்நா ளுகந்து தானும் தானையும்
பன்னு ளிட்ட பலபல முதுகும்
பயத்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்துகொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கைக்கொண்
டண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித்தரங்கமும் பொருபரிக்கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிந்நெளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொற்றை வெஞ்சுர மேற்றிக் கொற்ற
விசயத் தம்பந் திசைதொறும் நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு

மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித்தென்னுட்
டெல்லை காட்டிக் குடமலை நாட்டுள
சாவே றெல்லாந் தனிவிசும் பேற
மாவே றியதன் வருதனித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டாறுட் பட
நெறிதொறு நிலைகளிட் டருளித்திறல்கொள்
ஆரமும் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்மிசைச்
ஆரமும் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவனிடத் துமை யெனத் தியாகவல்லி
உலக முடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலகம்
ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்
வாழி மலர்ந்தினி திருப்ப வூழியுந்
திருமா லாகத்துப் பிரியா தென்றும்
திருமக ளிருந்தென வீரசிம் மாசனத்து
வீற்றிருந் தருளிய கோவிராசகேசரி வன்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு

சடுள ஆவது ஆண்டு பாண்டிகுலாசனி வளநாட்டு மீகோழை தேவதான பிரமதேயம் திருவானைக்காவில் திருவெண்ணாவல் கீழினிதமர்ந்தருளிய திரிபுவனபதிக்கு மூலப்பிருத்யனாகிய சண்டேஸ்வரர் ஆதேசம் ஜயசிங்க குலகால வளநாட்டு மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி அரையன் மகன் முனையன் அருமொழித்தேவனான வில்லவராயனுக்கு நாம் விற்றுக்கொடுத்த நிலமாவது; உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமான் தேவதானம் தென்கரை ஊர்களில் பாண்டி குலாசனி வளநாட்டு மீகோழை ஆளிகுடியில்

இவனுக்கு விற்றுக்கொடுத்த நிலத்துக்கிசைந்த (1) கீழ்பாற்கெல்லை பிள்ளைக்கொள்ளி வாய்க்காலுக்கு மேற்கும் (2) தென்பாற்கெல்லை வடக்கிலகை வாய்க்காலுக்கு வடக்கும் (3) மீபாற்கெல்லை உத்தமசீலிச் சதுர்ப்பேதி மங்கலத்துத் தென்பிடாகை புதுக்குடி எல்லைக்குக்கிழக்கும் (4) வடபாற்கெல்லை தென்னுற்றங்கரைப்பெருவழிக்குத்தெற்கு ஆக இவ்விசைந்த பெருநான்கெல்லையுள்பட்ட நிலம் ௪௲ (4¾) இந்நிலம் நாலே முக்காலும் இத்தேவர்க்கு யாண்டு நாற்பத்தேழாவது வரை பயிரிலி செய்யாய்க்குட்டமு மண்ணுமிட்டுக்கிடந்தமையின் அந்நிலம்முனையன் அருமொழித்தேவனை வில்லவராயனுக்கு விற்றுக் கொடுத்துக் கொள்வதாக எம்மில்இசைந்த விலைப்பொருள் அன்றுடு நற்காசு ௪௰௫ இக்காசு நாலே மாகாணியுங் கைக்கொண்டு திருவானைக்காவுடைய எம்பெருமான் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கி முனையன் அருமொழித்தேவனைவில்லவராயனுக்கு விற்றுக்கொடுத்து இவன் உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமான் கோயிலில் இடங்கை நாயகரென்று எழுந்தருளுவித்த இடபவாகன தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும், திருமஞ்சனங்களுக்கும் திருவமிர்து படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிபந்தங்களுக்கு இந்நிலம் ௪௲ (4¾) கல்லித்திருத்தி ஸ்ரீ பண்டாரத்துப் புன்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேசரி மரக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதான ஐ உ௧௩ களவதங இருபத்து முக்கலம் நெல் இருதூணிக் குறுணியும் அளக்குமிடத்தில் கார்பாதி பாசானம் பாதி அளப்பதாகவும் இதில் மிகுதி கொண்டு இவன் இடங்கைநாயகரென்று எழுந்தருளுவித்த இடபவாஹன தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சனப்படிகளுக்கும் திருவமுதுபடிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிபந்தங்களுக்கு நிபந்தஞ்செய்து கொடுத்தோம்,

முனையன் அருமொழித்தேவனை வில்லவராயனுக்குத் திருவானைக்காவுடைய எம்பெருமானுக்கு மூலப்பிருத்ய ஞகியசண்டேஸ்வரன் உள்ளிட்ட கன்மிகளோம். இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருச்சி ஜில்லா திருவரங்கத்தின் அண்மையில் திருவானைக்காவிலுள்ள ஜம்புகேஸ்வரர் கோயிலின் இரண்டாம் பிராகாரத்துக் கிழ்ச்சுவர்.*

அரசன்:- *முதற் குலோத்துங்க சோழன். (கி. பி. 1070 - 1120)*

காலம்:- *47-ம் ஆட்சியாண்டு. கி. பி. 1117.*

கல்வெட்டால் அறியப்படும்செய்தி:- *பாண்டி குலாசனி வளநாட்டுமீகோழை ஆளிகுடியில், பயிர் செய்யப்பெருமல்மேடும் பள்ளமுமாய்க் கிடந்த $4\frac{3}{4}$ வேலி நிலத்தைத், திருவானைக்கா கோயிலில் வெண்ணுவல் கீழ் எழுந்தருளியிருக்கும் திரிபுவன பதிக்குப் பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் உள்ளிட்ட கன்மிகள், ஜயசிங்க குலகால வளநாட்டு, மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி, அரையன் மகன் அருமொழித்தேவனை வில்லவராயனுக்கு, நாலேமாகாணிக் காசுக்கு விற்றுக் கொடுத்து, அக்காசைக் கோயில் பண்டாரத்தில் ஒடுக்கியுள்ளனர். இந் நிலத்தைக் கல்லித் திருத்திப் பயிரிட்டு வரும் வருவாயான இருபத்து முக்கலனே இரு தூணிக் (23 கலம் 2 தூணி) குறுணி நெல்லையுங்கொண்டு, இவ்வில்லவராயன் திருவானைக்காகோயிலில் எழுந்தருளுவித்த இடங்கைநாயகருக்கும், அவர் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சனப்படிகளுக்கும், திருவமுதுபடிக்கும், இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் எழுந்தருளுகைக்குமாகப்பயன்படுத்திக்கொள்ளுமாறு நிபந்தஞ் செய்து கொடுத்துள்ளான்.*

மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

அளத்தி - மைசூர் இராச்சியத்தில் உள்ளது. இங்கு குலோத்துங்கன் மேலைச்சளுக்கியருடைய களிறுகளைக் கைப் பற்றிக்கொண்டான்.

பழியிகந்து கொடுத்த புகழ் - பழியின் நீங்கிய புகழ்.

பொச்சை - பொற்றை என்பது பொச்சை என்று வந்துள்ளது. பொற்றைக்கல் - துறுகல். "மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்" என்ற புறநானூற்று அடிக்கு பழைய உரைகாரர் "கரிய புறவிதழையுடைய ஒள்ளிய பூப்பரந்த பொற்றைக்கல்" என்று எழுதியுள்ளதும் "அறையும் பொறையும் மணந்த துறுகல்" என்பதும் காண்க.

குடமலைநாடு - குடகு மலைப்பிரதேசம்.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்:-

குலோத்துங்க சோழனுடைய மனைவியர்:- (1) தியாக வல்லி உலகுடையாள் (2) ஏழிசைவல்லபி ஏழுலகமுடையாள் (3) உலகமுடையாள் என்பவர்கள் குலோத்துங்கனுடைய மனைவியர் ஆவர். இவர்களுள் தியாகவல்லி உலகுடையாள் சிவனிடத்து உமையெனவும், ஏழிசைவல்லபிஏழுலகமுடையாள் உமையுடன் கங்கை வீற்றிருப்பதெனவும் உலகமுடையாள் திருமாலாகத்துப் பிரியாது என்றும் திருமகள் இருப்பது எனவும் போற்றப்படுகின்றனர்.

உரைநடைப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

பாண்டிய குலாசனி வளநாடு:- பாண்டி குலாசனி என்னுந் தொடர்க்குப் பொருள் பாண்டியர் குலத்துக்கு இடியை யொத்தவன் என்பதாகும். இது முதல் இராசராசனின் விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். இவ்விருதுப் பெயரே இந் நாட்டிற்கும் வைக்கப்பெற்றது. இது சோழ மண்டலத்தில்

உள்ள ஒன்பது வளநாடுகளுள் ஒன்றாகும். இது ஆர்க்காட்டுக் கூற்றம், தஞ்சாவூர்க் கூற்றம், விளநாடு, கிளியூர் நாடு முதலான 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. காவிரிக்கு வடக்கு, தெற்கு வெள்ளாற்றிற்கு வடக்கு, தஞ்சாவூருக்கு மேற்கு, உறையூருக்குக் கிழக்கு இப்பெரு நான்கெல்லைக்குட்பட்ட நிலப் பகுதி இந்நாடென்று ஒருவாறு கூறலாம்.

மீக்கோழை:- இது பாண்டி குலாசனி வளநாட்டின் பிரிவு களில் அடங்கிய நாடாகும். இது மீக்கோழை, கீழ்க்கோழை என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் இருக்கின்றது. விளநாட்டுக்குப் பக்கத்தில் உள்ளது இந்த மீக்கோழை நாடு.

திரிபுவனபதி - இது திருவானைக்காவில் திருவெண்ணா வலின் கீழ் இனிது எருந்தருளியிருக்கும் சிவபெருமானின் பெயர்.

மூலப்ருத்யனாகிய - பழைய அடியானாகிய.

ஆதேசம் - கட்டளைப்படி.

ஜயசிங்க குலகால வளநாடு:- இது வடசிறுவாயில் நாடு, குளமங்கலம் நாடு, தென்மீபொழில் நாடு, தென்கவிர் நாடு முதலிய பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. புதுக்கோட்டை இராச்சியத்தின் ஆலங்குடி தாலூகாவில் உள்ள வாராப்பூர், குளத்தூர் தாலூகா திருவேங்கைவாசல், கீரனூர் ஆகியன இவ் வளநாட்டின் பகுதிகள் ஆகும்.

மீசெங்கிளிநாடு:— புதுக்கோட்டை இராச்சியத்தின் குளத்தூர் தாலூகா மலையடிப்பட்டி என்னும் ஊர், ஜயசிங்க குலகால வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக்கு உட்பட்ட ஊர்என்று புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டு (Inscription No. 116) அறிவிக்கின்றது. இச் செங்கிளி நாடுமீசெங்கிளி என்றும் கீழ்செங்கிளி என்றும் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

உத்தமசிலிச் சதுர்ப்பேதி மங்கலம், புதுக்குடி - இவைகள் பாண்டிகுலாசனி வளநாட்டில் உள்ள ஊர்கள். உத்தமசிலிச் சதுர்ப்பேதி மங்கலம் இக்காலம் உத்தமசீலி என்று வழங்கப் பெறுகின்றது. பராந்தகன் புதல்வனை உத்தமசீலியின் பெயரால் வழங்கப்பெற்றது.

தென்பிடாகை - தெற்கில் உள்ள சிற்றூராகிய.

நிலம் - ஒரு வேலி.

நிலம் $4\frac{3}{4}$ என்பது - நாலேமுக்கால்வேலி. இச்செய்தி இக் கல்வெட்டில் வந்துள்ள "புன்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக இராசகேசரி மரக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதான நெல் இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி" என்னும் தொடரால் அறியக்கிடக்கின்றது.

இத்தேவர்க்கு - குலோத்துங்க சோழ தேவர்க்கு.

பயிரிலி - பயிர்செய்யாமல் (Uncultivated)

குட்டமும் - குட்டையும் (APond) குளத்தைவிடச் சிறிய நீர் நிலே.

அன்றுடு நற்காசு - அப்பொழுது வழங்கும் நாணயம் (good kasu current at the time)

இடங்கைநாயகர் - பார்வதி. (The lord on the left hand) இவர் திருவானைக்காகோவிலில், முனையன் அருமொழித்தேவனை வில்லவராயனால் எழுந்தருளுவிக்கப்பெற்றவர். இவருக்கு ரிடபவாகன தேவர் என்ற வேறுபெயரும் உண்டு.

கார்பாதி, பாசனம்பாதி அளப்பதாக - கொடுக்கவேண்டிய நெல்லில் கார் என்னும் நெல் விளையுங் காலத்தில் பாதியும், சம்பா நெல் விளையும் காலத்தில் பாதியும் அளப்பதாக.

கன்மி - தேவகாரியம் பார்ப்பவர்கள்.

பொதுச் செய்தி

கோயில்நிலத்தை மக்கள்வாங்குவதாயிருந்தாலும் அல்லது நிலத்தைக் கோயிலுக்குத் தானம் செய்வதாய் இருந்தாலும் அதைச் சண்டேஸ்வரர் பெயரால் செய்வது பண்டைக் காலத்து வழக்கம் என்பது இக்கல்வெட்டால் அறியப்படுகின்றது.

இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை:- இது பன்மாகேஸ்வர ரக்ஷை. பன்மாகேஸ்வர ரக்ஷை - பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக.

கல்வெட்டு - 20

காணிக்காரளவு உரிமைச் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ

பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு சயமக ளிருப்பக்
தன்றுணை மார்பந் தனதெனப் பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி
விருப்பொரு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப அகில
புவனமுங் கவிப்பதொரு புதுமதி போல
வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலிங்க வீமன் விலங்கன்மிசை யேறவுங்
கலிங்க பூமியைக் கனையெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து

வடதிசை வாகை சூடித் தென்றிசைத்
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னியாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிர்த்துப் புனிதத் திருமணி
மகுட முறைமையிற் சூடித்
தண்ணளி பரப்பித் தனித்தனி புரந்து
மண்முழுதுங் களிப்ப மணிநாவொடுங்க
விசையமும் புகழும் மேன்மே லோங்கச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்களரஞ்சி நெஞ்சலமாகக்
கங்கர் திறையிடக் கன்னடர் வெந்நிட
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி உரிமையி லிறைஞ்சத்
தொல்லை ஏழுலகுந் தொழுதெழத் தோன்றிய
முல்லை வாணகை முக்கோக் கிழானடி
உரிமையொடுஞ் சங்கரன் இமையத்
திருந்தானென்னப் பொருந்தி இனிதிருப்ப
ஆங்கவன் மகிழுங் கங்கை யொப்பாகிய
தெரிவையர் திலகம் தியாக பதாகை
புரிகுழல் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடை யாளிவன் திருவுளத்
தருள் முழுதுடை யாளென அமைந்தினி திருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்து
வீற்றிருந் தருளிய கோப்பரகேசரிவன் மரான
திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு;

நாலாவது (௪) உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார் கோயிலில் காரளக்கும் ராஜராஜப் பல்லவராயனுக்குத் தன் பாட்டன்நிலையாய்வருகிற காணிகாரளவுக்குக் காணியாகக்

கொடுத்தோமென்று திருவாய் மொழிந்தருளி உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார் கோயில் ஸ்ரீகார்யஞ் செய்வா னுக்கும் பரியாரமுலப்பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவகன்மி களுக்கும் பிரசாதம் செய்துவந்த திருமுகப்படி கல்லில் வெட்டியது. (உ) முன்பு காரளந்து வருகிற புதுவுடையான் அரையன், உடையான் மரித்தமையில் இவன் மகனை உடையான்கல்லாலேக்குத் தஞ்சாவூர்த் தேவர்க்கு அடைத்த நாட்டுப் பண்டாரங்களும் அளந்து இத்தால் வந்த காரளவு மாடம் உள்ளிது ஒடுக்கி வருகிற பரிசு தேவர் பண்டாரத்தே ஒடுக்கக் கடவனாகவும் தனக்கும் தன்வர்க்கத்தார்க்கும் சந்திராதித்தவல் செல்லவைத்த பங்கு ஒன்று.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தஞ்சாவூர்ப் பெரியகோவில் கர்ப்பகிருகத்தின் வடபுறச்சுவர்.*

அரசன்:- *விக்கிரமசோழன் (கி. பி. 1120 - 1136)*

காலம்:- *4-ம் ஆட்சியாண்டு கி. பி. 1124.*

விக்கிரமசோழன்:- இவன் முதற் குலோத்துங்க சோழனின் புதல்வன். இளமைப் பருவத்தில் வேங்கி நாட்டில் அரசப் பிரதிநிதியாக இருந்து அதனை ஆட்சி புரிந்தவன். கி. பி. 1118-ல் சோழ நாட்டில் இளவரசுப்பட்டங்கட்டப் பெற்றவன். கி. பி. 1120-ல் குலோத்துங்க சோழன் இறந்தவுடன் இவன் அரியணை ஏறினன். பரகேசரி என்ற பட்டம் உடையவன். இவனுக்கு இரண்டு மெய்க்கீர்த்திகள் உண்டு. இவற்றுள் பெரியது, "பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ" என்று தொடங்குகிறது; சிறியது, "பூமாது புணரப் புவிமாது வளர என்று தொடங்குகிறது. இவன் ஆட்சியின் ஆரும் ஆண்டில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. இவன் தில்லைக்குப் பொன் வேய்ந்தான். அகளங்கன் என்னும் சிறப்புப் பெயர் பூண்டவன், இவன் அவைக்களப் புலவர் ஒட்டக்கூத்தர்,

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

(1) தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் பெருவுடையார் கோயிலில் நெல் அளத்தல் என்னும் தொழிலைச் செய்துவந்த இராசராசப் பல்லவரையனுக்கு அத்தொழிலைச் செய்பவர் அனுபவித்துவந்த நிலத்தை உரிமையாக்கி விக்கிரமசோழன் அத்திருக்கோயிலில் ஸ்ரீ கார்யம் செய்வானுக்கும் தேவகன்மிகளுக்கும் ஆணையிட்ட திருமுகம் கல்லில் வெட்டப்பட்டுள்ளது.

2. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு உரிய வெளியூர்ப் பண்டகசாலைகளுக்குச் சென்று அங்குள்ள நெல்முதலிய பண்டங்களை அளந்துகொண்டுவந்து பெரிய கோயிலிலுள்ள களஞ்சியத்தில் சேர்க்கவேண்டிய தொழிலுக்கு கல்லாலை என்பவனை நியமனம் செய்யப்பெற்றது. மேற்கூறிய இரண்டு செய்திகளே கல்வெட்டுத் தோன்றுவதற்குக் காரணமாக உள்ளன.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

பூமாலை மிடைந்து - பூக்களாலாகிய மாலையை யணிந்து.

இருநிலமடந்தையொடு - பெரிய நிலமகளொடு.

தன்றுணை மார்பம் தனதெனப் பெற்றுத் திருமகள் ஒரு தனி இருப்ப - விக்கிரமசோழனது மார்பைத்தனதெனப் பெற்றுத் திருமகள் சிறப்போடு இருப்ப.

அகில புவனமும் - எல்லா உலகங்களையும்.

பிலத்திடைக் கிடப்ப - பாதாள உலகத்தில் கிடப்ப.

விலங்கல் மிசையேறவும் - மலையின்மீது ஏறி ஓடிச் செல்வும்.

தேமரு கமலப் பூமகள் - திருமகள்,

பொதுமையும்.............. தவிர - இலக்குமி யாவர்க்கும் உரிமையுடையவள் என்பதை நீக்கி தனக்கே உரிமையாகக் கோடல். "திருமகள் போலப் பெரு நிலச்செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொள" எனவருதல் காண்க.

மணிநாவொடுங்க - ஆராய்ச்சி மணியினது நா ஒலியின்றிக் கிடப்ப.

ஆராய்ச்சி மணி - அரசனிடத்தில் நீதியைப் பெறவேண்டியவர் அரண்மனை வாயிலில் உள்ள மணியை அடிப்பர். அரசன் அவ்வொலியைக்கேட்டு வெளியேவந்து குற்றத்தை விசாரித்து நீதி வழங்குவான்.

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்:-

தென் கலிங்கப்போர்:- இப்போர் குலோத்துங்கன் காலத்தில் விக்கிரம சோழன் வேங்கி நாட்டுப் பிரதிநிதியாக இருந்த பொழுது நடைபெற்றது. இப்போர் கி. பி. 1096-ல் நடைபெற்றதாதல் வேண்டும். தென் கலிங்கம் என்பது கோதாவரி யாற்றிற்கும் மகேந்திரகிரிக்கும் நடுவில் வங்காளக்குடாக்கடலைச் சேர்ந்திருந்த ஒரு நாடாகும். அது வேங்கி நாட்டரசர்க்குட்பட்ட குறுநில மன்னர்களால் அக்காலத்தில் ஆட்சி புரியப்பட்டு வந்தது. விக்கிரம சோழன் தன் தந்தையின் ஆணையால் வேங்கி நாட்டுப் பிரதிநிதியாக இருந்தபொழுது அவன் இளைஞனாயிருத்தலை யுணர்ந்த தென் கலிங்க வேந்தன் வீமன் என்பான் தான் சுயேச்சை பெறும் பொருட்டுக் கலகஞ் செய்தான். அந்நிகழ்ச்சியை யறிந்த விக்ரமசோழன், வேங்கி நாட்டிலிருந்து பெரும் படையுடன் புறப்பட்டுச் சென்று தென்கலிங்க வீமனைப் போரில் வென்று, வீமன் நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடுமாறு செய்தான். கலிங்கத்தை எரியூட்டினான்.

குளத்தெலுங்க வீமன்:- குளம் என்பது, கலிங்க நாட்டின் பழைய தலைநகராகிய ஸ்ரீகாகுளம் என்பதேயாம். (சோழர் II Part T. V. Sathasiva Pandarathar)

பிற போர்கள்:- பாண்டியர் காட்டில் புகுமாறு செய்து சேரரைக் கடலில் புகுமாறு செய்தான். சிங்களர் அஞ்சி மனக் கலக்கம் அடைந்தனர். கங்கர் திறையிடக் கன்னடர் புறங்காட்டி ஓட, கொங்கர் போரில் பின்னடைய கொங்கணர் அழிய இவ்வாறு போர்செய்து எத்திசை மன்னரும் தனது சேவடியை வணங்கும்படிச் செய்தான்.

விக்கிரமசோழனது அரசாட்சிச்சிறப்பு:- பூமாலை அணிந்து பொன்மாலைவிளங்கப் பாமாலைநிறைந்தமணிகள் கட்டியதிரண்ட தோளில் நிலமகளும் வெற்றி மகளும் இருப்ப, மார்பிலே திருமகள் வாழ, கலைமகள் சொல் வன்மையோடு கூடிய கற்பினளாய் நாவிலேஇருப்பத் திசைதொறும்செங்கோல்செல்ல, அகிலபுவனமுங் கவிப்பதொரு புதுமதி போல் வெண்கொற்றக் குடை நிழல்செய வறுமைநாட்டில் இன்றி ஆட்சிபுரிந்தான். மற்றும் வடதிசை வாகைசூடித் தென்திசையில் திருமகளைத் தனக்கே உரிமையாகக்கொண்டு சோழ நாட்டின் தனிமையையும் தவிர்த்து மணிமுடி சூடித் தன் அருளால் உலகமும் மகிழ்ச்சி யெய்த அரசாண்டான். நாட்டில் நீதியுடன் ஆட்சிபுரிவதால் ஆராய்ச்சி மணியின் நாக்கு அடிக்கப்பெருமல் இருப்ப, வெற்றியும் புகழும் மேன்மேல் ஓங்கின.

விக்கிரம சோழன் மனைவியர்:- (1) முக்கோக்கிழானடி (2) தியாகபதாகை (3) தரணி முழுதுடையாள் (தரணி முழுதுடையாளும் மனைவியென்பது அடுத்த கல்வெட்டால் விளங்கும்) இவர்களுள் முக்கோக்கிழானடி சிவனிடத்து உமையெனவும் தியாகபதாகை சிவனிடத்துக் கங்கை யெனவும், தரணிமுழுதுடையாள் திருமாலாகத்துப் பிரியாது என்றும் திருமகள் இருப்பது போல்வர் எனப் போற்றப்படுகின்றனர்.

தியாகபதாகை:- இவள் கி. பி. 1127-ல் முக்கோக்கிழானடி இறந்தவுடன் கோப்பெருந்தேவியானுள். இவள் பெண்களுக்கு அணி போன்றவள்; சுருண்ட கூந்தலை யுடையவள். மடப்பிடி போன்றவள்; தூய குணங்களை உடையவள்; திரிபுவன முழுதுடையாள் என்னும் பட்டம் பெற்றவள்.

தரணி முழுதுடையாள்:- இவள் பெண்களில் மயில் போன்றவள்; நிலவுலகத்து அருந்ததி; இலக்குமி திருமால் மார்பில் இருப்பதுபோல் இவள் அரசன் திருவுள்ளத்தில் தங்கியுள்ளாள்.

உரைநடைப் பகுதிப் பொருள்விளக்கம்:-

காரளக்கும் - நெல் அளக்கும்.

திருவாய்மொழிந்தருளி - அரசன் ஆணையிட்டுக் கூறி.

பிரசாதம் செய்துவந்த - கொடுத்துவந்த.

தேவர் பண்டாரம் - தஞ்சைபெரிய கோயிலில் உள்ள பண்டகசாலை.

அரையன் - இது நாட்டதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்.

கல்வெட்டு - 21

விக்கிரம சோழன் தில்லைத் திருப்பணிகள்

ஸ்வஸ்திஸ்ரீ

பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு ஜயமக ளிருப்பத்
தன்துணை மார்பந் தனதெனப் பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடும் செங்கோல் நடப்ப அகில

புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல்மிசை யேறவுங்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளித் தென்றிசைத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போலத்
தலைத்தலை சிறப்பவந் தருளி வெலற்கரும்
போர்ப்புலி யாணை பார்த்திவர் சூட
நிறைமணி மகுடம் முறைமையிற் சூடி
மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போல்
தண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து
மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாசல் புறத்து
மணிநா வொடுங்க முரசுகள் முழங்க
விசையமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழி இம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றேட் டெழுதுபத் தாண்டு
வருதிறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொன்னம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப இமையவர் களிப்பப்

பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர்பூரட் டாதி உத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ எழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருத்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர்பெயராற் செய்துசமைத் தருளி
பைம்பொற் குழித்த பரிகல முதலால்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சின்னமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டில் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற ஆதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து
இன்ன பலவும் இனிதுசமைத் தருளி
ஒருகுடை நிழற்கீழ்த் தலமுழுதுங் களிப்பச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்களர் அஞ்சிநெஞ் சலமரக்
கங்கர் திறையிடக் கன்னடர் வென்னிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி உரிமையி லிறைஞ்ச
ஆங்கவன் மகிழுங் கங்கையொப் பாகிய
தெரிவையர் திலதந் தியாக பதாதை
புரிகுழல் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடையாளெனவுடனிருப்ப
ஊழி அங்நெடு மாலா கத்துப்
பிரியா தென்றுந் திருமக ளிருந்தென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணியல் கற்பிற் றரணிமுழு துடையா
ளிவன்திரு மார்வத் தருளொடு மிருப்பச்

செம்பொன் வீர சிம்மா சனத்து
திரிபு வனமுழுதுடையா ளோடும் வீற்றிருந்தருளிய
கோப்பர கேசரிவர்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள்
ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு;

கரு**ஆவது திரிபுவன முழுதுடை வளநாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திருமழபாடி உடையார் கோயிலில் ஆதி சண்டேஸ்வர தேவர் ஆதேசம் அருளால் இக்கோயிலில் ஸ்ரீ மஹேச்வரமும் ஸ்ரீ கார்யஞ்செய்வாரும் இக்கோயில் கணக்கு நெல்லுக்குப்பையுடையானும் உள்ளிட்ட ஸ்தானத்தோம் எழுத்து. இக்கோயிலில் ஸ்ரீ நந்திகேஸ்வர தேவரே எழுந்தருளுவித்த அள்ளியூருடையான் எச்சில் மண்டை செந்தாமரைக் கண்ணனை ஸ்ரீ நம்ஹேஸ்வர நம்பி.**

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலூகா, திருமழபாடி வைத்தியநாதசுவாமிகோயிலின் இரண்டாவது திருச்சுற்றின் தென்புறச் சுவரில் உள்ளது.*

அரசன்:- *விக்கிரமசோழன். (கி. பி. 1120 - 1136)*
கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *15-ம் ஆட்சியாண்டு.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

திரிபுவன முழுதுடை வளநாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திருமழபாடி உடையார் கோயிலில் ஆதிசண்டேஸ்வரர் அருளால் இக்கோயிலில் உள்ள சிவனடியார்களும் கோயிலில் உள்ள அதிகாரியும், நெல்லுக்குப்பை உடையான் என்ற கோயில் கணக்கனும் ஆகிய இவர்கள் கீழ்க்காணும் செய்தியை எழுதியுள்ளனர்:- இக்கோயிலில் அள்ளியூருடையான் எச்சில் மண்டை செந்தாமரைக் கண்ணனை ஸ்ரீ நம்ஹேஸ்வரநம்பி என்பவன் நந்திஹேஸ்வரரை எழுந்தருளுவித்தான்.

மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

கனவரைமார்பம் - பெருத்த மலைபோன்ற மார்பம்.

ஐம்படைப் பருவத்து - மிக்க இளமைப்பருவத்து.

வெலற்கரும் - வெல்லுதற்கரிய.

ஆணை பார்த்திவர்சூட - விக்கிரமசோழன் ஆணையை நில வுலகத்து அரசர்கள் தங்கள் தலைமேற்கொண்டு.

திருமணிப் பொற்றேடு - மணிகள் பதிக்கப்பட்ட பொன் தகடு.

தன்குல நாயகன் - தில்லை அம்பலவாணன்.

செம்பொன்னம்பலம் - தில்லைச் சிற்றம்பலம்.

திருமணிப் பொற்றேட்டெழுதுபத்தாண்டு - இவனுடைய பத்தாம் ஆட்சியாண்டில் தில்லையில் செய்த திருப்பணிகள் பொன் தகட்டில் எழுதப்பட்டன. மற்றொரு பொருளும் அரசியலார் வெளியீட்டில் உள்ள கல்வெட்டு அடிக்குறிப்பில் காணப்படுகின்றது:- அரக்கோணத்திற்கு அருகேயுள்ள தண்டலம் என்னும் ஊரிலுள்ள ஒரு பாறையில் காணப்படும் கல்வெட்டொன்றில் விக்கிரமசோழனது பத்தாம் ஆட்சி யாண்டில் காடவ அரசனாகிய சத்தி என்பவன் பெயர் பொற்றேட்டிலிட்ட காலத்து என்ற குறிப்பு காணப்படுகிறது.

பெரும்பெயர் விழா - (The festival of the great name) விக்கிரமசோழன் ஆனித்திங்கள் உத்திரட்டாதியில் பிறந்தவன். ஆதலால் தான் பிறந்த அந்நாளில் ஆண்டுதோறும் தில்லையில் கூத்தப்பெருமான் உலாப்போவதற்கு ஏற்பாடு செய்திருந்தான். அப்பொழுது நடைபெறும் விழா "பெரும்பெயர் விழா" எனப் படும்.

பருந்திரள் முத்தின் பயில் வடம் பரப்பி - பெரிய முத்துக் களால் இயன்ற முத்துவடங்களை தேர்க்கு அணிவித்து.

பைம்பொற்குழித்த பரிகலம் - பசிய பொன்னால் செய்யப் பட்ட திருவமுது படைக்கும் பாத்திரம்.

அத்தம் - அஸ்த நக்ஷத்திரம்.

ஆதித்த வாரம் - ஞாயிற்றுக்கிழமை. (ஆதித்தன்-சூரியன்)

திருவளர்மதி - வளர்பிறை (அபர பக்ஷம்)

திரயோதசி - 13-வது நாள்.

புரிகுழல் - சுருண்ட கூந்தல்.

புனிதகுண - தூய குணங்களையுடைய.

பூதலத்து அருந்ததி - நிலவுலகத்து அருந்ததி. வானத்தில் அருந்ததி என்ற நக்ஷத்திரம் காணப்படும். அருந்ததி கற்பிற் சிறந்தவள் என்பதற்காக இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இவ்வாறே "வடமீன்போல் தொழுதேத்த (வடமீன் - அருந்ததி - நச்சர் உரை) வயங்கிய கற்பினாள்" என்று கலித்தொகையில் வருதல் காண்க.

தரணி முழுதுடையாள் - The mistress of the whole earth.

அரணிய கற்பில் - அருந்ததி போலும் வணங்கும் கற்பினை யுடைய.

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் அறச் செயல்:-

விக்கிரமசோழனது பத்தாம் ஆட்சியாண்டில் சிற்றரசர் தந்த திறைப்பொருள்கள் அவன் முன்பு வைக்கப்பட்டன. அப் பொழுது மணிகள் பதித்த பொற்றகட்டில்கீழ் வருவன வரையப் பட்டன:- "மன்னவன் நீண்டநாள் வாழ்ந்து உலகைக் காப்பானாக" இம்மன்னன் தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்று மாளிகைக் கோபுரவாயிலில், கூடசாலை, பலிபீடம் என்பவற்றிற்குப் பொன்வேய்ந்தான். தான்பிறந்தஉத்திரட்டாதி

 8283

நாளில் நடைபெறும் பெருவிழாவில் இறைவன் எழுந்தருளும் திருத்தேரைப் பொன் வேய்ந்து அதற்கு முத்து வடங்கள் அணிவித்து அழகுறுத்தினன். அன்றியும், நிறை மணி மாளிகை நெடுந்தெரு ஒன்றையும் அமைத்தான். மாளிகை "விக்கிரமசோழன் திருமாளிகை" என்றும், திருவீதி "விக்கிரமசோழன் திருவீதி" என்றும் பெயர் பெற்றன. மற்றும் இறைவன் திருவமுதுபுரிவதற்குப் பொற்கலங்கள் அளித்தமையோடு கோயிலில் பொன்னாலாகிய கற்பகத்தருக்களும் இவன் அமைத்துள்ளான். இத்திருப்பணிகள் விக்கிரம சோழனது 10-ம் ஆட்சியாண்டில் சித்திரைத் திங்களில் அத்த நக்ஷத்திரம் கூடிய ஞாயிறன்று நிறைவேறின.

உரைநடைப்பகுதிக்குப் பொருள் விளக்கம்

திரிபுவனமுழுதுடை வளநாடு:- முதல் இராசராசன் காலத்தில் இது இராசேந்திர சிங்க வளநாடு என்றும், குலோத்துங்க சோழன் காலத்தில் தியாகவல்லி வளநாடு என்றும் வழங்கப்பட்டது. இதுவே விக்கிரம சோழன் காலத்தில் திரிபுவன முழுதுடை வளநாடு என்று வழங்கப்பட்டது. இது காவிரிக்கும் வெள்ளாற்றிற்கும் இடையில் இருந்த பகுதியாகும்.

பொய்கைநாடு - சோழ மண்டலத்தைச் சார்ந்த திருபுவன முழுதுடை வளநாட்டின் ஒரு பகுதியாகும்.

திருமழபாடி - திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூகாவில் உள்ளது.

ஆதி சண்டேஸ்வரர் ஆதேசம் - பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் கட்டளைப்படி.

ஸ்ரீ மஹேச்வரமும் - ஸ்ரீ மகேஸ்வரரும்-அடியார்களும்.

நெல்லுக்குப்பையுடையான் - நெற்குப்பை என்னும்ஊரைச் சேர்ந்தவன். நெற்குப்பை என்பது புதுக்கோட்டை இராச்சியம் திருமயம் தாலூகா மேலைச் சிவபுரியிலிருந்து 2-மைல் தொலைவில் உள்ளது.

ஸ்தானத்தோம் - கோவில் அதிகாரிகள். **The temple authorities.**

எச்சில் - ஒரு வைப்புத்தலம்.

பொதுச் செய்தி

விக்கிரம சோழன் செய்த தில்லைத் திருப்பணி இவனது 10-ஆம் ஆண்டில் சித்திரைத்திங்களில் அத்த நக்ஷத்திரம் கூடிய ஞாயிறன்று செய்யப்பட்டது. இதற்குச் சரியான ஆங்கில ஆண்டு கி. பி. 1128 ஏப்ரல் 15-ந்தேதியாகும் என்று கீல்ஹாரன் (Keelharan) என்பார்கூறுகின்றார். (உலாக்கொண்ட மூவர் பக். 59.)

கல்வெட்டு - 22

மணிமங்கலத்துப் பெருமாள் கோயில் சாசனம்

ஸ்வஸ்திஶ்ரீ திருவாய்க் கேள்வி முன்னாக திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு ௰அவது தனுர்ஞாயற்றுப் பூர்வபக்ஷத்துப் பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற அவிட்டத்தினாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்கசோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான கிராமசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து வண்டுவராபதி எம்பெருமான் கோயிலில் அபிடேகமண்டபத்துக்குக் கீழைப் புலிமுகமான சோபானத்துக்கு வேண்டும் பொன்னிட்டுக் கல்காரஞ் செய் வித்தான். மணிமங்கலமுடையான் பஞ்சநெதி இலக்ஷ்மணன் மலைக்கினிய நின்றான் பிரம்ஹப் பிரியன் பெரிய பிள்ளையும் இவன் தம்பி ஆகவமல்லதேவனும் இவர்கள் தன்மம்.

கல்வெட்டு இருக்குமிடம்:- செங்கற்பட்டு ஜில்லா காஞ்சீபுரம் தாலுகா மணிமங்கலம் கிராமம் இராசகோபாலப் பெருமாள் கோயில் மண்டபத்தின் கீழ்புறச் சுவரில் உள்ளது.

அரசன்:- மூன்றும் இராசராசன். (கி. பி. 1216 - 1234.

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- 18-வது ஆட்சியாண்டு.

மூன்றும் இராசராசன்:— இவன் மூன்றும் குலோத்துங்கனுக்கு என்ன உறவினன் என்பது தெரியவில்லை. எனினும் இவன் மூன்றும் குலோத்துங்கனின் மகன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மூன்றும் குலோத்துங்கன் இருக்கும்பொழுதே இவன் முடிசூட்டப்பெற்றுன். இவன் கி. பி. 1216ல் அரசனுனன். இவனுக்குச் 'சீர்மன்னு இருநான்குதிசை' என்று தொடங்கும் கல்வெட்டும் 'சீர்மன்னு நிலமகள்' என்று தொடங்கும் கல்வெட்டும், உரியன.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான கிராமசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்துப் பெருமாள் கோயிலில் அபிஷேக மண்டபத்துக்கு கிழைப் புலிமுகமான படிக்கட்டுக்குப் பொன்னிட்டுக் கல்லாலே வெட்டுவித்தான் மணிமங்கலமுடையான் பஞ்சநேறி இலக்குமணன் மலேகினிய நின்றுன் பிரம்மப் பிரியன் பெரிய பிள்ளேயும் இவன் தம்பி ஆகவமல்லதேவனும் ஆவர்.

பொருள் விளக்கம்:-

திருவாய்க்கேள்விமுன்னுக - அரசன் ஆணேப்படி.

தனுர்ஞாயற்று - மார்கழி மாதத்து.

பூர்வபக்ஷம் - தேய்பிறை.

சோபானம் - படிக்கட்டு.

20

கல்காரம் செய்வித்தான் - கல்லாலே வெட்டுவித்தான்.

ஐயங்கொண்ட சோழமண்டலம் - ஐயங்கொண்டான் என்பது முதல் இராச ராசனின் சிறப்புப் பெயராகும். அவன் பெயரால் வழங்கப்பட்டது இம்மண்டலம்.

குலோத்துங்க சோழவளநாடு - முதல் இராசாதிராசன் காலத்தில் வழங்கிய செங்காட்டுக் கோட்டத்து மாகணூர்நாடு என்பதே முதற்குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாடு என்று பெயர்பெற்றது. இதனல் செங்காட்டுக் கோட்டமானது குலோத்துங்க சோழ வளநாடு என்னும் பெயரை முதற் குலோத்துங்கன் காலத்தில் எய்திற்று என்று பெறப்படுகிறது.

குன்றத்தூர் நாடு - இது குலோத்துங்க சோழவளநாட்டில் உள்ளது. இவ்வளநாடு தொண்டை மண்டலத்தில் உள்ளது.

வண்டு வராபதி எம்பெருமான் - திருமாலின் பெயர்.

கல்வெட்டு - 23

நக்கன் செட்டி தர்மம்

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறன் சடையார்க்கு யாண்டு *ளஎ* **ஆவது வல்லநாட்டுக் கவிப்பால் கல்குறிச்சி வரகுணவதி அரையன் ஆன நக்கஞ் செட்டி உஞ்ஞுட்டு திருவெள்ப்பூர் கோகர்ணத்து மாதேவர்க்கு நொந்தா விளக்கினுக்கு ராவும் பகலும் நொந்தா விளக்கினுக்கு வைத்த பொன்** *ஒரு* **பதின் அஞ்சு கழஞ்சு. இப்பொன் நாட்டார் ரக்ஷையாக வைத்த பொன்.**

கல்வெட்டு இருக்குமிடம்:- *ஆலங்குடி தாலூகா, திருக்கோகர்ணம் என்ற ஊரிலுள்ள கோகர்ணேஸ்வரர் கோயிலின் கர்ப்பகிருகத்தின் தென்புறச் சுவரில் உள்ளது.*

அரசன்:- கோமாறன் சடையன். (கி. பி. 765 - 790.)

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- 17-வது ஆட்சியாண்டு

கோமாறன் சடையன்:- இவன் காலம் கி. பி. 765 முதல் 790 வரை. இவன் நெடுஞ்சடையன் பராந்தகனாக இருக்கலாம். அப்படியாயின் சீவரமங்கலச் செப்பேடுகளும், வேள்விக் குடிச் செப்பேடுகளும் கொடுத்தவன் இவனேயாதல் வேண்டும்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- வல்லநாட்டுக் கவிப்பால் கல்குறிச்சி வரகுணவதி அரையன் ஆன நக்கஞ் செட்டி என்பவன் 15 கழஞ்சு பொன் இரந்து பெற்று திருவெள்ப்பூர் கோகர்ணத்து மஹாதேவர்க்கு இரவும் பகலும் நந்தா விளக்கு வைப்பதற்காக அளித்தான். இப்பொன் நாட்டார் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

பொருள் விளக்கம்:-

வரகுணவதி - வரகுண பதி.

உஞ்ஞட்டு - இரந்து பெற்று.

கோகர்ணம் - புதுக்கோட்டை அருகில் உள்ளது.

கல்குறிச்சி - திருக்கச்சாலையின் பழைய பெயர்.

கவிப்பால் - இந்த ஜில்லா இப்பொழுது 'கவிர்' என வழங்கப்படுகிறது. இக்கவிர் நாடு தென்கவிர் நாடு, வடகவிர் என வழங்கப்பட்டிருக்க வேண்டும். தென்கவிர்நாடு ஜயசிங்க குலகால வளநாட்டில் உள்ளன்.

திருவெள்ப்பூர் - திருக்கோகர்ணம்.

ஆலங்குடி தாலூகா - புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ளது. வாராப்பூர், முதலிய ஊர்கள் இத்தாலூகாவில் உள்ளன.

கல்வெட்டு - 24

புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டு

எண் 246

ஸ்வஸ்திஶ்ரீ

பூவின் கிழத்தி மேவி வீற்றிருப்ப
மேதினி மாது நீதியிற் புணர
வியப்போர் மடந்தை சயப்புயத் திருப்ப
மாக்கலை மடந்தை வாக்கினின் விளங்க
திசையிரு நான்கும் இசைநில வெறிப்ப
மறைநெறி வளர மனுநெறி திகழ
அறநெறிச் சமயங்கள் ஆறுந் தழைப்ப
கான வேங்கை வில்லுடன் துரந்து
மீனங் கனகா சலத்து வீற்றிருப்ப
எண்கிரி சூழ்ந்த எழுகடல் எழுபொழில்
வெண்குடை நிழற்ற செங்கோல் நடப்ப
கொடுங்கலி நடுங்கி நெடும்பிலத் தொளிப்ப
வில்லவர் செம்பியர் விரதர் மராட்டர்
பல்லவர் திறையுடன் முறைமுறை பணிய
இருநேமி யளவும் ஒருநேமி யோங்க
இன்ன தாகிய இயலிசை நாடகம்
மன்னி வளர மணிமுடி சூடிக்
கதிரொளி வீரசிம் மாசனத்து வீற்றிருந்தருளிய
கோச்சடைய வர்மரான
திரிபுவன சக்கர வர்த்திகள்
ஶ்ரீ குலசே கரதே வர்க்கு யாண்டு

மூன்ருவது கானநாடான விருதராஜ பயங்கர வள நாட்டுக் கானநாட்டுத் திருவோதி கால்வயில் கானநாட்டு

ஸ்ரீ வரமுடைய நாயனுர் தேவதானம் பாணிதம் பற்றிலுள்ள தேவதானம் உள்ள நிலத்தில் கடமையும் வரியும் அந்தராய மும் இவ்வாண்டு முதல் தவிர்த்தோம். சந்திராதித்தவரை செல்வதாகச் செய்து கொடுத்தேன், கல்வெட்டிக் கொடுத் தேன் கல்வாயில் நாடாழ்வனேன்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *புதுக்கோட்டை இராச்சியத் திலுள்ள திருமய்யம் தாலூகா மலைய கோவிலில் குடபோகக் கோயிலின் வாயிலில் வலது பக்கச் சுவரில் உள்ளது.*

அரசன்:- *குலசேகர தேவபாண்டியன்.*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *3-ம் ஆட்சியாண்டு கி. பி. 1192 - 93.*

குலசேகரதேவ பாண்டியன்:- இவன் மூன்றும் குலோத் துங்கனின் பேராதாவிற்குள்ளாகி அவன் அளித்த பாண்டிய நாட்டைப் பெற்று, ஆங்கு அரசாண்டு கொண்டிருந்த மாற வர்மன் விக்கிரம பாண்டியனுடைய புதல்வனவான். இவன் கல்வெட்டுக்கள் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவன் சடைய வர்மன் என்ற பட்டம் உடையவன்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

குலசேகரதேவனுடைய 3-வது ஆட்சி ஆண்டில் விருத ராஜ பயங்கர வளநாட்டு, கானநாட்டு திருவோதிக்காலை கான நாட்டு ஸ்ரீவரமுடைய நாயனுர் தேவதானம் பாணிதம் பற்றிலுள்ள தேவதானம் உள்ள நிலத்தில் கடமையும் வரியும் அந்தராயமும் இவ்வாண்டு முதல் தவிர்த்துக் கல்வெட்டிக் கொடுத்தோன் கல்வாயில் நாடாழ்வான்.

மெய்க்கீர்த்திப் பொருள்விளக்கம்:-

பூமின் கிழத்தி - திருமகள்.

அறுவகைச் சமயங்கள் - சைவம், வைணவம், சக்தம் (சமணம்) சௌரம், கௌமாரம், காணபத்யம்.

கானவேங்கை ... ... வீற்றிருப்ப - இதனால் சேரரும் சோழரும் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தனர் என்று தெரிகிறது.

எண்கிரி - (1) இமயம் (2) மந்தரம் (3) கைலை (4) விந்தம் (5) நிடதம் (6) ஏமகூடம் (7) நீலம் (8) கந்தமாதனம்.

எழுகடல் - (1) உப்புக்கடல் (2) கருப்பஞ்சாற்றுக் கடல் (3) மதுக்கடல் (4) நெய்க்கடல் (5) தயிர்க்கடல் (6) பாற்கடல் (7) சுத்தநீர்க்கடல் [பிங்கலர் மதுக்கடலை நீக்கித் தேன்கடலைக் கொள்வர்.]

வில்லவர் - சேரர்.

செம்பியர் - சோழர்.

கனகாசலம் - பொன்மலை, மகாமேருமலை, 'பொற்கிரி' என சுந்தரபாண்டியன் கல்வெட்டில் வருதல் காண்க.

இருநேமி யளவும் - அகன்ற பூமியளவும்.

ஒருநேமி ஓங்க - தன் ஆணையாகிய சக்கரம் வெல்ல.

வீரசிம்மாசனம் - Throne of victory.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்தி:-

குலசேகரதேவனின் ஆட்சிச் சிறப்பு:- திருமகளும் நிலமகளும் சயமகளும் கலைமகளும் அவனிடத்தில் பொருந்தியிருப்ப, எண் திசையும் புகழ்பரப்பி, மறைநெறி வளர, மனுநீதி திகழ, அறுவகைச் சமயங்கள் தழைப்ப ஆட்சி புரிந்தான். புலி, விற்கொடிகளோடு தன் மீனக் கொடியையும் சேர்த்து மேருமலையில் பொறித்தான். எண்கிரியும், எழுகடலும்

பொழிலும் சூழ்ந்த உலகத்தில் வெண்கொற்றக் குடை நிழல் செய்ய செங்கோல் நடாத்தினன். நாட்டில் வறுமையின்றி சேரர், சோழர், மராட்டர், விரதர், பல்லவர் முதலியோர் திறைகொடுப்ப நிலமனைத்தும் தன் ஆணைப்படி நடப்ப, முத்தமிழை வளர்த்து, மணிமுடி சூடிச் சிறப்புடன் சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசாண்டான்.

உரைநடைப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:-

கானநாடான விருதராஜ பயங்கர வளநாடு:- கானநாடு என்பது விருதராஜ பயங்கர வளநாட்டின் பழம் பெயராகும். சோழநாட்டில் காவிரிக்கும், சிதம்பரத்துக்கு வடபால் ஓடும் வெள்ளாற்றுக்கும் (நிவா) இடைப்பட்ட பெருநிலப்பரப்பாகும். இராசேந்திரசிங்க வளநாடே முதல் குலோத்துங்கன் காலத்தில் விருதராஜ பயங்கரவளநாடு என்னும் பெயர் பெற்றது. இம் மன்னர்க்குப் (குலோத்துங்கனுக்கு) பிற்பட்ட காலங்களிலும் இவ்வளநாட்டிற்கு இப்பெயரே வழங்கிவந்தது.

திருவோதி கால்வயில் - திருவோதிக்காலே என்றும், திருவோதிக்கால் என்றும் கல்வெட்டுக்களில் வழங்குகிறது. இது மலைய கோயிலின் பழம் பெயராக இருக்கலாம்.

கடமை - அரசனுக்குத் தானமாக அல்லது பொருளாகக் கொடுப்பது. அரசியல் வரி.

வரி - பணமாகச் செலுத்தப்படும் வரி.

அந்தராயம் - நாடாட்சி செய்வோரால் விதிக்கப்படுவது. (அந்தர் - உள்: ஆயம் - வரி) அந்தர் என்பதற்கு உள், பொருளாதலை "பந்தர் அந்தரம்வேய்ந்து" என வரும் பதிற்றுப் பத்து அடிகளால் உணர்க.

கல்வாயில் நாடாழ்வான் - கல்வாயில் நாட்டை பாண்டியர் காலத்தில் ஆண்டவன். இவன் "கண்டன் ஆளுடையானை

கல்வாயின் நாடாழ்வான்" என்று வழங்கப்பட்டான் என்றும் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இருந்தனன் என்றும் தெரிகிறது. (புதுக்கோட்டை இராச்சியக்கல்வெட்டு நெ. 260) கண்டன் என்பது சிறப்புப் பெயராகும். ஆளுடையான் என்பது இயற்கைப் பெயராக இருக்கலாம். கல்வாயில் நாடாழ்வான் என்பது கல்வாயில் நாட்டை ஆண்டதால் வந்த பெயர்.

கல்வெட்டு - 25

இறை இலேசு சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ

பூமருவிய திருமடந்தையும்புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவியகலைமடந்தையும் சயமடந்தையும் நலஞ்சிறப்ப
கோளார்ந்தசினப்புலியும் கொடுஞ்சிலையும்குலைந்தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலையத்து இனிதறம் பெருக
கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நீழல் இருநிலங் குளிர
மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியுஞ் செய்வினை இயற்ற
அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ
எண்டிசை யளவும் சக்கரம் செல்ல
கொங்கணர் கலிங்கர் கோசலர்
சிங்களர் தெலுங்கர் சீனர் குச்சரர்
வில்லவர் மாகதர் விக்கலர் செம்பியர்
பல்லவர் முதலிய பார்த்திப ரெல்லாம்
உறைவிடம் அருளென ஒருவர்முன் னொருவர்

முறைமுறை கடவதந் திறைகொணர்ந் திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி இந்திரன் பூட்டிய
பொலங்கதிர் ஆரம் மார்பினிற் பொலிய
பனிமலர்த் தாமரை திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடி
விளங்கிய மணியணி வீரசிம் மாசனத்து
வளங்கெழு கவரி இருமருங் கசைப்ப
கடலென முழங்கும் கரிநல் யானை
வடபுல வேந்தர் மணிப்புயம் பிரியா
இலங்கிழை அரிவையர் தொழுதுநின் றேத்த
உலகமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
ஸ்ரீ கோமாற வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
சோணாடு கொண்டு அருளிய
ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு

௲வது பிரசாதஞ் செய்தருளின திருமுகப்படி கான நாடான விருதராஜ பயங்கர வளநாட்டுத் துறுமா நாட்டுத் திருநாவலூரும் அனுமன் தாயான அஞ்சன மங்கலமும் முன்பு இறுத்துவருகிற இறையிலே உலகுடையநாயனார் திருமேனிக்கு நன்றாக இலேசு பெறவேணுமென்று பிள்ளையார் அழகப் பெருமாள் நாயனார்க்கு விண்ணப்பஞ் செய்து நினைப்புமிட்டு நீரும் வார்த்துத் தருவித்தருளின பிரசாதஞ் செய்தருளின திருமுகப்படி பயிரெழுத முதல் கொண்ட நிலத்துக்கு மாத்தா லிருகல நெல் தாழ்த்து மாத்தால் ஐங்கலனே இரு தூணிப்பதக்கு நாழுழி நெல் லிருப்பதாகவும், இவ்வூர்களில் நீரிலி நிலமாய் வரிசைப்படி இறுத்துவருகிற நிலங்களுக்கு மாத்தால் முக்கலனே இரு தூணி முக்குறுணி மூவுழக்கு நெல் இறுப்பதாகவும் நவிரை இந்நெல்லில் ஒன்று முக்கால் இறுப்பதாகவும், வரகு இந் நெல்லின் ஒன்று பாதி இறுப்பதாகவும், எள்ளுந் தினையும்

இந் நெல்லில் நான்கொன்று இறுப்பதாகவும், உலகுடைய நாயனார் எழுந்தருளினால் திருவெழுச்சிக் குடிமை முதலாக நாடென்ற வரிகள் எப்பேர்ப்பட்டனவும் ஒன்று பாதிஇறுப்ப தாகவும், வெட்டி முட்டை ஆள் செயாதிதாகவும் பிரசாதஞ் செய்தருளின திருமுகப்படி பிரம்மதேயம் திருநாவலூரார்க் கும் அனுமன்தாயான அஞ்சனமங்கலத்துக்கும் இறுக்கும் படி கல்வெட்டிக் கொடுத்தேன் அவனி நாராயணதேவனேன் உ ஸ்வஸ்திஸ்ரீ.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருமய்யம் தாலூகா கண்ணனூர் பாலசுப்பிரமணியசுவாமி கோவிலின் கற்பக கிருகத்து வடபுறச் சுவர்.*

அரசன்:- *முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன்.*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *3-ம் ஆட்சியாண்டு கி. பி. 1219.*

சுந்தர பாண்டியன்:- இவன் கி. பி. 1216 முதல் கி. பி. 1238 முடிய மதுரை மாநகரில் முடிமன்னனாக வீற்றிருந்து பாண்டி நாட்டை அரசாண்டவன். மாறவர்மன் என்ற பட்டம் உடையவன். இவன் குலசேகர பாண்டியனின் மகன் அல்லது தம்பியாதல்வேண்டும் இவனுடைய பட்டத்தரசி உலக முழுதுடையாள்என வழங்கப் பெற்றனள். இவன் கல்வெட்டுக்கள் இவனை "சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்" "சோணாடுவழங்கியருளிய சுந்தரபாண்டியதேவர்" என்று கூறுவதால் இவன் மூன்றாம் இராசராசனைப் போரில் வென்று சோழ நாட்டைக் கைப்பற்றியமை, பிறகு அந்நாட்டை அவனுக்கு வழங்கியமை ஆகிய இரு நிகழ்ச்சிகளும் கி. பி. 1219-ம் ஆண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது தெள்ளிது.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

பிள்ளையார் அழகப்பெருமாள் என்பவர் கான நாடான விருதராச பயங்கரவளநாட்டுத் துறுமாநாட்டுத் திருநாவலூரும்

அனுமன் தாயான அஞ்சன மங்கலமும் இறுத்து வருகிற வரியிலே குறைக்க வேண்டுமென்று அவ்வூரார் விருப்பப்படி உலகுடைய நாயனார்க்கு விண்ணப்பஞ்செய்து நினைவூட்டினர். உடனே நாயனாரும் உத்தரவிட்டு நிர்வார்த்துத் திருமுகம் அருளினார். அத்திரு முகத்தில் கூறப்பட்டன வருமாறு:- (1) பயிரிட ஒப்புக்கொண்ட நிலத்துக்கு ஒவ்வொரு மா நிலத்திற்கும் இரு கல நெல் குறைத்து ஒவ்வொரு மா நிலத்திற்கும் 5 கலனே 2 தூணி 1 பதக்கு 4 நாழி நெல் இருக்க வேண்டும். (2) இவ்வூர்களில் நீரற்ற நிலமாய் முறைப்படி வரி செலுத்தி வருகிற நிலங்களுக்கு மாவுக்கு 3 கலனே 2 தூணி 3 குறுணி 3 உழக்கு நெல் செலுத்த வேண்டும். (3) ஆடிப்பட்ட நெல்லில் ஒன்றுக்கு முக்காற் பங்கு (மேற்குறிப்பிட்ட நெல்லின் அளவில்) அளிக்க வேண்டும். (4) வரகு மேற் குறிப்பிட்ட நெல்லளவில் ஒன்றில் பாதி இருக்கவேண்டும். (5) எள்ளும் தினையும் மேற் குறிப்பிட்ட நெல்லின் அளவில் காற்பங்கு இருக்கவேண்டும். (6) அரசன் நாட்டைச் சுற்றிப் பார்க்க வருங்கால் மக்கள் செலுத்தி வந்த திருவெழுச்சிக்குடிமை முதலாக நாடு என்ற வரி ஈருக உள்ள எப்பேர்ப்பட்ட வரிகளையும் ஒன்றில் பாதி இருக்கவேண்டும். (7) அஞ்ஞான்று வெட்டி முட்டை முதலிய ஆட்கள் இனிமேல் ஊதியமின்றி வேலைசெய்ய வேண்டியதில்லை. இத்திருமுகத்தில் கண்டபடி திருநாவலூராரும் அனுமன் தாயான அஞ்சனமங்கலத்து ஊராரும் வரி இருக்க வேண்டும் படி கல்வெட்டிக்கொடுத்தது அவனி நாராயண தேவன்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:-

பூமருவிய திருமடந்தை - இலக்குமி.

புவிமடந்தை - நிலமகள் [இவ்வரசன் வைணவன் ஆதலால் அவன் கடவுளான திருமாலுக்குரிய மனைவியராகிய ஸ்ரீ தேவியும் பூதேவியும் குறிக்கப்பெற்றுள்ளனர்]

நாமருவிய கலைமடந்தை - கலைமகள்.

சயமடந்தை - வீரமகள்.

[சுந்தர பாண்டியன் மிக்க செல்வமும், உலகாளும் ஆட்சியும் கல்விச் சிறப்பும், வீரமும் பெற்றிருந்தான் என்பது இவற்ருல் புலனுகிறது.]

இருங்கடல் வலயத்து - பெரிய கடலால் சூழப்பட்ட உலகத்து.

மூவகைத் தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

நால்வகை வேதம் - இருக்கு, யஜுர், சாம, அதர்வண வேதம். நச்சினுர்க்கினியர், தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமவேதம் என்று வேறு நான்கு கூறுவர். (கலித்தொகை, கடவுள் வாழ்த்து.)

ஐவகை வேள்வி - (1) தேவவேள்வி (2) பிரமவேள்வி (3) பூதவேள்வி (4) மனித வேள்வி (5) தென்புலத்தார் வேள்வி

எழுவகைப் பாடல் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு ஸ்வரங்களின் அடியாகப் பிறந்தன. வடமொழியில் இவற்றை (1) சட்ஜமம் (2) ரிஷபம் (3) காந்தாரம் (4) மத்யமம் (5) பஞ்சமம் (6) தைவதம் (7) நிஷாதம் என்பர்.

கொங்கணர் - கொங்கு நாட்டை ஆண்டவர்.

மாளுவர் - மாளவ தேசத்தை ஆட்சி செய்தவர்.

சிங்களர் - இலங்கை அரசர்.

குச்சரர் - 'குஜராத்' நாட்டை ஆட்சி புரிந்தவர்.

மாகதர் - மகத தேசத்தை ஆண்டவர்.

செம்பியர் - சோழர்.

பார்த்திபர் - அரசர்.

இந்திரன் பூட்டிய பொலங்கதிர் ஆரம் - உக்கிரகுமார பாண்டியனுக்கு இந்திரனால் அளிக்கப்பட்டது.

பனிமலர்த் தாமரைத் திசைமுகன் - குளிர்ச்சி பொருந்திய வெண்தாமரையில் இருக்கும் நான்முகன்.

முறைமுறை கடவதந்திறை - முறையாகச் செலுத்த வேண்டிய திறைப் பொருள்.

உரைநடைப் பகுதிப் பொருள்விளக்கம்:-

பிரசாதஞ் செய்தருளின - கொடுத்தருளின.

துறுமாநாடு:- கானநாடான விருதராஜ பயங்கர வளநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்று. புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள திருமய்யம் தாலூகாவைச் சேர்ந்த கண்ணனூர், திருநாவலூர், அஞ்சனமங்கலம் முதலான ஊர்கள் இத்துறுமாநாட்டில் அடங்கியிருந்தன.

இறுத்துவருகிற இறையிலே - செலுத்திவருகிற வரியிலே.

இலேசுபெற வேணுமென்று - வரி குறைக்கப்பட வேண்டுமென்று.

பிள்ளையார் - இப்பட்டம் அரசனது உறவினர் அல்லது பெருந்தரத்து அதிகாரிகளையோ குறிக்கும் மரியாதைச் சொல்.

அழகப்பெருமாள்:— குலசேகர பாண்டியனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் மைத்துனன் என்று கூறப்படுகின்றது. ஆகவே இவ்விரு அரசர்களும் உடன்பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பது T. V. சதாசிவ பண்டாரத்தார் கருத்து (பாண்டிய வரலாறு பக். 113)

நினைப்புமிட்டு - நினைவூட்டி.

பயிரெழுதமுதல்கொண்ட நிலம் - பயிரிடுவதற்குமுதன்மையான நிலம்.

மாத்தால் - ஒரு மா நிலத்துக்கு.

நீரிலி நிலம் - Water less lands. பயிரிடுவதற்கு போதுமான நீர் இல்லாத நிலம்.

வரிசைப்படி - முறைப்படி.

நவிரை - ஆடிமாதத்தில் (ஜுலை-ஆகஸ்டு) விதைக்கப்படும் ஒருவகை நெல்.

உலகுடைய நாயனார் - பாண்டியன் (சுந்தரபாண்டியன்) The Lord of the earth.

திருவெழுச்சிக்குடிமை - அரசனோ பிற அதிகாரிகளோ நாட்டைச் சுற்றிப்பார்க்க வருங்கால் அதற்கான செலவிற்காக மக்கள் சேர்க்கும் ஒருவகை வரியாகும். இது "சவாரி உளியம்" எனப்படும்.

நாடென்ற வரிகள் - நாடு காவலுக்கு உரிய வரியாகும். அல்லது 'நாடு' என்ற சபையினர் வசூலிக்கும் வரியாக இருக்கலாம். இது "'நாடென்ற எல்லைகளும்" எனவுங் கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது.

வெட்டிமுட்டை ஆள் - சிரமதானம் செய்பவர். Supply of free labour to be employed for public purposes.

அவணி நாராயண தேவன் - அரசன் ஆணையினை நிறைவேற்றும் ஒரு அரசியல் அதிகாரி.

பொதுச் செய்தி

(1) அக்காலத்தில் அரசனோ பிறரோ உத்தரவிட்டால் அவ் உத்தரவை உறுதி செய்வதற்காக நீர்வார்த்துக்கொடுத்து உறுதி கூறுவர் என்று தெரிகிறது. இச்செய்தியை "ஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில் எழுந்தருளியிருந்து உதகம்

பண்ணியருளின (நீர்வார்த்துக் கொடுத்த)'' என்றுவரும் வீரராசேந்திரனது 4-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும் காணலாம். (S. I. I. Vol. iii part i page 33.)

(2) இக்கல்வெட்டு 'ஸ்வஸ்தி' என்று தொடங்கி 'உஸ்வஸ்திஸ்ரீ (பிள்ளையார் சுழியுடன் கூடிய) என்று முடிகிறது.

(3) இக்கல்வெட்டில் ''ஒரு குடை, இருநிலம், மூவகைத் தமிழ், நால்வகை வேதம், ஐவகை வேள்வி, அறுவகைச் சமயம், எழுவகைப் பாடல், எண்திசை'' என எண்ணலங்காரம் படச் சொற்கள் அமைந்திருப்பதை எண்ணுந்தொறும், எண்ணுந்தொறும் இன்பம் பயக்கவல்லது.

(4) அளவைகள் :-

3 தூணி - 1 கலம்.
2 பதக்கு - 1 தூணி.
2 குறுணி - 1 பதக்கு.
8 நாழி - 1 குறுணி.
96 நாழி - 1 கலம்.
32 நாழி - 1 காடி.
$\frac{1}{3}$ காடி - 1 கலம்.
4 உழக்கு - 1 நாழி.

கல்வெட்டு - 26

கல்வாயில்நாடாழ்வான் இசைவுச் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சோழநாடு கொண்டருளிய ஸ்ரீவீரசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு ரு ஆவதின் எதிராமாண்டு இசபஞாயற்று இருபத்திரண்டாம் தியதியும் திங்கட்கிழமை புனர் பூசத்து நாள் கண்டன் ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வனேன்

காளையர் கால பெருந்தெருவில் வியாபாரி வெண்ணை நல்லூருடையான் கூத்தன் தில்லை நாயகன் திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங்குடிக் கள்ளர் பக்கல் காராண் கிழமையாக விலை கொண்டுடைய வண்டாங்குடி வளையிற் சுற்றுமுற்றுக்கும் இறை, குடிமை, அந்தராயம், நாடென்ற வரி, வாரமரக்கலம், கணக்கப்பேறு மற்றும் எப்பேற்பட்ட சில்லாயம் கடமை உள்ள வயிற்றுக்கும் நெல்வாயில் திருவ கத்தீச்சுரம் உடையநாயனுற்கு கோல் குடிதாங்கியால் புள்ளிபுக்க நிலம் ஒரு மாவுக்கு பசானபோகத்துக்கு கரும்புட் பட மாத்தால் இரு கலநெல்லும், அந்தராயத்துக்கு காற்திரமமும், ஆடிக்குறுவை அற்பசிக்குறுவைக்கு மாத்தால் கலநெல்லும் அரைக்கால் திரமமும், எள், திணை வரகுக்கு மாத்தால் தூணிப்பதக்கு நெல்லும், மாகாணி திரமமும் இறுப்பதாகவும், இவ்விறை கல்வாயில் நாட்டு கடமை காலாலேயிறுப்பதாகவும், திரமம் அஞ்சுமேனி இறுப்பதாக வும், இதுக்கு இவன் பக்கலே கற்பூர விலையுங்கொண்டு இப்படி சந்திராதித்தவற் செல்வதாக சம்மதித்தோம். கண்டன் ஆளுடையானுன கல்வாயின் நாடாழ்வனேன் வெண்ணை நல்லூருடையன் கூத்தன் தில்லை நாயகனுக்கு இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருமய்யம் தாலூகா நெய் வாசல் என்ற ஊரிலுள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலின் கற்பக் கிருகத்துத் தென்புறச்சுவர்.*

அரசன்:- *மாறவர்மன் சுந்தரபாண்டியன்.*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *6-ம் ஆட்சி யாண்டு. கி. பி. 1222 வைகாசித்திங்கள் இருபத்திரண்டாம்தேதி திங்கட் கிழமைப் புனர்பூசத்து நாள்.*

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

வெண்ணெய்நல்லூருடையான் கூத்தன் தில்லைநாயகன் திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங்குடிக் கள்ளர் பக்கல் பயிரிடும் உரிமை பெற்ற வண்டாங்குடி நிலத்தைச்சுற்றி அதற்குட்பட்டநிலத்திற்கு இறை, குடிமை, அந்தராயம், நாடுவரி, வாரமரக்கலம், கணக்கப்பேறு, கடமை, சில்லாயம்முதலிய வரிகளைக் குடிதாங்கிக் கோலால் அளக்கப்பட்ட ஒவ்வொரு மா நிலத்திற்கும் திருவகதீச்சுரமுடைய நாயனுற்கு அளிக்கவேண்டும். அளிக்க வேண்டிய வரிப்பொருள் வருமாறு:—

(1) ஒரு மாவுக்கு பசானபோகத்துக்கு கரும்புட்பட இரு கல நெல்லும் அந்தராயத்துக்கு கால் திரமமும், ஆடிக்குறுவை ஐப்பசிக் குறுவைக்கு மாவுக்கு ஒரு கல நெல்லும் $\frac{1}{8}$ திரமமும், எள், திணை, வரகுக்கு மாவுக்கு தூணிப்பதக்கு நெல்லும், மாகாணி திரமமும் வரியாக இருக்கவேண்டும்.

(2) இவ்வரிகளை இறுக்குங்கால் நெல் அனைத்தையுங் கடமைக்காலால் அளக்க வேண்டும். திரமம் ஐந்து ஐந்தாகக் கொடுக்க வேண்டும்.

இச்செயல் சந்திர சூரியர் உள்ள அளவும் நடைபெற வேண்டுமென்று இதற்குக் கூத்தன் தில்லை நாயகனிடம் முதற்பொருள் பெற்றுக்கொண்டு சம்மதித்தோன் கல்வாயின் நாடாழ்வான் என்பவன்.

பொருள் விளக்கம்:-

5 ஆவதின் எதிராமாண்டு - 6-ம் ஆண்டு.

இசபநாயற்று - வைகாசி மாதத்து.

காளையர் காலப்பெருந்தெரு - இது ஒரு ஊராகஇருக்கலாம். இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள காளையார் கோவிலாக இருக்கலாம்.

கல்வாயில் நாடு - கேரள சிங்க வளநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்று. இந்நாட்டில் தான் நெய்வாசல் உள்ளது.

வெண்ணெய்நல்லூருடையான் - வெண்ணெய்நல்லூரைச் சேர்ந்தவன். இவ் வெண்ணெய்நல்லூர் தஞ்சை ஜில்லாவிலுள்ள வெண்ணெய்நல்லூரா? அல்லது தென் ஆற்காட்டில் உள்ள திருவெண்ணெய்நல்லூரா? என்பது தெரியவில்லை.

திருத்தியூர் முட்டத்தார் - திருத்தியூர் நகரசபையார். முட்டம் என்பது தென் ஆற்காடு ஜில்லா, பன்றியூர் நாட்டு ஸ்ரீ முஷ்ணம் என்னும் ஊரில் உள்ள வைணவக் கோயிலாகும்.

காராண் கிழமையாக - பயிரிடும் உரிமையுடைய நிலம்.

இறை - அரசாங்க வரி.

குடிமை - ஆட்சிக்குச் செலுத்தும் குடியிருப்பு வரி. (Tenancy Dues)

அந்தராயம் - நாட்டை ஆள்பவரால் வசூலிக்கப்படும் வரி. (சபை அல்லது ஊரார் வசூலிப்பது) இதற்குக் 'கீழிறை' என்ற பெயரும் உண்டு.

கணக்கப்பேறு - கணக்கர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம்.

சில்லாயம் - சிறு வரிகள் (Minor cesses)

திருவகத்தீச்சுரமுடைய நாயனார் - திருமய்யம் தாலுகா நெல்வாசல், அல்லது நெய்வாசல் என வழங்கும் ஊரிலுள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில் உள்ள இறைவன் பெயர்.

குடிதாங்கிக்கோல் - இது மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் நிலம் அளக்கப் பயன்பட்டது. இதைத்தவிர "சுந்தர பாண்டியன் கோல்" என ஒன்றும் இவன் காலத்தில் இருந்தது.

புள்ளிபுக்கநிலம் - அளக்கப்பட்ட நிலம்.

பசானபோகம் - சம்பா நெல் (தைமாத அறுவடைநெல்)

திரமம் - காசின் அளவு.(Drachma)

கடமைக்கால் - அளக்கும் கருவி (மரக்கால்) கல்வாயில் நாட்டில் வழங்கியது.

அஞ்சுமேனி - ஐந்து, ஐந்தாக.

கஞ்பூரவிலே - முதற்பொருள் (கோவில்நிலங்களுக்கு அளிக்கப்படும் பொருள்)

சந்திராதித்தவல் - சந்திர சூரியர் உள்ள வரையில்.

இது பன்மாஹேஸ்வரரக்ஷை - பன்மகேஸ்வரரக்ஷை. இதை பல சிவனடியார்கள் காப்பார்களாக.

K. Chinna Goun
1-4-60
5.

கல்வெட்டு - 27

அரிகேசரி தேவர் சாசனம்

சுபமஸ்து
பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலைமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவ தரித்து,
முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து,
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து,
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து,
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி,
வான வாரியு மன்னருள் வாரியுந்
தான வாரியுந் தப்பா தளித்து,

மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையில் முதலையில் வீரையில்
வைப்பாற் றெண்ணில் மன்னரை வெங்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்
பதினெண்..............பாரகம்போற்றப்
பதினெண்பாஷைப் பார்த்திப ரனைவருந்
திறையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து,
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி,
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தைமுதல் அகரம் ஐந்திடத் தியற்றிச்
சிவநெறி யோங்கச் சிவார்சனை புரிந்து,
மருதூ ராற்கு மண்டப மமைத்து, முன்
ஒருதூர் மூங்கி லுள்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி
விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்
வழாவகை நடாத்திநின் மன்னரு ளதனுல்
வற்ரு வருவியும் வற்றி வற்கட
முற்றவிக் காலத் துறுபுனல் நல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி,
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து,
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையும் எக்கோ யிலினும்
பொருள்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை

உலகு முழுதும் உடையா ருடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன,
அம்மையும் அப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைக் குறுதியு
மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய,

ஸ்ரீ அரிகேசரி தேவரான பராக்கிரமபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது.............ற்று இருபத்தொன்ருந்தியதியும் பூர்ணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதிநாள் தென்வாரி நாட்டுச் சித்ரநதி உத்தர தீரத்தில் தக்ஷிண காசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தூபி பர்யந்தமுந் திருப்பணி செய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம் ஸோபாநம் இவையுந் திருப்பணிசெய்து, திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப் பண்ணுவித்து, ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து, மேல உடையார் விஸ்வநாதர் பூஜைக்கு அமுதுபடி சாத்துப் படி திருமாலைத் திருப்பரிவட்டப் திருவிளக்கு உட்பட்ட பல நித்திய நியமங்களுக்கும், பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும். முன்ளுள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்ருவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுக் களில்;

தென்வாரிநாட்டுத் தென்காசிக்குப் பெருநான்கெல்லை யாவது:—

கீழ் எல்லை புலியூற் பற்ருண காராண் குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர் அகரப் பற்றில் புஞ்சைக்கும் நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்லைக்கு மேற்கும், தென் எல்லை சித்ர நதிக்கு வடக்கு, மேல் எல்லை

குன்றக்குடிப் பரிம்புக்குக் கிழக்கும் வ...........சென்னுய்ப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னுன் கெல்லைக்குட்பட்ட பற்றும்.

இந்த நதிக்கு தக்ஷிணதீரத்தில் வாயுளான்குடிப் பற்றுக்குப் பெருநான்கெல்லையாவது:—

கீழ எல்லை புலியூர் அணைக்கும் திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும். தென் எல்லை திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் பராக்கிரமபாண்டிய சதுர்வேதி மங்கலத்து பட்டங்கள் அகரப்பற்றில் வட வெல்லைக்கும் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் பழந்தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்லை வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும், வட எல்லை சித்ரநதிக்குத் தெற்கும் ஆக இன்னுன் கெல்லைக்குட்பட்ட பற்றும்;

குன்றக்குடிப் பற்றுக்குப் பெருநான் கெல்லையாவது:—

கீழ் எல்லை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்லை சித்ரநதிக்கு வடக்கும், மேல் எல்லை செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெரு வழிக்குக் கிழக்கு, வட எல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு, ஆக இன்னுன்கெல்லைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவதானமான நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும்;

பராக்கிரமபாண்டிய நல்லூற் பற்றுக்குப் பெருநான் கெல்லையாவது:— கீழ் எல்லை இலுப்பைத் தொண்டிற் பெரு வழிக்கு மேற்கும், தென் எல்லை இக்குளத்தின் நீர் நக்கலுக்கு வடக்கும், மேல் எல்லை உடையார் திருக்

குற்ருலமுடைய நாயஞர் பழந் தேவதானமான திருச்சாலைக் குடிப்பற்றுக்குக் கிழக்கும், வட எல்லை சித்ரநதிக்குத் தெற்கும், ஆக இன்ஞன்கெல்லைக் குட்பட்ட பற்றில் இருங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தான இறையிலி நிலமிரண்டு மாவும் நீங்கலாக உள்ள பற்று;

நல்லூர்ப் பற்றில் வள்ளைமுட்டமும் இக்குளத்தில் நீர் பாயும் நிலமாய் வடவூர்ப் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்று மா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெரு நான் கெல்லை யாவது:- கீழ் எல்லை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும், தென் எல்லை வடவூர்ப்பற்றில் செங்குளத்தில் நீர்பாயும் நிலத்துக்கும் தஞ்சாவூர்ப் பெருங்காலுக்கும் அனுபோகமழகியான் குளத்தில் நீர் பாயும் பற்றுக்கு வடக்கும், மேல் எல்லை இக்குளத்தில் நீர் நக்கலுக்கும் தவணைப் பற்றுக்கும் கிழக்கு, வட எல்லை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெருவழிக்குத் தெற்கும் ஆக இன்ஞன்கெல்லைக்குட்பட்ட பற்றும்.

வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லாண் பிள்ளைப் பெற்ருளுக்கும் விஸ்வநாதப் பேரேரிக்கும் பெரு நான்கெல்லையாவது:- கீழ் எல்லை செங்கோட்டைப் பிடாரி யார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்றுக்குப் போகிற பெருவழிக்கு மேற்கு, தென் எல்லை ஆற்றுக்கு வடக்கு, மேல் எல்லைப் பைம்பொழிலில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு, வட எல்லை தேனிடு பொற்றைக்குத் தெற்கு, ஆக இன்ஞன்கெல்லைக்குட்பட்ட பற்றும்:

முப்பதாவது மேஷ ஞாயற்று இருபத்தெ............. தியதியும் பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் நாம் முன்புவிட்ட பற்றுக்கள் நீங்கலாக நாளது பூஜைச் செலவுக்கு விட்ட,

தென்வாரி நாட்டு இராசகுலமார நல்லூரான புலியூர்ப் பற்றுக்கும் வீரபாண்டியநல்லூர்ப் பற்றுக்கும் பெரு நான்கெல்லை யாவது:-

புலியூர்ப் பற்றுக்குப் பெருநான்கெல்லை கீழ் எல்லை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்கு மேற்கு, தென் எல்லைச் சிற்ருற்றுக்கு வடக்கு, மேல் எல்லை பழந்தேவதானமான தென் காசிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்லை ஆயக்குடிப் பற்றுக்குத் தெற்கு ஆக இன்னான்கெல்லைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனர் தேவதானமும், உடையார் விக்கிரம பாண்டீஸ்வரமுடைய நாயனர் தேவதானமும், நயினர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும் ஸ்ரீகிருஷ்ணந் திருவிடையாட்டமும், பராக்கிரம பாண்டிய நல்லூரில் நயினர் திருவேங்கடநாதன் திருவிடையாட்டமும், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும் அகரப் பற்றும் நீங்கலாக இன்னான்கெல்லைக்குட்பட்ட பற்றும்:

வீரபாண்டியநல்லூருக்குப் பெருநான்கெல்லையாவது:- கீழ் எல்லை தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு, தென் எல்லை திருச்சிற்றம்பலத்துக்காலான இராசகுலராமநல்லூர்க் காலுக்கும் நயினர் திருவிருந்த பெருமான் திருவிடையாட்ட மான ஆகவராம...........துக்கும் வடக்கு மேல் எல்லை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்லை விந்தனூர்ப் பெரு வழிக்குத் தெற்கு, ஆக இந் நான்கெல்லைக்குட்பட்ட பற்றும், இப்பற்றுக்களில் பெரு நான்கெல்லைக் குட்பட்ட நஞ்செய், புஞ்சை, மாவடை, மரவடை, பட்டடை, கொடித் தோட்டம், செக்கிறை மற்றுமுள்ள ஸமஸ்தப்ராப்திகளும் முப்பதாவது பாசன முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மரியாதியிலே இவ்வோலைப் பிடிபாடாகக்

கொண்டு ஆசந்த்ரதாரவத் இவ்வாலயம் உள்ள அளவும் கையாண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப்போதவும் பாற்க. இவை கிடாரத்தூருடையான் எழுத்து உ துல்யம்.

கல்வெட்டு இருக்குமிடம்:- *தென்காசி விஸ்வநாத சுவாமி கோயிலின் உள்ளே மேலைப்புற அடிச் சுவரிலும், தென்புற அடிச்சுவரிலும் உள்ளது.*

அரசன்:- *அரிகேசரிபராக்கிரம பாண்டியன்.*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *29-வது ஆட்சியாண்டு கி. பி. 1451.*

அரிகேசரி பராக்கிரம பாண்டியன்:- இவன் கி. பி. 1422 முதல் கி. பி. 1463 முடிய ஆட்சி புரிந்தவன். தென் காசிப் பெருங்கோயிலை எடுப்பித்தவன் இம்மன்னன் ஆவன். இவன் மிகுந்த சிவ பக்தன்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

பராக்கிரமனின் அறச்செயல்:- (1) அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி விஸ்வநாதப்பெருமானின் திருக்கோயிலை அடிமுதல் கலசம் வரை திருப்பணி செய்வித்து விசுவநாதப் பெருமானை அதில் எழுந்தருளிவிக்கச் செய்தான். (2) அப் பெருமானுக்கு அர்த்த மண்டபம், மகாமண்டபம், சோபானம் இவைகளையும் திருப்பணி செய்வித்தான். (3) திருப்பள்ளியறை நாச்சியார் முதலாக உள்ள திருமேனிக்ளைச் செய்துவைத்தான். மதில் கோபுரம் இவைகளையும் எடுப்பித்தான். (4) விசுவ நாதரின் வழிபாட்டுக்குச் சாத்துபடி, திருமாலை, திருப்பரி சட்டம், திருவிளக்கு உட்பட்ட பல நித்திய நியமங்களுக்கும், பல விசேட பூசைகளுக்கும், திருநாட் செலவுகளுக்குமாக, தன் 25-ஆம் ஆண்டில், தென் காசி, வாயுளான், குன்றக்குடி, நல்லூர், வடவாரி நாட்டுப் பைம்பொழில் ஆகிய இவ்வூர்களைக்

கொடுத்துள்ளான். (5) இதுபொழுது தன் ஆட்சியின் 29-ஆம் ஆண்டில் புலியூர், வீரபாண்டியம் என்னும் ஊர்களை விட்டுள்ளான்.

மெய்க்கீர்த்திப் பொருள் விளக்கம்:—

பூமிசை வனிதை - திருமகள்.

சயமகள் புணர - வெற்றிபொருந்த.

கயலிணை - இணையான இருகயல்கள். பாண்டியரது கொடி (இலச்சினை)யில் இருகயல்கள் வரையப் பெற்றிருக்கும். அவை உலகத்திற்கே இருகண்களெனத் திகழும்.

முளை - தோன்றல்.

தென்கலை - தமிழ்மொழிப் பயிற்சி.

வடகலை - வடமொழி நூற் பயிற்சி.

மன்பதை - உயிர்ப்பன்மை.

சங்கர சரண பங்கயஞ் சூடி - சிவபெருமானின் பாத தாமரையைத்தன் தலையிலேசூடி. (சிவபெருமானிடத்தில் பக்தி கொண்டு என்றபடி)

வானவாரி - மழை. அரசன் அறநெறியின் மழைபெய்யு மென்பது பற்றி அரசனே வானவாரி அளித்தான் என்று கூறப்பட்டது.

மன்னருள்வாரி - நிலையான கருணை.

தானவாரி - கொடை. வாரி என்றது இங்கு தகுதியைக் குறித்து நின்றது.

சிங்கை - விங்கிரம சிங்கனூர். நாங்குனேரியை யடுத்த சிங்க குளம் என்பர் சிலர்.

இராசை - சங்கரநயினார் கோயில்.

செண்பை - இது சண்பகவனம் என்னும் திருக்குற்றாலத் தலமாகும். நாங்குனேரியை சண்பக ராசபுரம் என்பார் சிலர்.

விந்தை - விந்தனூர். இது தென்காசியை யடுத்த செங்கோட்டைப் பகுதியில் உள்ளது. "பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம்" என்றும் இதற்கொரு பெயர் உண்டு, இப்பொழுது விந்தைக்கோட்டை என வழங்குகிறது.

முதலை - முதலைக்குளம் என்னும் ஊர். இது நாங்குனேரித் தாலூகாவில் உள்ளது.

வீரை - வீரகேரளம் புதூர். செங்கோட்டைப் பகுதியில் உள்ளது.

வைப்பாறு - வைப்பாறு ஓடும் பகுதி. இது தென் காசி வழியே ஓடுகிறது.

எப்பாற்றிசையும் - எல்லாத் திசையும்.

இசை விளக்கேற்றி - புகழ்பரப்பி.

சின்னம் - அடையாளப் பூ.

குரைகழல் - வீரக்கழல் அணியும் பாதம் ஆகலின் அரசன் பாதம் "குரைகழல்" எனப்பட்டது.

விந்தை முதல் ஐந்தாவன:- விந்தை, அறந்தை, முதலை, வீரை, வைப்பாறு முதலியன.

அகரம் - அக்கிரகாரம். அந்தணர் வாழ்விடம்.

மருதூரார் - திருப்புடை மருதூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். திருப்புடை மருதூர் அம்பாசமுத்திரம் தாலூகாவில் உள்ளது. அங்குள்ள கோயில் மண்டபத்தைப் பராக்கிரம பாண்டியன் கட்டினன்.

தூர்மூங்கில் - மூங்கில்தூர், மூங்கிலடி, மூங்கிலடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் குறிக்கும். திருநெல்வேலியில்

உள்ள இச்சிவபெருமானுக்கு அர்த்தயாம வழிபாட்டிற்கு பராக்கிரமபாண்டியன் நிபந்தங்கள் விட்டுள்ளான்.

சண்பகவனத்துச் சங்கரர் - திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் பெயர். இவன் இக்கோயிலுக்கு மண்டபம் அமைத்து திருமஞ்சன மாட்டுதல் முதலிய திருவிழாச் சிறப்பும் செய்வித்தான்.

நின் மன் அருள் தன்னால் உறுபுனல் நல்கென - உனது நிலையான கருணையால் நல்லநீர்பெற அருள்வாய் என்று வேண்ட.

மின்கால்வேணி - மின்னலைக் கக்குகின்றசடை.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்:-

பராக்கிரம பாண்டியனுடைய வீரச்செயல்கள்:-

(1) சிங்கை, அனுரை, இராசை, சண்பை, விந்தை, அறந்தை, முதலை வீரை, வைப்பாறு ஆகிய ஊர்களில் தன் பகைவனை வென்றான்.

(2) பதினெண் மொழிப் பார்த்திபரனைவரும் திறையும், சின்னமும், முறை முறை கொணர்ந்து, குறைபல இரந்து குரை கழல் இறைஞ்ச அவரவர் வேண்டியது அவரவர்க்கு அருளினன்.

அரிகேசரியின் சிவபக்தி மாண்பினை விளக்கும் அறச்செயல்:-

(1) அந்தணர் செந்தழல் ஓம்ப விந்தை முதலான ஐந்து ஊர்களில் அகரங்களை அமைத்துள்ளான்.

(2) திருப்புடை மருதூர்க் கோயிலில் மண்டபம் எடுப்பித்தான்.

(3) திருநெல்வேலிச் சிவபெருமானுக்கு அர்த்தயாம வழிபாட்டிற்குப் பொற்கலத்தில் அமுது செய்வித்தருள ஏற்பாடு செய்தான்.

(4) திருக்குற்றாலத்துச் சிவபெருமானுக்கு மண்டபம் அமைத்து மணி முடி சூட்டி விழாவும் நடத்தினன்.

(5) வறகடம் உற்ற காலத்து, திருமுழுக்கிற்குச் சேண் புலத்திலிருந்து நீர் கொணர ஏற்பாடு செய்தான்.

(6) தென்காசியில் விசுவநாதர்க்குப் பெருங்கோயில் அமைத்து, எல்லாக் கோயில்களிலும் ஆகம விதிப்படி நித்திய நைமித்தியங்களை நடத்தச் செய்தான்.

அரிகேசரி பராக்கிரமனின் குணநலன்கள்:-

இயற்பெயர் பராக்கிரம பாண்டியன் என்பதாகும். அரிகேசரி என்பது சிறப்புப் பெயராகும். தென் காசிக் கோயிலை எடுப்பித்தவன் இவனே.

(1) முன்னோர் குலத்தோன்றலாக வளர்ந்து தென்கலை, வடகலை இவற்றைத் தெளிவுறக் கற்றவன்.

(2) உலக மக்களைக் காக்கச் சிவபெருமானுடைய பாதங்களாகிய தாமரைமலர்களைத் தன்னுடைய முடியிற்சூடிச் செங்கோல் ஓச்சியவன்.

(3) அறநெறியுடன் கருணை கொண்டு தானமளித்து மறமாகிய களையை ஒழித்து அறமாகிய பயிரை வளர்த்தவன்.

(4) இலகு கருணை இரண்டுருவென்ன அம்மையும் அப்பனுமாய் அனைத்துயிர்க்கும் இம்மைப் பயனும் மறுமைக் குறுதியும் மேம்பட நல்கினன்.

உரைநடைப் பகுதிக்குப் பொருள் விளக்கம்:—

இருபத்தெட்டாவதின் எதிராவது - 29 ஆவது

பூர்ணை - பௌர்ணமி.

சோதிநாள் - சுவாதிநக்ஷத்திரம் (15-வது நாள்)

சித்ரநதி - தென்காசியில் ஓடும் ஆறு.

உத்தர தீரத்து - வடகரையில்.

அபிநவமாக - புதிதாக.

உபாநாதி - அடிமுதல்.

ஸ்தூபி பரியந்தம் - கலசம்வரை (முடிவரை)

அர்த்த மண்டபம் - கர்ப்பகிருகத்தைச் சார்ந்தமண்டபம்.

இடைநாழிகை - அர்த்த மண்டபத்திற்கும், மகாமண்டபத்திற்கும் இடைப்பட்ட இடம்.

மகாமண்டபம் - அர்த்த மண்டபத்தையடுத்துள்ள பெரிய மண்டபம்.

சோபானம் - படிக்கட்டு.

ப்ரதிஷ்டித்து - எழுந்தருளச் செய்வித்து.

ஆவரணம் - சுற்றுமதில்.

கோபுராதி - கோபுரமுதலிய.

திருவுடம்புகளும் - திருமேனிகளும்.

ஏறி அருளப்பண்ணுவித்து - எழுந்தருளும்படிச் செய்து.

திருப்பரிவட்டம் - (திருப்பரிசட்டம் என்பதே திருந்திய பாடம்) கடவுளுக்குச் சாத்தும் ஆடை.

இரண்டாவதின்எதிர் இருபத்துமூன்றுவது - இருபத்தைந்தாம் ஆண்டில்.

பற்று - பல கிராமங்களையுடைய நாட்டுப் பகுதி.

புலியூர் - இது தென்காசித் தாலூகாவில் உள்ளது. "இராசகுலராம நல்லூர்" என்பது இதன் மற்றொரு பெயர்.

நீர்நக்கல் - ஏரியின் உள்வாய் நீர் தேங்கும் பகுதி. வாய்க்கால் எனினுமாம்.

பரிம்பு - பாழிடம். இக்காலத்தில் "பாம்புக்காடு" என்பர்.

மடப்புறம் - மடத்துக்கு இறையிலியாக விடப்பட்டநிலம்.

நாராயண ஸ்ரீ பாதங்கள் - இவர் ஒருவைணவசந்நியாசி இவர் வாழ்ந்த மடம் நாராயண ஸ்ரீபாதங்கள் எனப்பட்டது.

பராக்கிரம பாண்டியசதுர்வேதி மங்கலம் - இது செங்கோட்டையை யடுத்த விந்தனூருக்குரிய மற்றொரு பெயர்.

உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் - சண்பக வனத்துச் சித்பரர் (சிவபெருமான்)

இலத்தூர் - செங்கோட்டைத் தாலூகாவில் உள்ள ஊர்.

இருங்கிண்டி - ஒரு ஊரின் பெயர்.

மா - $\frac{1}{20}$ வேலி (100 குழி நிலம்)

முந்திரிகை - $\frac{1}{320}$

காணி - $\frac{1}{80}$

நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் - $599\frac{1}{2}$ குழி.

பைம்பொழில் - திருநெல்வேலி ஜில்லா தென் காசித் தாலூகாவில் உள்ளது. இவ்வூரையடுத்தது 'பைம்பொழில் பற்று' எனப்படும்.

விசுவநாதப்பேரேரி - இது அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் வெட்டப்பட்டதொரு ஏரி.

நாம்முன்புவிட்டபற்றுக்கள் - தென்காசிப்பற்று, வாயுளான்குடிப்பற்று, குன்றக்குடிப்பற்று, நல்லூர்ப்பற்று, பைம்பொழில் பற்று என்பன,

நாளது - மேல்வரும்.

பாட்டக்குடிப்பற்று - இது திருவெண்காட்டு முதலியார் மடத்துக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம். புலியூர்ப் பற்றுக்குக் கீழ் எல்லையாகும்.

வீரபாண்டிய நல்லூர் - இக்காலம் வீரபாண்டியம் என்று வழங்கப் பெறுகின்றது. திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரித் தாலூகாவில் உள்ளது.

திருவிடையாட்டம் - திருமாலுக்கு அளிக்கப்பெற்ற நிலம். திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டம், ஸ்ரீ கிருஷ்ணன் திருவிடையாட்டம் என்ற தொடர்களே இதைப்புலப்படுத்தும்.

மாவடை - நிலத்தில் அடங்கிய விலங்குகள். கிராமத்தில் கால்நடை அடையும் இடம் எனினுமாம்.

மரவடை - மரங்களுக்குரிய வரி. மரவிடை என்றும் வரும். பழம் கொடுக்கும் மரம் என்றும் பொருள் உண்டு.

பட்டடை - இறைப்புப் பாசனத்தால் பயிரிடப்படும் நிலம். குடிவாரம் எனினுமாம்.

கொடித்தோட்டம் - படர்கொடி, வெற்றிலைத் தோட்டம்.

செக்கிறை - செக்கு ஆட்டி எண்ணெய் எடுப்பதற்கு ஏற்பட்ட வரி.

ஸமஸ்தப்ராதிகளும் - சகல அனுபவங்களும் (எல்லாப் பேறுகளும்)

முப்பதாவது பசானமுதலுக்கு - முப்பதாவது ஆண்டு பசானமுதலாக.

இம்மரியாதியிலே - இந்த முறையிலே.

கையாண்டு - அனுபவித்துக்கொள்ளும்படி.

தாழ்வற - தடையின்றி.

பிடிபாடாக - ஆதரவாக.

பாற்க - கவனித்துக்கொள்ளவும்.

துல்யம் - சரி. அரசன் கையெழுத்து. (The sign manual of the king.)

ஆசந்த்ர தாரவற் - சந்திரனும் நக்ஷத்திரமும் உள்ளவரை.

"இவ்வோலை பிடிபாடாக" - விளக்கம்:-

பிடிபாடு - ஆதாரம். இப்பத்திரம் ஆதாரமாக என்பது பொருள். அரசன் தான் நிபந்தமாக விட்டவைகளுக்கு ஆதாரமாக இச்சாசனத்தைச் செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்ளக் கூறினன் என்பதும், அவ்வாறே கோயில் அதிகாரிகள் செய்தனர் என்பதும், இறையிலி நிலங்களுக்கு இதுவே ஆதாரம் என்பதும் அறிகிறோம்.

பொதுச் செய்தி

இலகு கருணையிரண்டுருவென்ன:- உவமை விளக்கம்:- விளங்கும் கருணையே இரண்டுருவெடுத்தாற் போலத் தாயும் தந்தையுமாய் உலக உயிர்கள் அனைத்திற்கும் இம்மைப் பயனையும் மறுமைக் குறுதியும் அளித்து அரியாசனத்தில் பராக்கிரம பாண்டியன் உலக முழுதுடையாளொடும் வீற்றிருந்த சிறப்புக் கூறப்படுகிறது.

"முன்னொரு தூறு மூங்கிலுள்புக்கிருந்த சிற்பரர்" - இத் தொடரில் குறிக்கப்பெற்ற வரலாறு.

அந்நிய நாட்டு அரசர் படையெழுச்சியை முன்னிட்டுத் திருநெல்வேலிச் சிவபெருமானை ஒரு மூங்கில் புதரினுள் புதைத்திருந்தனர். பல ஆண்டுகள்வரை சிவபெருமான் அங்கே இருந்தார். இந்நிகழ்ச்சி எவர்க்கும் தெரிந்திலது. மூங்கிலும் அழிந்துபோய்விட்டது. ஒரு நாள் ஒரு இடைச்சி அவ்வழியே பால்கொண்டு செல்கையில் தடுக்கலுற்றுக் கீழே விழ நேர்ந்தது.

அடுத்தடுத்தும் இப்படியே நிகழ்ந்தது. இதை அவ் இடைச்சி தன் கணவனிடம் கூற அவன் அதைத் தோண்டிப் பார்க்கையில் சிவபெருமான் திருமேனியைக் கண்டு கோயிலில்கொண்டு வைத்தார்கள் இது,

“ வேயீன்ற முத்தரை வெட்டினு னேயிடையன்
தாயீன்ற மேனித் தயங்கவே - பேயாகேள்
எத்தனைநாள் என்றே இடறுவான் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டும் அவற்கு”

என்று வரும் இரட்டைப் புலவர் பாடலால் அறிக.

கல்வெட்டு - 28

தென்காசித் திருப்பணிக் கல்வெட்டுப் பாடல்கள்

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

சுபமஸ்து. ௨

1. அன்பினுடன் சகாத்தமா யிரத்து முந்நூற்
றறுபத்தெட் டதன்மேல் வைகாசித் திங்கள்
மன்தியதி யீரைந்தில் பூருவ பக்க
மருவுதெச மியில்வெள்ளி வாரந் தன்னில்
மின்திகழுத் திரநாள் மீனத்தில் வாகைவே
லரிகே சரிபராக் கிரம மகீபன்
தென்திசையிற் காசிநகர்க் கோயில் காணச்
சென்று நின்று காழ்சணை தான் செய்வித்தானே.

2. அடைவுதிகழ் சகாத்த மாயிரத்து முந்நூற்
றறுபத்தொன் பதின்மேற்செல் மிதுன ஞாயற்
றிடைமருவு தியதிபதினெ............
... ...

.........விற்சனிவார மதனில் மீனத்தில் மன

... ...

உடையவரைத் தென்காசிச் சிவாலயத்தி
னுள் ளமைத்துத் தெள்ளமுத மூட்டினனே.

3. பன்னுகலியுக நாலாயிரத் தைஞ்னூற் றைம்பத்
லெவரும் பணிந்து போற்றச் [தெட்டின்மே
சென்னெல்வயல் தென்காசி நகரில்நற் கார்த்திகைத்
தியதி யைந்திற் செம்பொன்வார [திங்கள்
மன்னியமார் கழிநாளிற் மதுரைவேந்தன் வடிவெழு
தொணுத பராக்கிரம மகீபன்
சொன்ன வரைபோற் திருக் கோபுரமுங் காணத்
துடியிடையா யுபானமுதல் துடக்கினனே.

4 ஏராருஞ் சகாத்தமாயிரத்து முந்நூற்றெழுபத்
கார்த்திகை மாதத்திற் [தொன்பதின்மேற்
சீராருந் தியதி யைந்திற் குருவாரத்திற் சிங்கமுகூர்த்
தத்தில் மிருகசீரிழ் சத்......
தன்னில ரன்அருளால் வழுதி பராக்கிரம மகீபன்
கூரு பானமுதல் கோட்டினனே.

கட்டளைக் கலித்துறை.

5. சேலே றியவயல் தென்காசி
யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய
லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப்
பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன்
பராக்கிரம பாண்டியனே.

6. மனத்தால் வகுக்கவு மெட்டாத
கோயில் வகுக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்தென்
காசியை யென்றுமண்மேல்
நினைத்தா தரஞ்செய்தங் காவல்
புனையும் நிருபர்பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதி
யானுந் தரித்தனனே.

7. பூந்தண் பொழில்புடை சூழுந்தென்
காசியைப் பூதலத்தில்
தாந்தங் கிளையுட னேபுரப்
பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்கிரமக் கைதவன்
மானகவ சன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந்
நாளும் விளங்குவரே.

8. காண்டகு சீர்புனை தென்காசிக்
கோபுரக் கற்பணியா
ரூண்டில் முடித்துக் கயிலைசென்
றுனகி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகேசரி
விந்தைப் பேரர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள்
பராக்கிரம பாண்டியனே.

9. ஆரா யினுமிந்தத் தென்காசி
மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப்
போதங்கு வந்ததனை

நேராக வேயொழித் துப்புரப்
பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே.

10. அரிகே சரிமன் பராக்கிரம
மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக்
கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத்
தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பாற்பொற்
பாதமென் சென்னியதே.

11. சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட
பூசைகள் தாம்நடாத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன்பொற்
கோயிலென்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம
மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும்
அடைக்கலங் கூறினனே.

12. மென்காசை மாமல ரன்னமெய்
யோர்க்கும் விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ
நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென் றுதொட்ட
கைக்குமிப் பூதலத்துத்
தென்காசி கண்ட பெருமான்
பராக்கிரமத் தென்னவனே.

13. ஏரார் சகாத்த முன்னூற்று
டனுயிரத் தென்பத்தஞ்சிற்
சீராரு மார்கழி சித்திரை
நாளிற் சிறந்து குற்றம்
வாராத பூரணையிற் பராக்கிரம
மாறனெ............
...ரா.........ரகயிலாயந்தான்
............கண்டனனே.

14. கோதற்ற பத்தி யறுபத்து
மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்
தோசெம்பொ னம்பலத்தொ
வேதத் திலோசிவ லோகத்தி
லோவிசுவ நாதனிரு
பாதத் திலோசென்று புக்கான்
பராக்கிரம பாண்டியனே.

15. அணிகொண்ட விந்த வணங்குமொன்
றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசல் பணியும்ஒன்
றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முன்னீரை
யும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்ன
பராக்கிரம பாண்டியனே.

வெண்பா

16. ஓங்கு நிலையொன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னென்று பயில்தூணுந்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தவத்து.

கல்வெட்டுஇருக்குமிடம்:- தென்காசி விஸ்வநாதசுவாமி கோயில் முன்பு உள்ள பாழுடைந்த கோபுரத்தின் சுவர்களில் உள்ளது.

அரசன்:- அரிகேசரி பராக்கிரம பாண்டியன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- சகாப்தம் 1368 கி. பி. (1368 + 78) 1446.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசிக் கோயிலை எடுப்பித்தற்கு காரணமும், இவனைப்பற்றிய குறிப்பும்.

சிவபெருமான் ஒருநாள் இவ்வரசன் கனவில் தோன்றி வடகாசியிலுள்ள தம் திருக்கோயில் அழிவுற்ற நிலையிலிருத்தல் பற்றிச் சித்ர நதியின் வடகரையில் தென்காசியும் அதில் ஓர் ஆலயமும் அமைக்குமாறு கூறியருளியதே இதனை இவன் கட்டுவித்தற்குக் காரணமாகும். இச்செய்தி தென்காசிக் கோயிற் கோபுரத்தின் முன்னர் நிற்கும் ஒரு கற்றூணில் வரையப் பட்டுள்ளது. இக்கோயிலின் திருப்பணி முடிவுபெறுவதற்குப் பதினேழாண்டுகள் ஆயின என்பதும் இக் கல்வெட்டால் அறியலாம். ஆனல் இவன் தொடங்கிய ஒன்பது நிலைக்கோபுரத் திருப்பணி மாத்திரம் இவனுட்சியில் முடிவெய்தவில்லை. இவ் வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்பால் இவன்கொண் டிருந்த பக்தி அளவிட்டு உரைக்கத் தக்கதன்று. எத்தகைய குறைகளுமின்றி அக்கோயிலைப் பாதுகாத்து வருமாறு சிவன டியார்களையும் தம்வழித் தோன்றல்களையும் இம்மன்னர் வேண்டிக் கொண்டிருப்பது குறிப்பிடற் பாலதாகும். அவ் வேண்டுகோளும் செந்தமிழ்ப் பாடல்களாக உளளது. கன்னெஞ் சமுடைய யாரையும் உருக்கும் இயல்புடையனவும். எந்நிலையி னரையும் பிணிக்குந் தன்மை வாய்ந்தனவுமாகிய அப்பாடல்கள் இவ்வரசன் இயற்றியனவேயாகும். அவற்றைக் கோபுரத்தில் காணலாம். அப்பகுதியே நமக்குப்பாடமாக வந்துள்ளன. இவன் விசுவநாதப்பேரேரி என்ற பெயருடைய ஏரி ஒன்று வெட்டு

வித்திருப்பது குடிகளது நலத்தின் பொருட்டு இவன் செய்த அறச்செயல்களுள் ஒன்றாகும். இவ்வேந்தன் கி. பி. 1463 ஆம் ஆண்டில் விண்ணுலகமடைந்தான் என்பதை இக்கல்வெட்டுப் பாடல்களே அறிவிக்கின்றன.

பொருள் விளக்கம்:—

சகாத்தம் - பழைய கல்வெட்டுக்களில் சகர் அல்லது சகம் என்று தான் வருகின்றது. பிற்காலத்துத்தான் சாலிவாகன சகாப்தம் என்று வருகின்றது. எனவே, சகம் என்றாலும் சாலி வாகனசகாப்தம் என்றாலும் ஒன்றேயாகும். கி. பி. 78ல் தான் சாலிவாகன சகாப்தம் ஆரம்பமாயிற்று. ஆகையால் சகம் அல்லது சாலிவாகன சகாப்தம் வருமிடத்தில் எழுபத்தெட்டைச் (78) சேர்த்துக் கூட்டினால் கி. பி. ஆண்டு வரும்.

சகாத்தம் 1368. கி. பி. ஆண்டு $1368 + 78 = 1446$

தியதி - தேதி.

பூர்வபக்கம் - பூர்வபக்ஷம் - The period of தேய்பிறை.

காழ்சணேசெய்வித்தல் - முகூர்த்தக்கால் நடுதல் அல்லது கால்கோள்.

மிதுனஞாயற்று - ஆனிமாதத்து.

தெள்ளமுதம்ஊட்டல் - நிவேதனம் செய்தல்.

கலியுகம் - சகத்தைக் காட்டிலும் கலியாண்டு 3179 ஆண்டு மிகுந்தது. சகம் 1379 எனில் அதற்கு நேரான கலியாண்டு $3179 + 1379 = 4558$ ஆகும்.

செம்பொன்வாரம் - குருவாரம் - வியாழக்கிழமை.

மார்கழிநாள் மிருகசீரிஷ நக்ஷத்திரம்.

சொர்ணவரை - பொன்மலை - மேருமலை.

உபானம் - அடிப்பகுதி.

சிங்கமுகூர்த்தத்தில் - சிம்மலக்னத்தில்.

கூர்உபானம் கோபுரத்தின் அடிப்பகுதிகளில் ஒன்றாக இருக்கலாம்.

நிருபர் - அரசர்.

செந்தாமரையாள் - திருமகள்.

பராக்கிரமக்கைதவன் - பாண்டியனைக் குறிக்கும்.

கொற்கை வேந்தன் - பாண்டியன.

அகிலேசர் - சிவன்.

பூரணை - பௌர்ணமி.

கோதற்ற - குற்றமற்ற.

வெள்ளிச்சிலம்பகம் - மதுரை.

செம்பொன்னம்பலம் - சிதம்பரம்.

காசை - காசைமலர்.

காசு - குற்றம்.

விந்த அணங்கு - கொற்றவை.

பூதம் பணிகொண்டது - உலகத்தை ஆண்டது.

இப்பாடல்களால் அறியப்படும் செய்திகள்:-

I பராக்கிரம பாண்டியனின் அறச்செயல்கள்:—

(1) கி. பி. 1446ல் வைகாசித்திங்கள் 30-தேதி பூர்வபக்ஷமும் தசமி திதியும் வெள்ளிக்கிழமையும் கூடிய உத்திர நக்ஷத்திரத்தில் தென்திசையில் தெனகாசிக்கோயில் அமைக்க கால் கோள்விழா நடத்தினன்.

(2) கி. பி. 1447ல் ஆனிமாதம் (17 அல்லது 18ந்தேதி) சனிக்கிழமையன்று சிவ பெருமானைக் கோயிலுள்வைத்து அதற்கு நிவேதனம் செய்தான்.

(3) கலியுகம் 4558ல் செந்நெல் விளையும் வயல்களையுடைய தென்காசி நகரில் கார்த்திகைமீ 5-ந்தேதி வியாழக்கிழமை மிருகசீரிடநாளில் மதுரை வேந்தனும் வடிவெழுதவொணாத பராக்கிரம மகிபனுமாகியபாண்டியன் மேருமலைபோன்ற ஒன்பது நிலைக் கோபுரத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினான்.

(4) கி. பி. 1457ல் (1379 - 78) கார்த்திகைமாதம் 5-ந்தேதி வியாழக்கிழமை சிம்ம முகூர்த்தத்தில், மிருகசீரிடநாளில் அரனருளால் கோபுரத்தின் அடிப்பகுதியில் ஒன்றைக் கட்டி முடித்தான்.

II கோயில் பாதுகாப்பைப் பற்றிப் பராக்கிரமன் கூறியன:-

(1) சேலேறியவயல் தென்காசி ஆலயம் தெய்வத்தின் அருளால் உண்டாகியது. என் செயலால் உண்டாயதன்று. இக் கோயிலை இன்னும் விரிவுபடுத்தி இக்கோயிலைக் காப்பவர்களது அடியில் வீழ்ந்து பணிவேன்.

(2) என்னைப் பணிகொண்டு மனத்தால் வகுக்கவும் முடியாது வகுத்த தென்காசி நாதன் கோயிலை ஆதரித்துக் காவல் செய்யும் அரசர் அடிகளைத் தாழ்ந்து வணங்கினேன்.

(3) பூந்தண் பொழில்புடை சூழ்ந்த தென்காசிக் கோயிலைப் புரப்பார்களை பராக்கிரமபாண்டியன் பணிவான்.

(4) தென்காசிக் கோயிலுக்குப் பழுது நேர்ந்தால் அதைச் செப்பனிட்டுப் புரப்பார்கள் யாராயிருந்தாலும் அவர்களைப் பராக்கிரம பாண்டியன் உலகோர் அறியப் பணிவான்.

(5) பொழிலணித் தென் காசிக்கோயிலை அரனருளால் அமைத்தேன். வலம்புரிச் சங்குகள் நிறைந்தகடல் சூழ்ந்த

உலகம் போற்ற அதனை அமைத்தேன். அன்புகொண்டு இதனைத் திரிசேர்விளக்கெனக் காப்பாரது அடியிரண்டும் என் முடிமேலன.

(6) சாத்திர முறைப்படி இங்கு யான் அமைத்தபூசை முறைகளை அன்புடன் நடாத்தி விசுவநாதன் கோயிலைப் புரக்கு மாறு என் குலத்தவர்க்குக் கூறினேன்.

III பராக்கிரம பாண்டியனின் பட்டப்பெயர்கள்:—

(1) செந்தாமரையாள் காந்தன் (2) பராக்கிரமக்கைதவன் (3) பராக்கிரம மகிபன் (4) மானகவசன் (5) கொற்கை வேந்தன் (6) பொன்னின் பெருமாள்.

IV தென்காசியின் சிறப்பு:—

"சென்னெல் வயற்றென் காசி" என்றும், "சேலேறிய வயற்தென்காசி" என்றும்,, "பூந்தண் பொழில் புடைசூழ தென்காசி" என்றும், "அரிசேர் பொழிலணித் தென்காசி" என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

V பராக்கிரமபாண்டியன் இறந்தஞான்று ஒரு புலவர் இரங்கிக் கூறியன:—

(1) பராக்கிரம பாண்டியன் குற்றமற்ற பக்தியையுடைய அறுபத்து மூவர் கூட்டத்தில் சென்று புகுந்தானோ? அன்றி தீதற்ற மதுரையில் சென்று புகுந்தானோ? அன்றி சிதம்பரத் தில்தான் சென்று புகுந்தனனோ? அதுவுமன்றி வேதத்திலோ? சிவலோகத்திலோ? விசுவநாதனின் இரு பாதத்திலோ? அவன் சென்று புக்கான் என்று மனமுருகக் கூறுகிறார்.

(2) "ஒன்பது நிலையையுடைய கோபுரமும், அதன் பக்கல் 11 தூண்கள் அமைந்த மண்டபமும் தென்காசியின் அன்றி வேறு எங்கேனும் அமைந்ததுண்டா?". இல்லை என்றவாறு.

கல்வெட்டு - 29

பராக்கிரம பாண்டிய தேவர் சாசனம்

''சுபமஸ்து. ஸ்வஸ்தி ஸ்ரீ புவநேக வீர சந்த்ரகுல ப்ரதீப கோஜடில வர்ம திரிபுவனச் சக்கரவர்த்தி கோ நேரின்மை கொண்டான் பெருமாள் அபிராமபராக்கிரமபாண்டியதேவர் நந்தனரான ஸ்ரீ பெருமாள் குலசேகர தேவரான பராக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு சகாப்தம் *கசாகூளஎ*-ல் (1467) மூன்ருவது விஸ்வாவஸு வருஷம் ஐப்பசிமாதம் முப்பதாந் தியதியும் அபர பட்சத்து ஏகாதசியும் சுக்கிர வாரமும் வைத்ருதி யோகமும் ஸிம்ஹ கரணமும் பெற்ற உத்திரத்து நாள் தென்னரி நாட்டுச் செங்கோட்டையில் உடையார் குல சேகரமுடைய நயினுற்கு தேவதானம் பாட்டமாக கொடுத்த நிலம் அரைமாவுக்கு நாம் சேர்த்துக் கொடுத்த நிலமாவது. மேற்படி நாட்டு மேற்படியூரில் மேற்படியார் அஞ்சாலியில் மேல்வாரம் தவிர்த்துக் கொடுத்த குளப்புரவு பதினென்ருங் கண்ணறு தடிஆறு நிலம் அரைக்காணி முந்திரிகை. பன்னி ரண்டாங் கண்ணறு தடிஎட்டு நிலம் அரைக்காணி முந்திரிகை. பதின்மூன்ருங் கண்ணறுதடி அஞ்சு நிலம் அரைக்காணி இதுவும் ஆகநிலம் அரைமாவும் நாளது முதலுக்கு நாம்கொள்ளும் முறைபாடு எப்பேர்ப்பட்டதும் நம் வரியிலார் கணக்கிலும் தவிர்த்து ஆசந்த்ர தாரவற் செம்பிலும் சிலேயிலும் வெட்டிக் கையாண்டுகொள்ளவும், துல்யம், பாற்க, இவை.........

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருவாங்கூர் இராச்சியத் தில் செங்கோட்டைச் சிவன் கோவிலினது கருப்ப இல்லின்*

தென்புறச் சுவரில் உள்ளது. செங்கோட்டை, திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசிக்கு அருகில் உள்ளது.

அரசன்:- குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- சகம் 1467 விசுவாவசு கி. பி. 1545.

குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன்:- இவன் திரிபுவனச் சக்கரவர்த்திகள், கோநேரின்மை கொண்டான் அபிராம பராக்கிரம பாண்டியனின் மகன் ஆவன். இவன் கி. பி. 1542ல் அரியணை ஏறினன்.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:- குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியதேவர், தென்னரி நாட்டுச் செங்கோட்டை, குலசேகரமுடைய நாயனர்க்கு முன் இருந்த நிலம் அரைமாவுடன், தானும் அரைமா நிலத்தைச் சேர்த்துக் கொடுத்துள்ளான்.

பொருள் விளக்கம்:-

சுபமஸ்து - நன்மை உண்டாகுக.

புவநேக வீரசந்த்ரகுலப்ரதீப - உலகத்திற்கு ஒரே வீரனும் சந்திரகுலத்துக்கு விளக்காய் உள்ளவனும்.

ஜடிலவர்மன் - சடையவர்மன் பாண்டியர்கள் தரித்துவந்த சடையவர்மன், மாறவன் - என்னும் பட்டங்களுள் ஒன்ருகும்.

கோநேரின்மை கொண்டான் - இது சோழ மன்னரும் பாண்டிய மன்னரும் தம்பெயர்களுக்கு முன் சிறப்பாகத் தரித்துக்கொள்ளும் ஒரு பட்டப்பெயர். "தனக்கு ஒப்பான அரசனை இல்லாதவன்" என்பது பொருள். இவ்வாறே சேரரில் ஒரு கிளையினரான மழவர்கள் தங்களை "விசய ஒப்பில்லாத மழவர்" என்று கூறிக்கொள்வதுண்டு.

பெருமாள் அபிராம பராக்கிரம பாண்டிய தேவர் - இது குலசேகர பாண்டியனுடைய தந்தையின் பெயர், பெருமாள் என்பது 'உடையார்' என்பது போல அரசர்களுக்கு முன் சிறப்பாக வழங்கும் சொல்.

நந்தனர் - மகனர்.

சகாப்தம் 1467ல் மூன்றுவது - இங்கு 'மூன்றுவது' என்பது பராக்கிரம பாண்டியன் அரியணை ஏறிய மூன்றும் ஆண்டில் சகாப்தம் 1464 ஆகும். எனவே அவன் அரியணை ஏறியது சகாப்தம் 1464 ஆகும். (கி. பி. ஆண்டு 1464+78=1542)

விஸ்வாவஸு - விசுவாவசு ஆண்டு. இது அறுபது ஆண்டுகளுள் முப்பத்தொன்பதாவது. (39)

வைத்ருதி யோகம் - 27 யோகங்களுள் ஒன்று.

ஸிம்ஹகரணம் - சிம்ம லக்னம். 11 கரணங்களுள் ஒன்று.

தென்வாரி - பாண்டி நாட்டுப் பிரிவுகளில் ஒன்று. செங்கோட்டை முதலான ஊர்கள் இந்நாட்டில் அடங்கியிருந்தன.

உடையார்குலசேகரமுடைய நாயனர்-இது செங்கோட்டைச் சிவன் கோயில் சுவாமியின் பெயர்.

தேவதானம் பாட்டமாக - வரியைக் கோயிலார் வசூல் செய்து கொள்வதாக.

அஞ்சாலி - நெல்.

அரை மாவுக்கு - அரைமா நிலத்தோடு.

கண்ணுறு - சிறு வாய்க்கால். நன்செய்ப்பிரிவு எனினுமாம்.

மா - 100 குழி நிலம்.

நாம் - இங்கு குலசேகரபாண்டியனைக் குறிக்கும்.

மேற்படி நாட்டு, மேற்படியூர், மேற்படியார் - தென்னரி நாட்டு, செங்கோட்டை, உடையார் குலசேகர நயினர்.

மேல்வாரம் - விளைச்சலிலிருந்து சொந்தக்காரருக்குக் கொடுத்தற்குரிய தானியம.

குளப்புரவு - குளத்தின் நீர் பாய்ந்து சாகுபடியாகும் நிலம்.

தடி - வயல் (நிலம்)

பதினொன்றாங் கண்ணாறு தடி - பதினோராவது கண்ணாற்று ஆறாவது வயல்.

அரைக்காணி $\frac{1}{160}$; முந்திரிகை $\frac{1}{320}$.

நாளது முதலுக்கு - நாளது தேதிமுதல் (ஆண்டு மூன்றாவது முதல்)

நாங்கொள்ளும் முறைபாடு - நாம் வாங்கும் வரி (முறைபாடு - அரசிறை)

ஆசந்த்ர தாரவற் - சந்திரனும் நக்ஷத்திரமும் உள்ள வரையில்.

தாரவம - தாரகை - நக்ஷத்திரம.

கையாண்டு - அனுபவித்து.

கல்வெட்டு - 30

திருவகத்தீஸ்வரமுடையார் தேவதான இசைவுச் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவர்க்கு யாண்டு 42வது தனுர் நாயற்று, அபரபட்சத்து, துவாதசியும், வெள்ளிக் கிழமையும் பெற்ற அனுஷத்து நாள், கேரளசிங்க வளநாட்டு

அதளையூர் நாட்டுத் தேனூற்றுப் போக்குச் சூரைக்குடி பொன்னன் அழகிய பெருமாளேன் நியமப்பற்றுக் கல் வாயில் நாட்டு நாட்டவர் பக்கல் நான் விலைகொண்டு நாட்டவர் பக்கல் இறையிலிபண்ணிக்கொண்ட நெல்வாசல் பால் காடவதரையர் குடிக்காடு வளையிற் சுற்று முற்றும் கல்வாயில் நாட்டு நெல்வாசல் உடையார் திருவகத்தீஸ்வர முடையநாயனூற்கு அமுதுபடி உள்ளிட்டவிஞ் சனங்களுக்கு தேவதானமாகக் கொடுத்த காடவதரையர் குடிக்காடு வித்தலி கூழிலி ஏரிலியாகக் குடிநீங்காக்காணியாக நான் உழுது இந்நாயினூர்க்குப் பசானம் நாலிலொன்றுங் கோடை ஐஞ்சி லொன்றுங் கரும்பு மஞ்சள் அடைவாழை ஆறில் ஒன்றுமாக விழுக்காடி இடுவெனுகவும். இப்படி உழு மிடத்துத் தேவகன்மிகள் ஸ்ரீ காரியஞ் செய்வார்களுக்குத் தேவர் அரசு கண்காணி மீசு குறுணியுமிட்டு இவர்கள் கண்காணிப்படிப்பரிமாறுவதாகவும் கொட்டர், கூழரி உழமைச்சூடு குடிக்கலி பறையன் கண்டபடி பெறுவேனு கவும். இப்படி சம்மதித்து இன்னுயனூர்க்கு இக்குடிக்காடு சந்திராதித்தவல் செல்லக் கல்வெட்டிக் கொடுத்தென். அழகிய பெருமாளேன் உடையார் திருவகத்தீஸ்வரமுடைய நாயனூர்க்கு இப்படிக்கு அழகிய பெருமாள் எழுத்து. இப்படிக்கு நாட்டுக்கு நாட்டுக் கணக்கு மயிலேறும் பெருமாள் சிவஞான தேவன் ஆன உருப நாராயண மூவேந்த வேளான் எழுத்து.

கல்வெட்டு இருக்குமிடம்:- *திருமய்யம் தாலூகா நெய்வாசல் என்னும் ஊரிலுள்ள அகஸ்தீஸ்வரர் கோயில் கருப்ப இல்லின் வடபுறச் சுவர்.*

அரசன்:- *சடையவர்மன் வீரபாண்டியன்.*

கல்வெட்டுத் தோன்றிய காலம்:- *42-ஆவது ஆட்சி யாண்டு கி. பி. 1337.*

சடையவர்மன் வீரபாண்டியன்:- இவன் கி. பி. 1296 முதல் கி. பி. 1342 வரை அரசாண்டனன் என்று கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

கல்வெட்டால் அறியப்படும் செய்தி:-

வீரபாண்டியனின் ஆட்சியாண்டு 42-ல் கேரள சிங்க வளநாட்டு அதளையூர் நாட்டுத் தேறைற்றுப் போக்குச் சூரைக்குடிப் பொன்னன் அழகிய பெருமாள் என்பவன் நெய்வாசலின் பக்கத்திலுள்ளகாடவதரையர் குடிக்காட்டைக் கல்வாயில் நாட்டு நாட்டவர் பக்கல் விலைக்குக் கொண்டு நெல்வாசல் உடையார் திருவகத்தீச்சுரமுடைய நாயனார்க்கு அமுதுபடி உள்ளிட்ட வெஞ்சனங்களுக்கு இறையிலிதேவதானமாக ஆக்கி அந் நிலத்தைத் தானே குடிநீங்காக் காணியாகக்கொண்டு பயிரிட்டுப் பசானத்தில் நாலில் ஒன்றும் ($\frac{1}{4}$), கோடையில் ஐந்தில் ஒன்றும், ($\frac{1}{5}$) கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை முதலானவைகளுக்கு ஆறிலொன்றுமாகக் ($\frac{1}{6}$) கோயிலுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். மற்றும் தேவகன்மிகளுக்கும் ஸ்ரீ கார்யஞ் செய்வானுக்கும் ஆளுக்கு ஒரு குறுணி நெல் தருவதாகவும் ஒப்புக்கொண்டான்.

பொருள் விளக்கம்:-

தனுர் நாயற்று - மார்கழி மாதத்து.

அபர பக்ஷம் - தேய்பிறை.

கேரள சிங்க வளநாடு - பாண்டியநாட்டு வளநாடுகளுள் ஒன்று. இஃது இப்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது.

நான் - இங்கே அழகிய பெருமாளைக் குறிக்கும்.

வளையில் - எல்லை முழுதும்.

வெஞ்சனம் - நிவேதனப் பொருள்கள்.

8283

இறையிலி பண்ணிக்கொண்ட - வரி இல்லையாகச் செய்து கொண்ட. (A[illegible]ax - free gift)

நெல்வாசல் - நெய்வாசல்.

வித்திலி - விதைப்பார் இல்லாமல்.

கூழிலி - பயிரிடுவார் இல்லாமல்.

ஏரிலி - ஏர் உழுவார் இல்லாமல்.

கோடை - கார் பயிரிடுங் காலம். அடை - வெற்றிலை.

குடி நீங்காக் காணி = பயிரிடும் உரிமை உடைய நிலம்.

அரசு கண்காணி - அரசனது ஆணையின் வண்ணம மேற் பார்வை செய்பவர்களுக்குக் கொடுக்கும் பொருள்.

கண்காணிப்படி - கண்காணிப்பவர்களுக்குக் கொடுக்கப் படும் நெல் முதலான பொருள்.

கொட்டர் - பறை கொட்டுபவர்.

கொட்டர், கூழரி, உழமைச் சூடு, குடிக்கலி, பறையன் - இவர்கள் ஊரில் கடமை பெறுபவர்.

TAMIL SANGAM